பக்கங்கள்: பன்னிரண்டு+IV=16

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 27 சனிக்கிழமை (13-09-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:289

வடக்குக் கடலில் அத்துமீறி நுழைந்த

## இந்தியப் படகோட்டிகள் மீது மேல் நீதிமன்றத்தில் வழக்கு?

யாழ்ப்பாணம், செப்.13

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி ஊடுருவியவேளை பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்கள்மீது மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்வது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

கடந்தமாதம் வடக்குக் கடற்பகுதிக்குள் அத்துமீறி ஊடுருவி மீன்பிடித்த இந்திய மீனவர்களை பொதுமக்களும கடற்படையினரும் பிடித்திருந்தனர்.

இந்த மீனவர்கள் ஊர்காவற்றுறை, மல்லாகம் நீதிமன்றங்களில் பொலீஸாரால் ஆஜர்செய்யப்பட்டிருந்தனர்.

இந்த மீனவர்களில் படகோட்டிகள் தவிர்ந்த ஏனைய மீனவர்களை விடுதலை செய்த நீதிவான்கள், அந்த மீனவர்களை இலங்கைக் கடற்படை மூலம் இந்தியக் கடற்படையிடம் கையளிக்கும்படி உத்தரவிட்டிருந்தனர்.

படகோட்டிகள் தொடர்ந்தும் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது இந்த விடயம் சட்டமா

(12ஆம் பக்கம் பார்க்க)

அரசு பொய் கூறுகிறது; இராணுவ அறிக்கைகள் மறைக்கப்பட்டதேன்?

## திருமலை பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து பிரதமருக்கு ஜனாதிபதி கடிதம் எழுதுவார்

### பொ.ஐ.மு. ஊடகப் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு,செப்.13

திருகோணமலையில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என்று அரசு பொய் கூறுகிறது. இங்கு ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பாக அடுத்த ஒருசில தினங்களில் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமருக்கு விரிவான கடிதம் ஒன்றை அனுப்பவிருக்கிறார். அச்சுறுத்தல் பற்றிய வெளிநாட்டு இராணுவக் குழுவினதும், முப்படைத் தளபதிகளினதும் அறிக்கைகளையும் ஜனாதிபதி தனது கடிதத்துடன் இணைத்து அனுப்புவார்.

பொ.ஐ.முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம நேற்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இவ்வாறு கூறினார்.

ஜனாதிபதி தலைமையிலான பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் திருகோணமலையில் ஏற்பட்டுள்ள அபாய நிலை குறித்து ஆராயப்படுகின்ற போதிலும் அச்சபையின் ஓர் உறுப்பினரான பிரதமர் கூட்டத்திற்குச் சமுகமளிப்பதில்லை எனவும் குறிப்பிட்ட அமுனுகம மேலும் கூறியதாவது:-

கடந்த வருடம் ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் அமெரிக்காவின் பசு

(12ஆம் பக்கம் பார்க்க)

# உறுதி அளித்த 450 கோடி டொலர்கள் உதவி கிடைக்கும்; அதில் மாற்றமில்லை!

## கொழும்பு கூட்டத்தின் பின்னர் யசூஷி அகாஷி அறிவிப்பு விடுதலைப் புலிகள் பங்குபற்றாதது குறித்து ஏமாற்றம்

கொழும்பு,செப்ரெம்பர் 13

**சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அது உதவி வழங்கும் நாடுகளுக்குத் திருப்தி அளித்துள்ளது. எனவே, டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் உறுதியளிக்கப்பட்டபடி இலங்கைக்கு 450 கோடி அமெரிக்க டொலர்கள் வழங்கப்படும். அதில் மாற்றம் ஏதும் இல்லை.என்றாலும், சமாதான முயற்சிகளில் காணப்படும் முன்னேற்றத்தைப் பொறுத்ததாகவே உதவி வழங்குவது அமைய வேண்டும் என்று டோக்கியோப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதும் மாநாட்டில் உறுத்திப்படுத்தப்பட்டது.**

**- இப்படி நேற்றுக் கொழும்பில் நடந்த கூட்டத்தின் பின்னர் ஜப்பானின் விசேட தூதுவர் யசூஷி அகாஷி தெரிவித்தார். கூட்டத்தில் விடுதலைப் புலிகள் கலந்துகொள்ளாதது தமக்கு ஏமாற்றத்தை அளித்ததாகவும் அவர் கூறினார்.**

ஒஸ்லோ மாநாட்டில் இணங்கப்பட்டவாறு, ஐக்கிய இலங்கைக்குள சமஷ்டி அடிப்படையிலான நிரந்தரத் தீர்வைக்கான இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் சமாதான முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டிருப்பதையும், சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க தொடர்ந்து முயற்சி மேற்கொண்டிருப்பதையும் உலக நாடுகளும், சர்வதேச அமைப்புக்களும் வரவேற்றிருக்கின்றன. இரு தரப்பினரும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை உறுதி யாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அந்த நாடுகளும் அமைப்புக்களும் கோரியிருக்கின்றன என்றும் அகாஷி குறிப்பிட்டார்.

டோக்கியோ மாநாட்டைத் தொடர்ந்து முதலாவது மீளாய்வுக் கூட்டம் நேற்று யசூஷி அகாஷி தலைமையில் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றினதும், உலக வங்கி, சர்வதேச நாணயச்சபை உட்பட பல சர்வதேச அமைப்புக்களினதும் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

வடக்கிலும் கிழக்கிலும் அவசர மனிதாபிமான, புனர்வாழ்வு உதவிகள் வழங்கப்படுவதன் அவசியம் இக் கூட்டத்தில் மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

இலங்கை அரசின் சார்பில் அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, ரவூப் ஹக்கீம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தின் பின் தூதுவர் யசூஷி அகாஷி சில நிமிடங்கள் செய்தியாளர்களிடம் பேசினார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

### கண்டியில் ஜனாதிபதி ஆலோசனை

கொழும்பு,செப்.13

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த புதன், வியாழன் ஆகிய இரு தினங்களில் கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் முக்கிய ஆலோசனைகள் மேற்கொண்டார் என அறியப்படுகிறது.

பொது ஜன ஐக்கிய முன்னணியின் முக்கிய தலைவர்கள சிலரை அங்கு சந்தித்த ஜனாதிபதி சந்திரிகா, எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தார் எனவும் தெரியவருகிறது.

முன்னாள் அமைச்சர்களான லக்ஷ்மன் கதிர்காமர், மங்கள சமரவீர, சுதந்திரக்கட்சி பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன ஆகியோருடனேயே ஜனாதிபதி ஆலோசனைகள் நடத்தினார் எனவும், எதிர்வரும் நாள்களில் மேற்கொள்ளப்படலாம் என எதிர்பார்க்கப்படும் அரசியல் தீர்மானங்கள் தொடர்பானவையே இந்த ஆலோசனைகள் எனவும் அறிய வருகிறது. (ஐ)

## கிழக்கின் பாதுகாப்புக்காக அதிரடிப் படையின் புதிய பிரிவு

### இத்தாலி உதவியுடன் விரைவில் அமைப்பு

கொழும்பு, செப்.13

கிழக்கில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள புதிய படைப்பிரிவு ஒன்று (Para Jumping unit) உருவாக்கப்படவிருக்கின்றது. இந்தப் பிரிவை அமைக்க இத்தாலிய அரசு உதவ முன்வந்துள்ளது.

விசேட அதிரடிப்படையின் தளபதியாக அண்மையில் பதவியேற்ற பிரதிப் பொலீஸ்மா அதிபர் நிமால் லியூஜ இதனைத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அவர் தமது அலுவலகத்தில் நடத்திய செய்தியாளர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அகாஷி கல்முனையில் இன்று காலை முஸ்லிம் பிரதிநிதிகளுடன் சந்திப்பு

### பிற்பகலில் அம்பாறைக்கு விஜயம்

இலங்கைக்கான ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூஷி அகாஷி இன்று சனிக்கிழமை அம்பாறை மாவட்டத்துக்கு விஜயம் செய்கிறார்.

காலை 9.30 மணிக்கு கல்முனையில் அமைச்சர் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் பிரதிநிதிகளை அவர் சந்திப்பார்.

காலை 10.30 மணிக்கு கல்முனை சமாதானக் குழுவினரை அவர் கல்முனை பிரதேச செயலக கேட்போர்கூடத்தில் சந்திக்க விருக்கிறார். தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளைக் கொண்ட சமாதானக் குழுவுடனான சந்திப்பிற்கு அமைச்சர் ஹக்கீம், சந்திரநேரு எம்.பி. ஆகியோரும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அகதிகளை திருப்பி அனுப்ப தமிழக அரசாங்கம் நடவடிக்கையா?

சென்னை,செப்.13

தமிழகத்தில் சுமார் 106 முகாம்களில் வசிக்கும் 42 ஆயிரம் இலங்கை அகதிகளை உடனே இலங்கைக்குத் திருப்பி அனுப்பி வைக்குமாறு மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

பிரதமர் வாஜ்பாயின் பாதுகாப்பு ஆலோசகர் பிரஜேஷ் மிஸ்ராவை தமிழக அரசின் தலைமைச் செயலாளர் லட்சுமி பிரானேஷ் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினார்.

மத்திய அரசின் அழைப்பை அடுத்து அவர் நேற்றுமுன்தினம் அவசரமாக டில்லி சென்றார் என்றும் - அவர் மிஸ்ராவைச் சந்தித்துப் பேசினார் என்றும் முன்னர் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், தலைமைச் செயலாளர் தாம் விரும்பியே மிஸ்ராவை சந்தித்தார் என்று தெரிகிறது. அப்போது தமிழகத்தில் சுமார் 106 முகாம்களில் வசிக்கும் 42 ஆயிரம் இலங்கை அகதிகளை உடனே இலங்கைக்குத் திருப்பி அனுப்பி வைக்குமாறு மத்திய அரசை தமிழக அரசின் சார்பில் வலியுறுத்தினார் என்று தெரிகிறது.

இந்தச் சந்திப்புக் குறித்து மத்திய அரசோ, மாநில அரசோ விவரம் எதையும் தெரிவிக்கவில்லை. இன்று சென்னை வரும் பிரதமருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து இந்தச் சந்திப்பின் போது ஆலோசிக்கப்பட்டதாகக் கருதப்பட்டது.

ஆனால், தமிழகத்தில் அகதிகளாக வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழர்களைத் திருப்பி அனுப்புவது குறித்தே நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டதாக டில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

### போராளிகளின் நினைவு நாள் நிகழ்ச்சி

மட்டக்களப்பு,செப்.13

லெப். கேணல் சிவகாமி உட்பட ஏழு மாவீரர்களது இரண்டாம் ஆண்டு நினைவு நிகழ்ச்சி நேற்று மட்டக்களப்பு வாகரையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு - பொலன்னறுவை எல்லைப் பகுதியில் வேவு பார்க்கச் சென்ற சமயம் ஸ்ரீலங்காப் படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலின் போதே லெப். கேணல் சிவகாமி உட்பட ஏழு போராளிகள் வீரச்சாவை

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# விவேகானந்தர் வரலாறு கூறும் கண்காட்சி பாடசாலைகளில்


## பருத்தித்துறை இராமகிருஷ்ண மடம் நடத்துகிறது

சுவாமி விவேகானந்தரின் வரலாற்றைச் சித்திரிக்கும் 'எழுந்திரு விழித்திரு' என்ற தலைப்பிலான கண்காட்சி குடாநாட்டிலுள்ள பாடசாலைகளில் பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண மடத்தினால் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்தியாவின் மயிலாப்பூர் இராமகிருஷ்ண மடத்தின் ஆதரவுடன் இந்தக கண்காட்சி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து எடுத்துவரப்பட்ட சுவாமி விவேகானந்தரின் வரலாற்றை உள்ளடக்கிய 40 படங்கள் இந்தக் கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன.

இக்கண்காட்சி வேம்படி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, நெல்லியடி மகாவித்தியாலயம், வல்வை மத்திய மகாவித்தியாலயம், விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம், உசன் இராமநாதன் மகாவித்தியாலயம், காரைநகர் தியாகராஜா மகாவித்தியாலயம், யாழ். இந்து மகளிர் கல்லூரி என்பவற்றில் நடத்தப்பட்டுள்ளன. ஏனைய பாடசாலைகளிலும் இதனை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.



நேற்று யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற சுவாமி விவேகானந்தரின் வரலாற்றைச் சித்திரிக்கும் புகைப்படக் கண்காட்சியினை பார்வையிடும் அப்பாடசாலை மாணவிகள்.

சுவாமி விவேகானந்தரின் படத்தை அச்சிட்டு அவரின் வரலாற்றை தமிழிலும், ஆங்கிலத்திலும் பதித்து இலங்கையிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 40 படங்கள் வீதம் சென்னை மயிலாப்பூர் ஸ்ரீராமகிருஷ்ண மடம் அனுப்பி வைத்ததாகத் தெரிவித்தார்.

# மீண்டும் தாக்கப்பட்டதாக இளைஞர் முறைப்பாடு

## சிறைச்சாலைக்குச் சென்று நீதிவான் விசாரணை

யாழ்ப்பாணம்,செப்.13

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட சமயம் தான் மீண்டும் தாக்கப்பட்டதாக நீதிமன்றத்தில் இளைஞர் ஒருவர் முறையிட்டார். அதையடுத்து யாழ்நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா நேற்று யாழ் சிறைச்சாலைக்குச் சென்று விசாரணை மேற்கொண்டார்.

மதகுரு ஒருவர் செய்த முறைப்பாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட ஜெயக்குமார் என்ற இளைஞர் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்தார். அவரை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி யாழ். மேலதிக நீதிவான் பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டிருந்தார். தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம் இந்த இளைஞன் தாம் சிறைச்சாலை அதிகாரிகளால் தாக்கப்பட்டதாக முறைப்பாடுசெய்தார். அதனையடுத்து அவரைப் பாதுகாப்பாக வைக்கும்படி சிறைச்சாலை அதிகாரிகளுக்கு நீதிவான் முன்னர் உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில் -

பிரஸ்தாப இளைஞர் சிறைச்சாலையில் மீண்டும் தாக்கப்பட்டுள்ளார் என்றும் -

அவரைப் பிணையில் விடுவிக்குமாறும் - அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் நேற்று மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா, பிரஸ்தாப இளைஞனின் முறைப்பாட்டை விசாரிக்க நேரடியாக சிறைச்சாலைக்கு நேற்று மாலை சென்றார்.

இந்த இளைஞன் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறைக் கூடத்தில் அவரோடு தடுத்து வைக்கப்பட்டுள்ள 31பேரின் வாக்குமூலங்களை நீதிவான் பதிவுசெய்தார்.

குறிப்பிட்ட இளைஞன் தெரிவித்த முறைப்பாடு ஆதாரமற்றது என்பதை சாட்சிகள் மூலம் அறிந்த நீதிவான், அவரை தெல்லிப்பழையில் உள்ள புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்குமாறு உத்தரவிட்டார். (ஐ-3)

## மீளக்குடியமர்ந்த மக்களுக்கு உதவி

தென்மராட்சி,செப்.13

வன்னி மற்றும் பிறமாவட்டங்களில் தங்கியிருந்துவிட்டு தென்மராட்சிப் பிரதேசத்தின் மட்டுவில் கிழக்கு, சந்திரபுரம், மட்டுவில் வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐநா. தூதரகம் உணவுப் பண்டமல்லாத பொருள்களை வழங்கியுள்ளது.

அண்மையில் மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயத்தில் வைத்து சமையல் பாத்திரங்கள், பிளாஸ்ரிக் வாளி, குவளைகள், கோப்பைகள், பாய் உட்பட பல பொருள்களை தூதரகப் பிரதிநிதிகள் வழங்கினர். (ஒ-117)

# குப்பையைக் கூட்டி எரித்தபோது மர்மப்பொருள் வெடித்து சிறுவர் காயம்

## அல்லிப்பளையில் சம்பவம்

மீளக்குடியமர்ந்த காணியைத் துப்புரவு செய்து குப்பையை எரித்த போது மர்மப்பொருள் வெடித்தது. இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சிறுவர்கள் காயமடைந்தனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் பளை, அல்லிப்பளையில் இடம்பெற்றது.

கிளாலியைச் சேர்ந்த துரைசிங்கம் குயின்ரன் (வயது 14), துரைசிங்கம் நிருஷன் (வயது 8) ஆகிய இருவருமே இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களாவர். இவர்களிருவரும் காயமடைந்த நிலையில் பளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டனர். 2000 ஆம் ஆண்டு வரை படையினர் பிரதானமுகாம் அமைந்திருந்த பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.(ஒ-117)

# போராளி துன்புறுத்தப்பட்ட சம்பவம்: பொலீஸ் அதிகாரிகள் வருத்தம் தெரிவிப்பு

## மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம்

யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற போராளியை முகமாலையில் வைத்துக் கைதுசெய்து துன்புறுத்தியமைக்கு சுன்னாகம் மற்றும் முகமாலை பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் வருத்தம் தெரிவித்தனர்.

முகமாலைச் சோதனைச் சாவடியில் தான் கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்பட்டதாக ஜெகன் என்ற போராளி கடந்த 2ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார். அது தொடர்பான விசாரணை நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

முறைப்பாடு செய்த போராளியும் முகமாலைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியும், சுன்னாகம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் இந்த விசாரணைகளில் பங்கேற்றனர்.

கொலைச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய நபர் ஒருவரைத் தேடும் நடவடிக்கையின் போதே போராளி தவறுதலாகக் கைதுசெய்யப்பட்டதாக முகமாலைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி அங்கு தெரிவித்தார்.

இதற்காகத் தாம் மனம் வருந்துவதாகவும் தவறுதலாக இடம்பெற்ற இந்தச் சம்பவம் போன்று இனி இடம்பெறாது என்றும் உறுதியளித்ததாகவும் சுன்னாகம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.(ம-8-ரி)

### வெகுஜன ஒன்றியத்தின் கூட்டம்

வலி. வடக்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் நடத்தும் விசேட கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தெல்லிப்பழை ப.நோ. கூ. சங்க தலைமைச்செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயத்தால் அப்பகுதி பொது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயப்படவுள்ளதாகவும், பல்வேறு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளதாகவும் வலி.வடக்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ஐ-150).

### பாடசாலைகளுக்கு தற்காலிக கொட்டகைகள்

மருதங்கேணிக் கோட்டத்தில் உள்ள மூன்று பாடசாலைகளுக்கு தற்காலிகக் கொட்டகைகளை அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான நிதியினை அகதிகளுக்கான ஐநா. தூதரகம் வழங்கவுள்ளது.

தளையாடி றோ.க.த.க பாடசாலை, செம்பியன்பற்று அ.த.க பாடசாலை, மாமுனை அ.த.க பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கே தற்காலிகக் கொட்டகைகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. (ஐ-182)

# வெலிக்கடைக் கைதி செல்போன் மூலம் பொலீஸ் அதிகாரிக்கு மிரட்டல்

## தேடுதலில் ஐந்து செல்போன்கள் கண்டுபிடிப்பு

கொழும்பு,செப்.13

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் பெரும குற்றச் செயல்களில் ஈடுபட்ட ஒரு கைதி பொலீஸ் அதிகாரி ஒருவருக்கு மிரட்டல் விடுத்தாராம்.

பொலீஸ் தலைமையகத்திலுள்ள அந்த அதிகாரிக்கு தன்வசமிருந்த செல்போன் மூலமே அவர் மிரட்டல் விடுத்திருக்கிறார்.

இதனையடுத்து சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் ஐந்து செல்போன்கள் கைதிகள் வசமிருந்து கைப்பற்றப்பட்டன. இந்த செல்போன்களை சிறைச்சாலைக்குள் எடுத்துச்செல்ல உதவிய சிறைக்காவலர்கள் குறித்து ஒழுங்கு விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

தன்னைப்பற்றி விசாரணை நடத்தப்படக் கூடாது என்று அந்தக் கைதி, பொலீஸ் அதிகாரிக்கு மிரட்டல் விடுத்தாராம்.

கைப்பற்றப்பட்ட செல்போன்கள் மூலம் தொடர்புகொள்ளப்பட்ட தொலைபேசி இலக்கங்கள் குறித்து விசாரணை நடத்தும் பொறுப்பு குற்றப்புலனாய்வுப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

# ரெலிகொம் ஊழியரிடமிருந்து அபகரிக்கப்பட்ட மோ.சைக்கிள் வீடு ஒன்றில் கைவிடப்பட்டது!

## கொள்ளையடித்தவர்கள் தப்பிச் சென்றனர்

யாழ்ப்பாணம்,செப்.13

கடந்த புதன்கிழமை அதிகாலை ரெலிகொம் ஊழியரைத் தாக்கி அவரது மோட்டார் சைக்கிளைக் கொள்ளையடித்துச் சென்றதாகக் கருதப்படும் மூவரும் உடுப்பிட்டிவீதியிலுள்ள ஒரு வீட்டில் அதனைக் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இது குறித்து அந்த வீட்டின் உரிமையாளர் தெரிவித்ததாவது:-

"அதிகாலை 5.30 மணியளவில் எனதுவீட்டு 'கேற்' பலத்த சத்தத்துடன் திறக்கப்பட்டது. மோட்டார்சைக்கிளின் இரைச்சல் சத்தமும் கேட்டது.

"பயத்தில் நான் உடனடியாக வெளி 'லைற்' றைப் போட்டுவிட்டு வெளியே வந்தேன். வீட்டுக் கேற் அருகே மூவர் நின்றிருந்தனர். அவர்களை விசாரித்த போது தாம் சாவகச்சேரியில் இருந்து சந்நிதி கோயிலுக்கு செல்வதாகவும் பாதை மாறி வந்து கேற்றுடன் மோதிவிட்டதாகவும் தெரிவித்தனர்.

எனினும், அவர்களில் சந்தேகம் கொண்ட நான் மோட்டார் சைக்கிள் ஆவணங்களைக் காட்டுமாறு கேட்டதுடன் அருகில் உள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகத்துக்கு வருமாறு கேட்டேன். உடனே அவர்கள் அங்கிருந்து ஓடிவிட்டனர் - என்றார்.

அவர்களால் கைவிடப்பட்ட மோட்டார் சைக்கிள் விடுதலைப் புலிகளின உடுப்பிட்டி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது. (ம-178)

# காஞ்சிரங்குடாவில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு அடிப்படை வசதிகள் இல்லை

## ஒரேயொரு கிணற்றிலும் எலும்புக்கூடுகள்

'புலிகள்-அரசு சமாதான உடன்படிக்கைக்குப் பின்னர் நாம் தற்போது மீளக்குடியமர்ந்துள்ளோம். இங்கு எந்த அடிப்படை வசதியும் எமக்குச் செய்து கொடுக்கப்படவில்லை. தண்ணீர் இல்லை; அருகிலுள்ள ஒரேயொரு கிணற்றிலும் எலும்புக்கூடுகள் கிடக்கின்றன. எனவே, அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தாருங்கள்."

- இவ்வாறு கோருகின்றனர் காஞ்சிரங்குடா இந்து வணக்குறவர்கள். திருக்கோயில் கள்ளியந்தீவு அகதி முகாமில் கடந்த 13 வருடங்களாகத் தங்கியிருந்த 46 வணக்குறவர் குடும்பங்கள் அண்மையில் தமது சொந்த இடத்தில் மீண்டும் குடியமர்ந்துள்ளன.

பனை ஓலைகளாலும், பொலித்தீன் சீலைகளாலும், சாக்குகளாலும் அமைக்கப்பட்ட சிறு குடிசைகளில் வாழ்ந்து வரும் இந்த குறவர்களின் நிலை பற்றி ஆராய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்திய ஆணையாளர் இரா.மனோகரன், இடம்பெயர்ந்தோர் விவகார திட்ட அதிகாரி தகபிலன் ஆகியோர் காஞ்சிரங்குடா சென்றிருந்தனர்.

# தனக்கு அழைப்பு விடுக்காததால் ஓர் அமைச்சருக்கு வந்த ஆத்திரம்!

## சோதனைச் சாவடி திறப்பு நிறுத்தப்பட்டது

தெஹிவோவிட்ட நகரில் புதிதாக அமைக்கப்பட்ட பொலீஸ் சோதனைச் சாவடி ஒன்று, அமைச்சர் ஒருவருக்கு ஏற்பட்ட ஆத்திரத்தால் திறக்கப்படுவது நிறுத்தப்பட்டது. சோதனைச் சாவடி திறப்பு விழாவுக்கு தான் அழைக்கப்படாததாலேயே அந்த அமைச்சருக்கு ஆத்திரம் ஏற்பட்டிருக்கின்றது.

கடந்த புதன்கிழமை அந்த சோதனைச்சாவடி திறந்து வைக்கப்படவிருந்தது. திறப்பு விழா குறித்து இறுதி நேரத்திலேயே அமைச்சர் அறிந்துகொண்டார்.

உடனே, அப்பிரதேச பொலீஸ் தலைமையக பொறுப்பதிகாரியுடன் தொடர்புகொண்ட அவர், சோதனைச் சாவடியை திறந்துவைக்க வேண்டாம் என்று கூறியிருக்கிறார்.

தனக்கு அழைப்பு விடாமல் தனது பிரதேசத்தில் எவ்வாறு சோதனைச் சாவடியைத் திறக்க முடியும் என்று அவர் பொலீஸ் அதிகாரிகள் மீது சீறிப் பாய்ந்திருக்கிறார்.

அமைச்சரை அழைக்கும் அளவுக்கு ஒரு முக்கிய நிகழ்ச்சியல்ல அது என்று கூறியிருக்கும் பொலீஸ் அதிகாரிகள், அமைச்சரையும் அழைத்து சோதனைச் சாவடியை வேறு ஒரு தினத்தில் திறந்துவைப்பதெனத் தீர்மானித்திருக்கின்றனர்.

# இரண்டு மாணவர்களை புலிகள் பெற்றோரிடம் திருப்பி ஒப்படைப்பு

அம்பாறை மாவட்டத்தில் தமது அமைப்பில் இணைய வந்த இரண்டு பாடசாலை மாணவர்களை விடுதலைப் புலிகள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு பிரதிநிதி செல்வி றெக்கி சேயர் முன்னிலையில் பெற்றோர்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

இச் சிறுவர்களை நேற்று பிற்பகல் 3.40 மணியளவில் விடுதலைப் புலிகளின் அக்கரைப்பற்று அலுவலகத்தில் வைத்து அம்பாறை மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர் தகுபிலன் பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளார்.

18 வயதுக்குக் குறைந்த இச்சிறுவர்கள் இரண்டு பேரும் அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## இஸ்ரேலியப் படைகளை நெருங்கவிடாமல்

# அரபாத்தின் தலைமையகத்தில் 24 மணி நேரமும் கடும் காவல்!




**யஸீர் அரபாத்தை பாதுகாப்பதற்காக ரமழாவில் கூடியுள்ள பலஸ்தீனர்களையும் அவர்களுக்கு மகிழ்ச்சியுடன் கையசைக்கும் அரபாத்தையும் படங்களில் காணலாம்.**

யஸீர் அரபாத்தின் தலைமையகத்தைச் சுற்றி பலஸ்தீனரால் 24 மணித்தியாலமும் கடும் காவல் போடப்பட்டிருக்கிறது.

இஸ்ரேல் அதிகாரிகள் ஒன்றுகூடி, அரபாத்தை நாட்டைவிட்டு விரட்டியடிக்க கொள்கையளவில் தீர்மானித்திருப்பதையடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரபாத்தை நாடுகடத்தும் நோக்கில அல்லது அவரை தனிமைப்படுத்தும் நோக்கில் இஸ்ரேலியப் படையினர் ரமழாவிற்கு வந்தால் அவர்களை அரபாத்தை நெருங்கவிடாமல் தடுப்போம் என்று பலஸ்தீனர்கள் சூளுரைத்துள்ளனர் அத்துடன், அரபாத்தை நாடுகடத்த இஸ்ரேல் தீர்மானித்திருப்பதற்கு பலஸ்தீன அதிகாரிகள் கடும் கண்டனமும் தெரிவித்துள்ளன.

'எங்களிடம் டாங்கிகள் இல்லை. ஆனால், திடசங்கற்பம் உண்டு' என்று பட்டா அமைப்பின் சிரேஷ்ட தலைவர் அஹமத் ஜெனிம் தெரிவித்துள்ளார்.

அரபாத்தை நாடுகடத்தும் தனது திட்டத்தை இஸ்ரேல் வெளிப்படையாக அறிவித்ததைத் தொடர்ந்து, ரமழாவில் உள்ள அரபாத்தின் தலைமையகக் கட்டடத்திற்கு முன்னால் ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் ஒன்றுகூடினர். அங்கு, அரபாத்துக்கு தமது ஆதரவை அவர்கள் தெரிவித்தனர்.

பிரதான வீதிகளிலும் பெருவாரியான மக்கள் திரண்டு இஸ்ரேலின் தீர்மானத்திற்கு எதிராகக் குரல்களை எழுப்பினர்.

தன்னை நாடுகடத்த இஸ்ரேல் தீர்மானித்திருப்பதை அறிந்து அரபாத் கொதித்துப் போயிருக்கிறார் என்று அவரது உதவியாளர் தெரிவித்துள்ளார்.

அரபாத்தின் தலைமையகக் கட்டடத்திற்கு முன்பாக குழுமியோரிடம் ஒலிபெருக்கி மூலம் அரபாத் உரையாற்றினார்.

'ஒரு போதும் ரமழாவை விட்டு நான் வெளியேறமாட்டேன்' என்று அங்கு அவர் கூறினார்.

தலைமையகக் கட்டடத்திற்கு முன்பாகக் குழுமியோரை நோக்கி வெற்றிக்கான அடையாளமாக தனது இரண்டு விரல்களை உயர்த்திக் காட்டினார்.

புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள முகமட் குவேரியும், அரபாத்தும் நெருங்கிய தொடர்புகளை வைத்திருக்கக் கூடாது என்பதற்காகவே அரபாத்தை தனிமைப்படுத்த இஸ்ரேலிய அமைச்சரவை இந்த முடிவை எடுத்திருக்கலாம் என்று அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆனால், அரபாத்தை நாடுகடத்த திட்டமிட்டிருப்பதை எதிர்க்கும் முகமாக, பலஸ்தீனத்தில் தனது தலைமையின் கீழ் புதிய அரசமைப்பதை ஒத்திவைப்பதாக பலஸ்தீன பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள முஹமட் குவேரி அறிவித்துள்ளார்.

அரபாத்தை நாடுகடத்தும் திட்டம் அவருக்கு உலக அரங்கில் பெரும் மதிப்பை ஏற்படுத்தி விடும். இதனால், இஸ்ரேலுக்கு எதுவித நன்மையும் கிடைக்காது என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம், எகிப்து, இந்தோனேசியா ஆகிய நாடுகளும் இஸ்ரேலின் இந்தத் தீர்மானத்தை எதிர்த்து அறிக்கை வெளியிட்டிருக்கின்றன.

## ஈராக்கிய பொலீஸார் 10 பேரை அமெரிக்க படைகள் கொன்றன!

பக்தாத்,செப்.13

ஈராக்கின் மேற்கு நகரான பலூஜாவில் ஈராக்கிய பொலீஸார் 10 பேர் அமெரிக்கப் படைகளால் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டனர். தவறுதலாக நடந்த தாக்குதல் ஒன்றிலேயே இவர்கள் கொல்லப்பட்டதாக அமெரிக்கப் படையினர் கூறுகின்றனர்.

ஆயுததாரிகளுடன் ஒரு கார் அமெரிக்க சோதனை நிலையம் ஒன்றைக் கடந்து சென்றதைக் கண்ட படையினர் அந்த வாகனம் மீது சரமாரியாகச் சுட்டதாக நேரில் கண்டவர்களும் பொலீஸாரும் தெரிவித்தனர். காரில் பயணித்தவர்கள் ஈராக்கியப் பொலீஸார் என்றும் கூறப்பட்டது.

இந்தச் செய்தி தொடர்பாக அமெரிக்க அதிகாரிகள் உடனடியாக எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை.

இது உறுதிப்படுத்தப்பட்டால் கடந்த இரு நாள்களில் இந்த நகரத்தில் அமெரிக்கப் படையினர் தமது நண்பர்கள் மீது நடத்தும் இரண்டாவது தாக்குதல் இதுவாகும்.

புதன்கிழமையன்று அமெரிக்கப் படையினர் குறைந்தது ஒரு ஈராக்கியப் பொலீஸ் கான்ஸ்டபிளை சுட்டுக் கொன்றனர். மற்றொருவர் காயமடைந்தார்.

பலூஜா நகரம் பதவி நீக்கிய முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனின் ஆதரவாளர்களால் நிறைந்தது. இதனால், அங்கு ஒவ்வொரு சிறிய விடயத்திலும் அமெரிக்கப் படையினர் மிகப் பயத்துடனேயே நடந்துகொள்கின்றனர்.

தமது சோதனை நிலையங்களில் தங்களது அறிவுறுத்தல்களுக்கு அமைய நிற்காது செல்லும் வாகனங்கள் மீது அவர்கள் தாக்குதல் நடத்துவது இங்கு வழமையான ஒன்று என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# சாதாரண தீ விபத்தினால் கூட வர்த்தக மையம் அழிந்திருக்கும்

### பிரமாண்டமான கட்டடம் அலட்சியமாகக் கட்டப்பட்டிருப்பது குறித்து சர்ச்சை

2001 செப்ரெம்பர் 11 வர்த்தக மையம் தகர்க்கப்பட்ட கறுப்பு தினம் அந்தப் பயங்கரம் அரங்கேறி இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. என்றாலும், அமெரிக்க மக்கள் இன்னமும் அந்த அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. இந்நிலையில் தாக்குதலுக்குள்ளான கட்டடத்தின் தரம் குறித்த ஆராய்ச்சி முடிவுகள் வேறு புதிய சர்ச்சைகளை கிளப்பியிருக்கின்றன.




"தீவிரவாதிகளின் வெறித் தாக்குதல் என்றில்லை, சாதாரண தீவிபத்து நேர்ந்திருந்தால் கூட அந்தக் கட்டடம் தாங்கியிருக்காது, நெருப்பைச் சமாளிக்கும் பொருள்களைக் கொண்டு அந்தக்கட்டடம் கட்டப்படவில்லை. ஒரு பிரமாண்டமான கட்டடம் இவ்வளவு அலட்சியமாக கட்டப்பட்டதே அதிர்ச்சிக்குரியதுதான்" என்று அதிர்ச்சி தரும் முடிவுகளை வெளியிட்டிருக்கிறார் இதுபற்றி ஆராய்ந்த புலனாய்வுக் குழுவின் தலைவரான ஷ்யாம் சுந்தர்.

### துப்பறிந்த தமிழன்

அமெரிக்காவின் தரக்கட்டுப்பாட்டு அமைப்பின் ஆராய்ச்சிப் பிரிவு தலைவராக இருக்கும் ஷ்யாம் சுந்தரை, ஜனாதிபதி புஷ் பிரத்தியேகமாகத் தேர்ந்தெடுத்து, இந்தப் புலனாய்வுப் பணியை ஒப்படைத்தார். தாக்குதலுக்குள்ளான வர்த்தக மைய கட்டடத்தின் தரம் அறிய, சுமார் 16 மில்லியன் அமெரிக்க டொலர்கள், 24 மாத கெடு, சில நூறு ஆராய்ச்சியாளர்கள் என்று களம் இறங்கினார் ஷ்யாம் சுந்தர். இவர் தமிழகத்தைச் சேர்ந்தவர்

அமெரிக்க தரக்கட்டுப்பாட்டு மையத்தில் இதுவரை பூகம்பம், சூறாவளி என்று பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்ட சுந்தருக்கு இது முற்றிலுமாக புதிய பணி.


தாக்குதலுக்குள்ளாகி தரைமட்டமான அந்தக் கட்டட இடிபாடுகளில் சுற்றித் திரிந்து வித விதமான தடயங்களைத் தேடி எடுத்துக் கொண்டு போய் ஆய்வுகூடங்களில் ஆராய்ச்சி செய்தார் ஷ்யாம் சுந்தர்.

"வர்த்தக மைய கட்டடங்களில் கட்டாய தீ பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை. இடிபாடுகளில் கிடைத்த தடயங்கள் இதை உணர்த்துகின்றன" என்று அறிவித்தார் ஷ்யாம் சுந்தர்.

தவிர, இந்தக் கட்டடங்கள் சரிந்து விழுந்த காட்சிகள் பதிவான பல்வேறு ஒளிநாடாக்களை பல மாதங்கள் இரவு பகலாக மீண்டும், மீண்டும் பார்த்திருக்கிறார்.

உலக வர்த்தக மைய கட்டடங்களை பராமரித்த நியூயோர்க் துறைமுக அதிகார சபை, இவரது ஆராய்ச்சி முடிவுகளால் ஆடிப்போயிருக்கிறது. யார் யார் தலைகள் உருளுமோ தெரியவில்லை. ஷ்யாம் சுந்தரின் அறிக்கையின் பேரில் அதிரடி நடவடிக்கைக்கு ஜனாதிபதி புஷ் தயாராகிறார் என்று தெரியவருகிறது.

ஷ்யாம் சுந்தர், புதுடில்லியில் படித்தவர். 1977ஆம் ஆண்டு அமெரிக்காவுக்குப் போய், பொறியியலாளர் துறையில் முதுகலை மற்றும் டாக்டர் பட்டங்களைப் பெற்றார். உலகின் சிறந்த மூளைகளின் இருப்பிடம் என்று போற்றப்படும் எம்.ஐ.டி. பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றிய அனுபவமும் இவருக்கு உண்டு.

அமெரிக்காவில் நேற்று முன்தினம் செப்ரெம்பர் 11 தாக்குதல் நினைவு கூரப்பட்டது. அதன் காட்சிகளையும், உலக வர்த்தகமையக் கட்டடம் இருந்த இடத்தில் நேற்று முன்தினமிரவு நீலநிற லேசர் ஒளிக் கற்றைகள் வானுயர பாய்ச்சப்பட்டதையும் படங்களில் காணலாம்.

உங்கள் மகிழ்ச்சியான மணநாளினை மங்களகரமாக தெரிவியுங்கள்

இதுவரை அச்சிடப்படாத புத்தம்புதிய வடிவமைப்பில் மங்களகரமான திருமண அழைப்பிதழ்கள் பலநூற்றுக்கணக்கான தெரிவுகளில்!

பொஸ் காகிதாதியாளர் (போஸ்கோ)
03, நவீன சந்தை, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

போஸ்கோ நிறக்கலை அச்சகம்
(Off-Set & Screen Printing)
252, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

## இல்லற வாழ்வில் 24 ஆம் ஆண்டு

யாழ்ப்பாணம், நீராவியடியைச் சேர்ந்த

**அழகரட்ணம் ஜெயராணி** தம்பதியினர்

இல்லறவாழ்வில் 24ஆம் ஆண்டினை நேற்று (12.09.2003) வெகு விமரிசையாகக் கொண்டாடினர். தம்பதியினரை பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துவதில் நாமும் பெருமை அடைகிறோம்.

நீராவியடி. (22514) (21-12-13) - **முரளி, பிரகாஸ்.**

## திருமண வைபவம் பிற்போடப்பட்டுள்ளது

15-09-2003 திங்கட்கிழமை **சிவத்திரு.சொ.சிவஞானம்** *ஆச்சாரியார் புதல்வன்* **கணேசனுக்கும், ந.பொன்னுத்துரை பத்தர்** *புதல்வி* **சந்திரகலாவிற்கும்** நிச்சயிக்கப்பட்ட திருமண வைபவம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவிருந்தமை தவிர்க்க முடியாத காரணத்தால் தற்காலிகமாக பிற்போடப்பட்டுள்ளது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

திரு.திருமதி ந.பொன்னுத்துரை
(பத்தர்),
நி.மு.: தெல்லிப்பழை கிழக்கு,
தெல்லிப்பழை.
த.மு.: செல்லாச்சி அம்மையார் வீதி,
சுன்னாகம்.

திருதிருமதி
சிவஞானம்-பாவநாசம்சிவன்
12/7, கன்னாதிட்டி லேன்,
யாழ்ப்பாணம். (22520) (19-21-12-13)

## காணி விற்பனைக்கு

கிளிநொச்சி, கோணாவில் 3 ஆம் கட்டை யூனியன் குளப்பகுதியில் 2 ஏக்கர் தென்னந்தோட்டக்காணி விற்பனைக்குண்டு.

பயன் தரும் 130 தென்னை, 3 மாமரம், 2 பலாவுடன் குடியிருப்புக்கு ஏற்ற 2 அறை மண் வீடும் நல்ல தண்ணீர் வசதியுடைய சிறிய குளமும் உண்டு. பிரதான பாதை ஓரத்தில் இருப்பதால் கடை, வேறு தொழிற்சாலை கட்டக்கூடிய பொருத்தமான இடமாகும். விலை இரண்டரை இலட்சத்துக்கு மேல்.

தொடர்பு: **க.தம்பிராசா,**
வராகி அம்மன் கோவிலடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
**T.P. - 077-6159133**
(22522) (21-12-13)

We Serve

## சர்வதேச அரிமா கழகங்கள்

**மாவட்டம் 306 பி**
**பிராந்தியம் 8 & 9**

## தலைமைத்துவப் பயிற்சிக் கருத்தரங்கு

இடம்: **யாழ். மத்திய கல்லூரி**
காலம்: **நாளை (14.09.2003) ஞாயிற்றுக்கிழமை**
காலை 8.00 மணிமுதல் பி.ப.2.00 மணிவரை.

மாவட்ட ஆளுநர் லயன் Dr.றொகான் பெரேரா MJP அவர்களும் துணை மாவட்ட ஆளுநர் லயன் **ச.சிவானந்தன்** அவர்களும் பத்துக்கு மேற்பட்ட முன்னாள் மாவட்ட ஆளுநர்களும் கலந்துகொள்கிறார்கள்.

- ❑ அனைத்து அரிமா கழக உறுப்பினர்களும் லியோ கழக உறுப்பினர்களும் கலந்து பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
- ❑ காலை, மதிய போசனங்கள் மண்டபத்திலேயே வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- ❑ பிரவேசம் இலவசம்.

அனைத்து அரிமாக்களினதும்
ஒத்துழைப்பை நாடும்:

*மாவட்டத் தலைவர்,*
*தலைமைத்துவ அபிவிருத்தி.*

**பிராந்தியத் தலைவர்கள்.**
**பிராந்தியம் 8&9**
**மாவட்டம்306B**

(C/30129) (21-12-13)


## தொலைத்தொடர்பு சேவையில் இன்னும் பல சேவைகள்

Dialog GSM

Kit

டயலொக்
தொலைபேசி அட்டைகளை
மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள,

**Sri Murugan**

Tele Communication & Agency Post Office,
303,K.K.S ROAD, JAFFNA T.P- 021-222 5392,
FAX-222 3214, email-del-smskr@eureka.lk


# ஓய்வூதிய இலக்கம் கிடைக்காத ஆசிரியருக்கான நடமாடும் சேவை

வலிகாமம் தெற்கு, செப்.13

நடமாடும் சேவையொன்றை நடத்தி, விதவைகள் மற்றும் ஆதரவற்றோருக்கான ஓய்வூதிய இலக்கம் கிடைக்காத ஆசிரியர்களுக்கு அவற்றை பெற்றுக்கொடுக்க இலங்கை ஆசிரியர் சங்கம் ஒழுங்கு செய்துள்ளதாக சங்கத்தின் வடமாகாண பொதுச செயலாளர் அ.பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பணிபுரியும் பல ஆசிரியர்களுக்கு இதுவரை காலத்திலும் விதவைகள் - ஆதரவற்றவர்களுக்கான ஓய்வூதிய இலக்கம் வழங்கப்படாதிருப்பதாக சங்கத்துக்கு சுட்டிக்காட்டப்பட்டதைத தொடர்ந்து சங்கம் இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் ஓய்வூதியப் பணிப்பாளர் விஜயதாசாவை, இலங்கை ஆசிரியர் சங்க வடக்கு-கிழக்கு அமைப்பாளர், அமைச்சு அலுவலகத்தில் சந்தித்து இப்பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடினார்.

கல்வி அமைச்சு அதிகாரிகள், இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் பணிப்பாளருடரான சந்திப்பின் போது கலந்துகொண்டனர்.

நடமாடும் சேவையொன்றை இது தொடர்பாக விரைவில் நடத்தி- ஓய்வூதிய இலக்கங்களை வழங்க உடன் நடவடிக்கை எடுப்பதாக ஓய்வூதியப் பணிப்பாளர் இச்சந்திப்பின் போது உறுதியளித்துள்ளதாகவும்- விரைவில் ஓய்வூதிய இலக்கம் கிடைக காத ஆசிரியர்களுக்கான உரியபடிவங களைப் பெற்றுக்கொடுக்க சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் -

அ.பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார். (ஒ-152)

## எழுச்சிப் பேரவை அலுவலகம் திறப்பு

வலி.வடக்கு,செப்.13

கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப பேரவை அலுவலகத் திறப்புவிழாவும பேராளர் சங்கமமும் இன்று காலை 9.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

தேசிய எழுச்சிப் பேரவை அலுவலகத் திறப்பு விழா கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ந.சிவகடாட்சம் தலைமையில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கு முன்பாக உள்ள தனியார் கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

பேராளர் சங்கமம் பிரதேசப் பொறுப்பாளர் யாழவன் தலைமையில இடம்பெறவுள்ளது. (ஒ-86)

## மகளிர் படையணி போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செப்.13

தமிழீழ விடுதலைப் புலிகளின் பெண்கள் படையணிகளுக்கிடையில கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மெய்வன்மைப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:-

☆ 100 மீற்றர் ஓட்டம்- 1ஆம் இடம் - சோதியா படையணி, 2,3ஆம் இடம் அன்பரசி படையணி.

☆ 200 மீற்றர் - 1,3ஆம் இடம் சோதியா படையணி, 2ஆம் இடம் அன்பரசி படையணி.

☆ 400 மீற்றர் - 1,3 ஆம் இடம், சோதியா படையணி, 2ஆம் இடம் அன்பரசி படையணி.

☆ 4x100 அஞ்சல்- 1ஆம் இடம், சோதியா படையணி, 2,3ஆம் இடம் இல்லை

☆ 4x400 அஞ்சல் - 1ஆம் இடம் சோதியா படையணி, 2,3ஆம் இடம் அன்பரசி படையணி.

☆ கலப்பு அஞ்சல் -1ஆம் இடம், சோதியா படையணி 2,3 அன்பரசி படையணி.

☆ உயரம் பாய்தல்- 1ஆம் இடம் படை அறிவியல்துறை, 2ஆம் இடம், கணனிப் பிரிவு, 3ஆம் இடம் அன்பரசி படைப்பிரிவு.

☆ நீளம் பாய்தல் - 1ஆம் இடம் அன்பரசி படையணி, 2ஆம் இடம் படையறிவியல் துறை, 3ஆம் இடம் அன்பரசி படையணி.

☆ 800மீற்றர் 1ஆம் இடம் அன்பரசி படையணி, 2ஆம், 3ஆம் இடம் சோதியா படையணி.

☆ 1500 மீற்றர் 1ஆம், 3ஆம் இடம் அன்பரசி படையணி, 2ஆம் இடம் சோதியா படையணி. (ம-9-10-5)

## வீடியோ படக்காட்சி

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கிவரும் திரைப் படக் காட்சித் தொடரில் 'அமம்பாக அங்கன்பாணி' என்ற மணிப்புரி மொழிப்படம், ஆங்கில உபதலைப்புகளுடன் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு புவியியற் துறை மண்டபத்தில் காண்பிக்கப்படும்.

இது விழிப்புலன் இழந்த ஒரு பாடகனின் கதையைச் சித்திரிக்கின்றது.

ஆர்வலர்கள் எவரும் கலந்து கொண்டு பயன்பெறலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவிக்கின்றார். (ஐ)

## கணனி அன்பளிப்பு

தென்மராட்சி.செப்.13

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கிக்கு கணனி அன்பளிப்பாகக் கிடைத்துள்ளது.

ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தினர் இந்த கணனியை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

சங்கத் தலைவர் ந.பாலச்சந்திரன், பொது முகாமையாளர் சி.தேவகுமாரன் ஆகியோரிடம் கணனியை ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிறுவனப் பிரதிநிதிகள் அண்மையில் வழங்கினர். (ஒ-117)


## இந்திய ஜோதிடர் யாழ். விஜயம்

ஸ்ரீ சோட்டானிக்கறை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப்பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ் வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? தொழிற் பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம் மூலம் தீர்வுகாணலாம்.

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்!
இரண்டாவது தடவையாக விஜயம் செய்துள்ளார்

**மணிசாமி P.T.R ஈஸ்வரி அம்மா**

*யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி (பழைய லிங்கம் கூல்பார் அருகில்).*
*இல. 54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில், பெருமாள் கோவிலடி.)*

பார்வையிடும் நேரம் : காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை.

(21-12-13) (22523)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக தோழர் **திரு.சி.சத்தியலிங்கம்**
(நல்லூர் பல நோ.கூ.சங்கப் பணியாளர்)
அவர்களின் அன்புத் தந்தையார்
**சதாசிவம் சிவக்கொழுந்து**

அவர்களின் மறைவினால் அவரது குடும்பத்தினருக்கு ஏற்பட்டுள்ள துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,
(22504)(19-21-12-13) **கிளை-நல்லூர் பல நோ.கூ.சங்கம்.**

## மரண அறிவித்தல்கள்

### சுந்தரம் சின்னராசா

நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் சின்னராசா 10.09.2003 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ஜீவமலர், ஜீவகுமார் மற்றும் விஜயமலர் (சுவிஸ்), சிறீதரன் (உரிமையாளர், சிறி அம்பாள் எலக்ரிககலஸ், நாச்சிமார்கோயிலடி), உமாராணி, ரவிக்குமார்(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீஸ்கந்தவேள்(சுவிஸ்), ரவீந்திரநாதன், ரேவதி, விதினி(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் வேதிகா (சுவிஸ்), கார்த்திகா (சுவிஸ்), கீர்த்திகா (சுவிஸ்), கௌதமன்(லண்டன்), ராகுலன், ஆரூரன், ராகவி(சுவிஸ்) ஆகியோரின் அருமைப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-09-2003) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எருக்கலம்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மானிப்பாய் வீதி,*
*ஆனைக்கோட்டை.*

தகவல்:
சி.சிறீதரன் (மகன்)
ப.ரவீந்திரநாதன் (மருமகன்)

(22517) (13-12-21)

### மகாராசா பகீதரன்

கைதடிமத்தி, கைதடியைப் பிறப்பிடமாகக் கொண்ட மகாராசா பகீதரன் 11.09.2003 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மகாராசா - இந்திராதேவி தம்பதிகளின் அன்பு மகனும், கேதீஸ்வரன்(லண்டன்), ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சத்தியலிங்கம், வயிரமுத்து சின்னத்தம்பி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2003) சனிக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக கைதடி மத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி மத்தி,*
*கைதடி.*

தகவல்:
வயிரமுத்து சின்னத்தம்பி,
சத்தியலிங்கம் (பேரன்மார்)

### திருமதி போதராணி மகேந்திரன்

(இளைப்பாறிய ஆசிரியை)

அரியாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி போதராணி மகேந்திரன் அவர்கள் 10.09.2003 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வேலுப்பிள்ளை மகேந்திரனின் (பிரதிக் கல்விப்பணிப்பாளர் மாகாணக் கல்வித் திணைக்களம்) அன்பு மனைவியும் அபிராமியின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பண்டிதர் அருணாச்சலம், செல்லம்மா ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தபாலதிபர் வேலுப்பிள்ளை, புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகளும் சரோஜினி, லீலாதேவி, இசைஞானி, யோகாம்பிகை, ருக்மணி, கலாநிதி குமாரசாமி, காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் போதரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகாலட்சுமி, புவனேந்திரன், தனலட்சுமி, பாக்கியலட்சுமி, தெய்வேந்திரன், சாந்தலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.09.2003) ஞாயிற்றுக்கிழமை இல.36, எஸ்ரான்லிக் கல்லூரி வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 9.00 மணியளவில் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*36, எஸ்ரான்லிக் கல்லூரி வீதி,*
*அரியாலை.*

தகவல்:
வே.மகேந்திரன்
(கணவர்)

உதயன்

# திருகோணமலையும் புலிகளின் முகாம்களும்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கவிழ்த்துவிட்டுத் தாம் ஆட்சி அதிகாரத்துக்கு வரத் துடித்துத் தருணம் பார்த்துக் கொண்டிருக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர்களும் சமாதான முயற்சிகளைச் சீர்குலைத்து மீண்டும் ஒரு யுத்தத்துக்கு தூபம் போடும் பேரினவாத சக்திகளும் காரியம் சாதிப்பதற்கு இப்போது தமிழர்களால் தமிழ் ஈழத் தலைநகராகக் கொள்ளப்படும் திருகோணமலையில் தொங்கிக்கொண்டு இருப்பதைக் காணமுடிகிறது.

திருகோணமலையை தாக்கிக் கைப்பற்றுவதற்கு விடுதலைப் புலிகள் வியூகம் வகுத்து திருகோணமலையைச் சூழவுள்ள அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த பின்னர் 14 முகாம்களை அமைத்துள்ளனர். அதனால், திருகோணமலை துறைமுகத்துக்கும் நகருக்கும் மட்டுமன்றி கிழக்கு மாகாணம் முழுவதற்குமே ஆபத்து நெருங்கிக்கொண்டிருக்கிறது என்று எதிரணியினர் அபாயச் சங்கு ஊதுகிறார்கள்; கூப்பாடு போடுகிறார்கள்.

ஏற்பட இருக்கும் ஆபத்தைப் பற்றிக் கவலை கொள்ளாமல் அரசாங்கம் நடப்பவை எல்லாவற்றையும் சும்மா பார்த்துக்கொண்டிருக்கிறது. புலிகள் எது வேண்டுமானாலும் செய்ய விட்டுக்கொண்டிருக்கிறது என்று அரசின் மீது குற்றஞ்சாட்டுகிறார்கள்.

எதிரணியினரின் குற்றச்சாட்டை அரசாங்கம் முற்றாக நிராகரித்துவிட்டது.

திருகோணமலைத் துறைமுகத்துக்கோ அல்லது கிழக்கு மாகாணத்துக்கோ புலிகளால் எந்த ஓர் அச்சுறுத்தலும் இல்லை. பிரச்சினைக்கு உரியதாக இருக்கும் குரங்குபாஞ்சான் முகாமைத் தவிர வேறு எந்த ஒரு முகாமையும் புலிகள் புதிதாக அமைக்கவில்லை. கிழக்கில் பாதுகாப்பு நிலைமைகள் உறுதியாகவே இருக்கின்றன.

அதற்கான உத்தரவாதத்தை அரசு அளிக்கிறது என்று அமைச்சரவைப் பேச்சாளரான பேராசிரியர் பீரிஸ் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

எதிரணியினர் கூறும் முகாம்கள் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முன்னரே புலிகளால் அவர்களின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அமைக்கப்பட்டவை. எதிரணியினரின் ஆட்சிக் காலத்திலும் அந்த முகாம்கள் இருந்தன. அப்போது அவற்றைப் பற்றி அலட்டிக்கொள்ளாதவர்கள் இப்போது சமாதான முயற்சிகளைக் குழப்புவதற்கான சதித்திட்டத்துடன் புலிகளின் முகாம்களைப் பற்றி ஒப்பாரி வைக்கிறார்கள். இவையெல்லாம் மக்கள் மத்தியில் எடுபடமாட்டா. எதிரணியினர் நிச்சயமாக ஏமாறுவார்கள் என்றார் பேராசிரியர் பீரிஸ்.

பேராசிரியர் கூறியவற்றை எல்லாம் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகம எம்.பி. நேற்று தாம் நடத்திய ஊடகவியலாளர்கள் மாநாட்டில் முற்றாக மறுத்திருக்கிறார்.

குறிப்பிடப்படும் இந்த முகாம்கள் தங்களின் ஆட்சிக் காலத்தில் இப்பொழுதுபோல் நிலையான முகாம்களாக இருந்து இயங்கவில்லை என்று அவர் விளக்கம் அளித்திருக்கிறார்.

அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகள் முகாம்களை அமைத்திருக்கிறார்கள் என்று சரத் அமுனுகம தரும்பவும் கூறுகிறார். அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை.

புலிகளுடைய நிலைப்பாடும் தங்களுடைய முகாம்கள் தங்களுடைய கட்டுப்பாட்டுப் பகுதிகளில்தான் இருக்கின்றன என்பதுதான்.

முகாம்கள் எந்தப் பகுதிகளில் இருக்கின்றன என்பதைவிட முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய விடயம் வேறொன்று இருக்கிறது.

முகாம்களை அமைப்பது தாக்குதல் நடத்துவதற்குத்தானா? பாதுகாப்புக்காக அமைக்கப்படுவதில்லையா? புலிகள் தாக்குதல் நடத்துவதற்கு முகாம்களை அமைக்கிறார்கள் என்றால் அரசாங்கம் முகாம்களை-அமைப்பதும் தாக்குதலுக்குத்தானா என்ற கேள்வி எழுகிறது.

திருகோணமலைத் துறைமுகத்தில் எண்ணெய்க் குதங்களை குத்தகைக்கு எடுத்ததோடு இந்தியா திருகோணமலைத் துறைமுகப் பகுதியில் கால் ஊன்றத் தொடங்கிவிட்டது.

வான் பரப்பு, கடல் பிரதேச ஒப்பந்தங்களின் பெயரால் அமெரிக்காவும் திருகோணமலைத் துறைமுகப் பகுதியில் அவ்வப்போது ஊடுருவல் செய்கிறது.

இவற்றைக் கருத்திற்கொண்டுதான் புலிகள் சுற்றிவர முகாம்களை அமைத்து தாக்குதல் நடத்தி திருகோணமலையைக் கைப்பற்றப்பார்க்கிறார்கள்; திருகோணமலையில் இருந்து பலாலி இராணுவத்தளம், காங்கேசன்துறை கடல்தளம் ஆகியவற்றுக்கு எந்த விநியோகங்களும் இடம்பெறாமல் தடுக்கப்பார்க்கிறார்கள். அதன்மூலம் யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றுவது புலிகளின் திட்டம் என்று கதை கட்டுகிறார்கள் எதிரணியினர்.

இதன் மறுபக்கம், திருகோணமலையில் இன்று எழுந்துள்ள நிலை காரணமாக தாம் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற உணர்வுடன் புலிகள் செயற்படுகிறார்கள் என்று கொள்ளலாம் அல்லவா?

அதிகாரவேட்கை கொண்டவர்களால் எதையும் நிதானமாகச் சிந்தித்து முடிவு காண முடியாது என்பதை எதிரணியினர் நிரூபித்து வருகிறார்கள்.

# மிதிவெடி அகற்றுவதில் இயந்திரங்கள்: இதனால் பாரிய மரங்கள் அழியும் நிலை!

## தென்மராட்சி மக்கள் கவலை

தென்மராட்சி,செப்.13

தென்மராட்சிப் பகுதியில் மிதிவெடிகளை அகற்றும் பணியில் இயந்திரங்கள் ஈடுபடுத்தப்படுவதால் பயன்தரும் மரங்கள் அழிய நேரிடுவதாக பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

மிதிவெடி அபாயம் உள்ள இடங்களில் மிதிவெடிகளை அகற்றும் பணி தென்மராட்சியில் தீவிரமாக இடம்பெறுகிறது. இப்பணியில் மண் அகழும் இயந்திரங்கள் ஈடுபடுத்தப்படுகின்றன.

இந்த இயந்திரங்கள் மூலம் மண் அகழப்படும்போது, அப்பகுதியில் உள்ள மரங்கள் வேருடன் சாயும் நிலை தோன்றுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், மிதிவெடிகள் உள்ள இடங்களுக்கு இயந்திரங்களைக் கொண்டுசெல்ல வசதியாக சில சந்தர்ப்பங்களில் மரங்களை வெட்ட நேரிடுவதாகவும் கூறப்படுகிறது.

கடந்தகால யுத்தச் சூழ்நிலைகளின்போது 'ஷெல்' வீச்சுக்கு தப்பிய மரங்கள் தற்போது அழிய நேரிடுவது குறித்து பொதுமக்கள் கவலை தெரிவித்தனர். (ஒ-117)

## நாட்டு நடப்பு

**நல்லையூர் கந்தன் திருப்பள்ளி எழுச்சி (3)**

*கூவிடும் கோழிகள் குறைந்தன இங்கே*
*கூட்டினில் 'புறொயிலர்கள்' வளர்த்திடுகின்றார்*
*ஆவினை அறுத்து அடியவர் உண்பதனாலே*
*அலையுது கன்றுகள் பாலினைத் தேடி*
*மா விலை அதிகமாய் ஏறிய தென்று*
*மக்களும் 'பிளேன் ரீ' குடித்திடு கின்றார்*
*கோவிலைக் கண்டும் கும்பிடா அடியார்*
*கூடுகின்றார் நின் திருவிழாக் காண*
*தேவியரோடு நீ திருஉலா வருவதால்*
*தெரிந்திடுவாய் இவை அனைத்தையும் ஒன்றாய்*
*மூவிரு முகத்தால் முழுதுமாய் கண்ட*
*முருகனே! பள்ளி எழுந்தருளாயே!*

- விகடகவி.

# புலிப்படைதான் தமிழரின் பலம் அதன் கலைப்புக்கு இடமில்லை!

## தமிழ் தேசியப் பணிக்குழு கூறுகிறது

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புலிப்படைதான் தமிழ் மக்களின் பலம். அந்தப் படையை கலைத்தால் அந்தக்கணமே தமிழ் மக்களின் பலம் அழிந்துவிடும். அதனால் புலிப்படையை கலைப்பதற்கு இடமில்லை. தலைவர் பிரபாகரன் புலிப்படையை கலைக்க எந்த நிலையிலும் இணங்கமாட்டார்.

மேற்கண்டவாறு தமிழ் தேசிய பணிக்குழுத் தலைவர் தில்லைக்கூத்தனும் (நடராஜா), செயலாளர் குமரகுருபரனும் நடத்திய செய்தியாளர்கள் மாநாட்டில் தெரிவித்தார்கள்.

அவர்கள் மேலும் கூறியதாவது:-

அரசைப்போல விடுதலைப் புலிகளும் இராணுவ சமநிலையில் இருந்தால்தான் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை நோக்கிய சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லமுடியும். எனவே, புலிகளின் இராணுவப் பலம் பேணப்படவேண்டும்.

சமஷ்டி ஆட்சிமுறை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. சுவிற்ஸர்லாந்து, ஜேர்மனி, கனடா ஆகிய நாடுகளில் உள்ள சமஷ்டி முறைகள் இலங்கைக்கு பொருந்துமா என்று ஆராயப்படுகிறது. அந்த நாடுகளில் இலங்கையைப்போன்று யுத்தம் நடக்கவில்லை. இலங்கைப்பிரச்சினைகள் வேறானவை. ஆகவே, எமக்குப் பொருத்தமான ஒரு சமஷ்டி முறையை நாம் புதிதாக உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இருந்து இந்தியா விலகி நிற்கும் ஒரு தோற்றப்பாடு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்திய மேல்மட்ட பிராமண சமூகத்தின் வேலை அது. அந்த சமூகத்தின் கையில் பலம்மிக்க ஊடகங்கள் சிக்கிக் கொண்டுள்ளன. அதனால் மத்திய அரசையே அந்த சமூகத்தால் நினைத்தபடி ஆட்டிப்படைக்க முடிகிறது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையை சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தவரே முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திராகாந்திதான். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய மக்களில் பெரும் எண்ணிக்கையினர் அனுதாபம் உடையவர்களாக இருக்கிறார்கள். பெரும் அக்கறை காட்டி வருகிறார்கள். இரண்டு தமிழ்த் தலைவர்களும் தொண்டர்களும் ஈழத் தமிழருக்கு ஆதரவு தெரிவிப்பது காரணமாக சிறைவைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அங்கிருந்தே தமது பங்களிப்பை தொடர்ந்து செய்து வருகிறார்கள்.

இலங்கையில் இனவாத சக்திகள் சமாதான முன்னெடுப்புகளுக்கெதிராக சாதாரண சிங்கள மக்களைத் தூண்டி வருகின்றன. இந்த மக்களுக்கு அரசாங்கம் உண்மையை விளக்கவேண்டும். சமாதானத்தின் அருமைபெருமைகளை எடுத்துக் கூறவேண்டும். தவறினால், விபரீத விளைவுகள் ஏற்படும்.

பாதுகாப்புப் படையினரும் தமிழ் மக்களுக்கு எரிச்சலூட்டும் வகையில் நடந்து வருகிறார்கள். தமிழ் மக்கள் தமது நிகழ்வுகளில் புலிக்கொடி ஏற்றக்கூடாது என்று தடைவிதிக்கிறார்கள். இதில் என்ன நியாயம் இருக்கிறது?

பாடசாலைகள் ஒவ்வொன்றும் தனித்தனிக் கொடிகளை வைத்திருக்கின்றன. தெய்வங்களுக்கு வெவ்வேறு கொடிகள். அவை ஆலயங்களில் ஏற்றப்படுகின்றன. அப்படியே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளான விடுதலைப் புலிகளும் புலிக்கொடியை வைத்திருக்கிறார்கள். அந்தக் கொடியை தமிழ் மக்கள் தமது நிகழ்வுகளின்போது ஏற்றுவதில் படையினருக்கு ஏன் வயிற்றுவலி? வலிந்து விரோதத்தை வளர்த்து வினையைத் தேடும் விபரீதத்தை அவர்கள் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

- இப்படி தமிழ்த் தேசிய பணிக்குழுத் தலைவரும் செயலாளரும் செய்தியாளரிடம் தெரிவித்தனர். (ஐ)

# கைதடி முதியோர் இல்லத்தின் பொன்விழா அடுத்த மாதம்

கைதடி,செப்.13

கைதடி முதியோர் இல்லம் 50ஆவது ஆண்டு விழாவை அடுத்த மாத[illegible] 2ஆம் திகதி கொண்டாடவுள்ளது. இதனை முன்னிட்டு, எதி[illegible] ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி முதல் ஏழாம் திக[illegible] ஆண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் [illegible]பட்டு வருகின்றன.

இந்த மு[illegible] இல்லம் ஸ்தாபிக்கப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடை[illegible]டி பொன்விழா மலர் வெளியிடப்படவுள்ளது. இம்மலரை வெ[illegible]டுவதற்காக குழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக கைத[illegible] முதியோர் இல்ல அத்தியட்சகர் எஸ்.சிவநேசன் தெரிவித்தார்.

இக்குழுவின் தலைவராக தென்மராட்சிப் பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசனும் செயலாளராக தானும் பணியாற்றுவதாகவும் -

இக்குழுவின் உறுப்பினர்களாக மேலும் சிலர் இடம்பெற்றுள்ளதாகவும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

பொன்விழாவினை முன்னிட்டு முதியோர்களிடையேயான போட்டிகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாகவும் அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார்.

ஆண்டு விழாவிற்கான ஏற்பாடுகள் துரிதகதியில் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-75)

### தரைவழிப்பாதை ஊடாக

# தென்பகுதிக்கு கடலுணவுகளை அனுப்பும் பணி இன்று ஆரம்பம்

## மீனவர் சமாசம் மேற்கொள்கிறது

யாழ்ப்பாணம், செப்.13

கடலுணவுகளை தென்பகுதிக்கு விற்பனைக்காக அனுப்பும் நடவடிக்கையை இன்று முதல் வடமாகாண கடற்றொழிலாளர்களின் சங்கங்களின் சமாசம் ஆரம்பிக்கிறது.

இதன் முதற்கட்டமாக இன்று ஒருதொகுதி இறால்கள் தென் பகுதிக்கு அனுப்பப்படவுள்ளன.

இதுதொடர்பாக சமாசத் தலைவர் தெரிவித்ததாவது -

ஏ-9 வீதி ஊடாக தென்னிலங்கைக்கு கடலுணவுகளை அனுப்பி வைப்பதற்கான அனுமதியினை விடுதலைப் புலிகள் அண்மையில் கடற்றொழில் சமாசத்திற்கு வழங்கியிருந்தனர்.

இதற்கிணங்க அண்மையில் ஒருதொகுதி கடலுணவுகளை பாடசார்த்தமாக தென்னிலங்கைக்கு கண்டி வீதியூடாக எடுத்துச் சென்று விற்பனை செய்தோம்.

அந்தப் பரீட்சார்த்த முயற்சி வெற்றியளித்திருப்பதனால் இன்று முதல் தொடர்ச்சியாக கடலுணவுகளை தரைப்பாதை ஊடாக தென்பகுதிக்கு அனுப்பப்படவுள்ளன.

இன்று ஒருதொகுதி இறால்கள் அனுப்பிவைக்கப்படுகின்றன. இதனைத் தொடர்ந்து நண்டு, கணவாய் போன்ற கடலுணவுகளையும் தென்னிலங்கைக்கு அனுப்பிவைக்க உள்ளோம் - என்றார் அவர். (ஒ-6)

**நாளை**

ஆவணி 28
ஞாயிற்றுக்கிழமை
(14.09.2003)
திதி : சதுர்த்தி
பின்னிரவு 3.31 வரை
நட்சத்திரம்: அச்சுவினி
முன்னிரவு 11.32 வரை
சுபநேரம்: 9.03 - 10.33
ராகுகாலம்: 4.33 - 6.03
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

மற்றவனை மனிதனாக மதிக்கும்போதுதான் நீயும் மனிதனாகிறாய்.

# மீனவர் மீதான கெடுபிடிகளை நிறுத்தாவிட்டால் போராட்டம்!

## சங்கானை பேராளர் சங்கமத்தில் தீர்மானம்

வலி.வடக்கு,செப்.13

சுழிபுரம், திருவடிநிலைக் கடற்பரப்பில் தொழிலுக்குச் செல்லும் கடற்றொழிலாளர்கள் மீதான கெடுபிடிகளை படையினர் நிறுத்தாவிட்டால் வீதி மறியல் போராட்டம் நடத்தப்படும்.

- இவ்வாறு சங்கானைப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைப் பேராளர் சங்கமத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பேராளர் சங்கமத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

சங்கானை பிரதேச தேசிய எழுச்சி பேரவையின் செயலாளர் ச.கைலாசநாதன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதில் பொதுச்சுடரை சங்கானை பிரதேச அரசியல்துறை பொறுப்பாளர் அன்புமணி ஏற்றிவைத்தார். தேசியக் கொடியை யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் கலைவிழி ஏற்றினார்.

சுழிபுரம், திருவடிநிலைக் கடற்பரப்பில் கடற்றொழிலுக்குச் செல்லும் கடற்றொழிலாளர்கள் மீது கடற்படையினர் தொடர்ந்து கடும் கெடுபிடிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இத்தகைய கெடுபிடிகளை கடற்படையினர் உடனடியாக நிறுத்திக்கொள்ளவேண்டும். அவ்வாறின்றி இக்கெடுபிடிகள் தொடருமானால் கடற்றொழிலாளர்கள் உட்பட பொதுமக்கள் அனைவரும் வீதி மறியற்போராட்டத்தில் ஈடுபட்டு படையினரின் வாகனப் போக்குவரத்தைத் தடை செய்யவேண்டும்.

- இவ்வாறு அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஒ-86-150)

## பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே, என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும், எக்காரணம் கொண்டும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

ஓ பரிசுத்த ஆவியே!
உமக்கு நன்றி.

(22488) (21-13-16) (அடியான்)

## தொழில்நுட்பக்கல்லூரி இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம், செப். 13

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின இறுதிப்பரீட்சைகளுக்கான விண்ணப்பபடிவங்களை எதிர்வரும் 19ஆம திகதிக்கு முன் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இவ்விண்ணப்பப்படிவங்களை தொழில்நுட்பக் கல்லூரியில் பெற்றுப பூர்த்திசெய்து ஒப்படைக்க முடியும். எக்காரணம் கொண்டும் பரீட்சை விண்ணப்பப் படிவங்களை உரிய காலப்பகுதியில் பூர்த்திசெய்து ஒப்படைக்காதவர்கள் பரீட்சைக்குத் தோற்ற முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-12-ரி)

## மிருதங்க அரங்கேற்றம்



ஓம் விராட விஸ்வப் பிரம்மனே நமஹ!

சங்கீதரத்தினம் திரு. எம். சிதம்பரநாதன், இசைக் கலைமணி-நல்லூர். க. கண்ணதாசன் ஆகியோரின் மிருதங்க மாணவனும், எமது சிரேஷ்ட புத்திரனுமாகிய

**செல்வன் நடராஜா சதீஸ்குமார்**

அவர்களின் மிருதங்க அரங்கேற்றம்

காலம் : 14.09.2003 ஞாயிறு பிற்பகல் 3.30 மணி
இடம் : நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலாமண்டபம்

பிரதம விருந்தினர்-
பேராசிரியர் சு. மோகனதாஸ் அவர்கள்
(துணைவேந்தர் - யாழ். பல்கலைக்கழகம்)

அணி செய் கலைஞர்கள்

| | | |
|---|---|---|
| பாட்டு | சங்கீத பூஷணம் | திரு. எஸ். பத்மலிங்கம் |
| வயலின் | இசைஞான திலகம் | திரு. உ. இராதா கிருஷ்ணன் |
| மிருதங்கம் | கலாவித்தகர் | செல்வன் நடராஜா சதீஸ்குமார் |
| கெஞ்சிரா | வித்துவான் | இரா. சிவராமன் |
| முகர்சிங் | கலாவித்தகர் | செல்வன் வி. ரமணன் |

*கலை ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.*


இவ்வண்ணம்
திரு. திருமதி நடராஜா குடும்பத்தினர்

620, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

UTHAYAN Graphics (22399)

## மோட்ச தீபப் பூஜை அழைப்பு

ஓம் ஸ்ரீ நாராயணாய நம



அமரர்
தம்பிஐயா குணபாலசிங்கம் J.P.

மண்ணில் 22.02.1939 விண்ணில் 28.08.2003

ஞாயிற்றுக்கிழமை
14.09.2003

*பேரன்புடையீர்!*

கடந்த 28.08.2003 வியாழக்கிழமை இயற்கையெய்திய எங்கள் குடும்பத் தலைவராகிய அமரர் தம்பிஐயா குணபாலசிங்கம் (J.P.) அவர்களின் மோட்சதீபப் பூஜை நாளை (14.09.2003) ஞாயிற்றுக்கிழமை பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று, ஸ்ரீ நாகவரதநாராயணர் திருவடியில் சமர்ப்பணம் செய்யவிருப்பதால் இந்நிகழ்வில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு மதிய போசனத்திலும் பங்குபற்றி எம்மை ஆறுதற்படுத்துமாறு வேண்டிக்கொள்கிறோம்.

நாகேஸ்வரம்,
அளவெட்டி மேற்கு.

மனைவி-
திருமதி கு. அருந்ததியும்
மக்களும்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



பிறப்பு 23 - 06 - 1947

இறப்பு 14 - 08 - 2003

அமரர்
# கணேசலிங்கம் நவரட்ணம்

அனைத்தும் அறுசுவையுண்டி
கொடுத்து ஆரோக்கிய
நினைந்துருக வைத்த எங்கள்
குலவிளக்கே ~ உங்களை
கணேசு என்று எல்லோரும்
அன்பாக அழைப்பரே
என்னே என்றுரைப்போம்
நாம் உம் இழப்பை ஆற்றாமல்
ஆற்றுகின்றோம் ஆண்டவன்
அடியில் உங்கள் அடைக்கலத்தை.

இன்று (13.09.2003) சனிக்கிழமை நடைபெறவுள்ள அன்னாரது அந்தியேட்டி நிகழ்விலும் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

எங்கள் குடும்பத் தலைவரது இறுதிக்கிரியைகளில் கலந்தும், தந்தி, தொலைபேசி, கடிதம் மூலமும் அனுதாபச் செய்திகள் வழங்கியும் எம்முடன் இருந்து எல்லாவகை உதவிகளையும் புரிந்து எங்களுடன் கரம்கோர்த்த அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

- குடும்பத்தினர்.

*29, குளப்பிட்டி ஒழுங்கை,*
*கொக்குவில்.*

(சி-30116) (24-16-13-21)

## பதவி வெற்றிடம்

### பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) பளை

கணக்காளர் பதவி (165/88-9)

மேற்குறிப்பிட்ட பதவிக்கு தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தையும் மேலதிக விவரங்களையும் ரூபா 10/= செலுத்தி சங்க அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

01) தகைமைகள்

அ) கூட்டுறவுப் பணியாளர் 1ஆவது சம்பளத்தில் கணக்காளர்/ உள்ளகக் கணக்காய்வாளர் பதவியில் 3 வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இறுதித் தேர்வுடன் அங்கீகரிக்கப்பட்ட வாணிப கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வுத் துறையில் மேற்பார்வை மட்டத்தில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர (உயர்தரம்)/க. பொ. த. உயர்தரத்தில் கணக்கியல் உட்பட 3 பாடங்களில் சித்தியுடன் கணக்கியல்/கணக்காய்வுத் துறையில் 6 வருடங்களுக்குக் குறையாத மேற்பார்வைமட்ட அனுபவம்.

02) வயதெல்லை

18-45 வரை, (கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரிபவர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது)

03) சம்பள அளவுத்திட்டம்

5000 - 7300 / 110x10 - 120x10 (சுற்றறிக்கை இல. 31/99இற்கு அமைவாக)

04) பிணை

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுப்பிரமாணத்திற்கமைவாகவும், நெறியாளர் குழுவின் தீர்மானத்திற்கமையவும் கோரப்படும் பிணை செலுத்தப்பட வேண்டும்.

குறிப்பு:- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 24.09.2003 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ, நேரடியாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையில் இடதுபுற மேல் மூலையில் "கணக்காளர் பதவி விண்ணப்பம்" எனக் குறிப்பிடவும். தற்போது கூட்டுறவுச் சேவையிலுள்ளோர் தமது விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம்,
பளை.

(C-30128)(21-16-13)

# இஸ்ரேலைக் கலங்கடிக்கும் 'ஹமாஸ்'

**விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்கும் ஏகாதிபத்தியவாதிகளின் பேராசைக்கு பெரும் சவாலாக ~ எவருக்கும் விலைபோகாது ~ போராடும் அமைப்பு ஒன்று பற்றிய கண்ணோட்டமே இது.**

மேற்குலக நாடுகளும், அடக்குமுறை அரசுகளும் ஓர் அமைப்பினைப் பயங்கரவாதப் பட்டியலில் சேர்ப்பதும், அதே அமைப்பை, அது சார்ந்த மக்கள் தம்மைப் பாதுகாக்கும் சட்டபூர்வ ஆயுதப் படையாகக் கருதுவதும் உலகில் இன்று வழமையாகிவிட்ட ஒன்று. அத்தகைய ஓர் அமைப்பே பலஸ்தீன மக்களிடையே செல்வாக்குப் பெற்றுள்ள 'ஹமாஸ்' இயக்கம்.

மேற்குக்கரை மற்றும் "காஸா" பகுதிகளில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பிற்கு எதிரான பலஸ்தீனர்களின் எழுச்சி ஆரம்பித்தபோது, சுமார் 15

**ஹமாஸின் இலச்சினை**

ஆண்டுகளுக்கு முன்னர் உருவான 'ஹமாஸ்'' இயக்கம் இன்று பலஸ்தீனர்களுக்கான சக்திவாய்ந்த போராட்ட அமைப்பாக உருவாகியுள்ளது.

பலஸ்தீனப் பிரதேசங்களில் நிலைகொண்டுள்ள இஸ்ரேலிய படைகளையும் இஸ்ரேலியக் குடியேறிகளையும் வெளியேற்றுவதற்கு குறுகிய காலத்திட்டத்தின் அடிப்படையில் செயற்படுகிறது ஹமாஸ் அமைப்பு. பலஸ்தீனப் பிரதேசத்தில் உள்ள இஸ்ரேலியப்படையினர் மற்றும் குடியேறிகள் மீது தாக்குதல்களை நடத்துவதன் மூலமும், இஸ்ரேலினுள்ளேயே இஸ்ரேலிய மக்களுக்கெதிரான தாக்குதல்களை நடத்துவதன் மூலமும் பலஸ்தீனப் பிரதேசங்களிலிருந்து இஸ்ரேலிய படைகளை விரட்டியடிக்கும் தமது குறுகிய கால திட்டத்தை நிறைவேற்றலாம் என "ஹமாஸ்'' இயக்கம் நம்புகின்றது.

சரித்திரகால பலஸ்தீனப் பிரதேசங்களில் மீண்டும் இஸ்லாமிய அரசொன்றை நிறுவுவதை தமது நீண்டகால நோக்காகக் கொண்டு "ஹமாஸ்" இயக்கம் செயற்பட்டு வருகின்றது.

பெரும்பாலான பலஸ்தீனப் பிரதேசங்கள் -1948ஆம் ஆண்டு இஸ்ரேலிய நாடு உருவானதிலிருந்து - இஸ்ரேலின் எல்லைக்குள் அடங்கியுள்ளன. இந்தப் பிரதேசங்களை விடுவிப்பதே பலஸ்தீனர்களின் இலட்சியமாக உள்ளது.

அரசியல் பிரிவு மற்றும் இராணுவப்பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கிய ஹமாஸ் அமைப்பில் எத்தனை பேர் உள்ளனர் என்பதை சரியாக எவரும் கணிக்கவில்லை. போராளிகளை மட்டுமன்றி ஆயிரக்கணக்கான ஆதரவாளர்களையும் ஹமாஸ் இயக்கம் கொண்டுள்ளதே அதன் பலமாகும்.

"ஹமாஸ்" இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு 15ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி 2002 ஆம் ஆண்டு காஸாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின்போது திரண்டிருந்த நாற்பதாயிரத்திற்கும் அதிகமான மக்கள் மத்தியில் - பார்வையிழந்த - பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட -"ஹமாஸ்" இயக்கத்தின் ஆன்மீகத் தலைவர் "ஸேக் அஹ்மட் ஜாஸ்சின்'' பேசினார். அப்போது அவர், இஸ்ரேல் நாடு 2025 ஆம் ஆண்டளவில் அழிக்கப்பட்டுவிடும் என உறுதி கூறினார்.

"ஹமாஸின்" செயற்பாடுகள் இரு வகைப்படுகின்றன.

✦ பாடசாலைகள், வைத்திய சாலைகள், இஸ்லாமியப் பாடசாலைகள் போன்றவற்றை அமைப்பது உட்பட பல்வேறு சமூகப்பணிகளில் ஈடுபட ஒரு பிரிவு உள்ளது.

✦ இதேசமயம், இராணுவ நடவடிக்கைகளையும் தீவிரவாதத் தாக்குதல்களையும் மேற்கொள்வதற்கு, இரகசியமாக செயற்படும் ஆயுதம் தரித்த 'இஸெடின் அல் கஸம் படையணி எனும் ஒரு பிரிவும் "ஹமாஸில்" செயற்படுகிறது.

பலஸ்தீனப் பிரதேசத்தின் வெளியேயும் "ஹமாஸ்'' அமைப்பு பரந்து செயற்படுகிறது. முன்னர் ஜோர்டானில் செய்யப்பட்ட இந்த அமைப்பின் ஒரு கிளையிலிருந்த அதன் முக்கிய தலைவர்களில் ஒருவரான "காலித் மெஸல்" என்பவரைக் கொல்ல 1997 ஆம் ஆண்டு இஸ்ரேல் மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்தது.

ஜோர்டானில் "ஹமாஸ்'' இயக்கம் செயற்படுவதை ஜோர்டானின் மன்னராக இருந்த ஹுசைன் கண்டு கொள்ளாமலே இருந்தார். ஆயினும், அவரை தொடர்ந்து ஆட்சிக்கு வந்த மன்னர் "அப்துல்லா'' "ஹமாஸ்'' அமைப்பின் அலுவலகத்தை ஜோர்டானில் மூடியதுடன் அதன் முக்கிய உறுப்பினர்களை கட்டார் நாட்டிற்கு நாடு கடத்தினார்.

அமெரிக்க ஆதரவுடன் பலஸ்தீனம் மற்றும் இஸ்ரேல் இடையே ஏற்படுத்தப்பட்ட "ஒஸ்லோ" ஒப்பந்தத்துக்கு கடும் எதிர்ப்பை ஹமாஸ் இயக்கம் வெளிப்படுத்தியது. இதுவே அந்த இயக்கத்தை சர்வதேச அரங்கில் வெளிச்சத்துக்கு கொண்டுவந்தது.

ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனப் பிரதேசங்களிலிருந்து படிப்படியாக இஸ்ரேலியர் வெளியேறுவது என்ப

**மதுமதி**

தும் - அதற்குப் பதிலாக இஸ்ரேலியரின் பாதுகாப்பை பலஸ்தீனர்கள் உறுதிப்படுத்துவது என்பதும் - ஒஸ்லோ ஒப்பந்தத்தின் பிரதான அம்சங்களாக இருந்தன.

இஸ்ரேல் முழுமூச்சாக மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கைகளாலோ, "ஒஸ்லோ'' ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவான அரபாத்தின் புதிய பலஸ்தீன தேசிய அதிகார சபையின் நடவடிக்கைகளாலோ "ஹமாஸ்" இயக்கத்தை ஒடுக்கமுடியவில்லை. தற்கொலைத் தாக்குதல்களை நடத்துவதன் மூலம் 'ஒஸ்லோ' ஒப்பந்த முயற்சிகளைச் சீர்குலைப்பதில் "ஹமாஸ்'' இயக்கம் வெற்றி கண்டது.

"ஹமாஸின்'' வெடிகுண்டு தயாரிப்பு நிபுணர் "யஹ்யா அய்யாஸ்'' 1995ஆம் ஆண்டு இஸ்ரேலியப் படையினரால் கொல்லப்பட்டார். இதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக 1996 ஆம் ஆண்டு "பெப்ரவரி'' மற்றும் "மார்ச்'' மாதங்களில் இஸ்ரேலில் பல தற்கொலைத் தாக்குதல்களை நடத்தி அறுபதிற்கும் அதிகமான இஸ்ரேலியர்களை "ஹமாஸ்" இயக்கம் கொன்றது. இந்தக் குண்டுத் தாக்குதல்களால் அதிர்ச்சியுற்ற இஸ்ரேலியர்கள் "ஒஸ்லோ'' ஒப்பந்தத்தைக் கடுமையாக எதிர்க்கும் கடும்போக்கு வலதுசாரி வேட்பாளர் "பெஞ்சமின் நெத்தன் யாகூ''வை ஆதரிக்க நேர்ந்தது. இந்த அளவிற்கு ஹமாஸ் அமைப்பு இஸ்ரேல்மீது தாக்கத்தை ஏற்படுத்தியது.

"ஒஸ்லோ'' உடன்படிக்கையின் பின்னர் இடம்பெற்ற சமாதான முயற்சிகளில் 'காம்ப் டேவிட்' உச்சிமாநாடு முக்கியமானதாகும். அமெரிக்காவின் அதிபராக இருந்த பில்கிளின்ரனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற "காம்ப் டேவிட்"உச்சி மாநாடு தோல்வியில் முடிந்தது. இதனைத் தொடர்ந்தே "ஹமாஸ்'' இயக்கத்தின் வலுவும் செல்வாக்கும் அதிகரித்து வருகிறது. வயதான யஸீர் அரபாத் மற்றும் அவரது பலஸ்தீன அதிகார சபை



'ஹமாஸ்' அமைப்பின் கொடியுடன் ஊர்வலம் செல்லும் பலஸ்தீன மாணவர்கள்.

ஆகியவை பலவீனமடைந்து வருவதாகவே பெரும்பாலான பலஸ்தீனர்கள் நம்புகின்றனர். இதனால் இஸ்ரேலிய எதிர்ப்பில் உறுதியாக உள்ள "ஹமாஸ்'' இயக்கத்துக்கு அவர்கள் ஆதரவு தெரிவிக்கின்றனர்.

இஸ்ரேல் இராணுவத்தால் முற்றுகையிடப்பட்ட பலஸ்தீன நகரங்களிலும் அகதி முகாம்களிலும் உள்ள பலஸ்தீனர்களுக்கு கல்வி மற்றும் மருத்துவ வசதிகளை அளிப்பதிலும்"ஹமாஸ்" இயக்கம் பெரும் பங்களிப்பை வழங்கிவருகிறது. இச்சேவையானது அதிகாரமற்ற பலஸ்தீன தேசிய அதிகாரசபையால் தாம் கைவிடப்பட்டதாக நினைக்கும் பலஸ்தீன மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக உள்ளது.

அரசியல் ரீதியில் நசுக்கப்பட்ட பெரும்பாலான பலஸ்தீனர்கள், "ஹமாஸி"னாலும் அதன் சக போராட்டக் குழுக்களான "இஸ்லாமிய ஜிகாத்" மற்றும் "அல் - அகுசா தியாகிகள் படைப் பிரிவு ஆகியவற்றாலும் நடத்தப்படும் தற்கொலைத் தாக்குதல்களை ஆதரிக்கிறார்கள்.

பலஸ்தீனர்கள், தங்களுக்கு இஸ்ரேலியரால் ஏற்படும் இழப்புக்களுக்கும் மேற்குக்கரை மற்றும் காஸா பகுதிகளில் பலஸ்தீன மக்களின்



'ஹமாஸ்' போராளி.

நியாயபூர்வமான உரிமைகளை மதிக்காமல் இஸ்ரேல் விடாப்பிடியாக மேற்கொண்டுவரும் குடியேற்றங்களுக்கும் பழிவாங்குவதற்கு "ஹமாஸின்'' போராட்ட நடவடிக்கைகளே சரியான பதிலடி என்று பெரும்பாலான பலஸ்தீனர்கள் நம்புகிறார்கள்.

பலஸ்தீனப் பிரதேசங்களில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்புகள் தொடர்வதாலும் அப்பிரதேசங்களில் இஸ்ரேலிய இராணுவத்தினரால் பலஸ்தீனர்கள் கொல்லப்படுவதாலும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்றைச் செய்ய "ஹமாஸ்'' இயக்கம் எப்போதும் தயக்கம் காட்டியே வருகின்றது.

பொதுமக்களைக் கொல்வதற்கு பழி வாங்குவதென்றால் பொதுமக்களையே கொல்லவேண்டும் என்ற "ஹமாஸ்'' இயக்கத்தின் சித்தாந்தம் மேற்குலக நாடுகளுக்கு வேண்டுமானால் பயங்கரவாதமாக இருக்கலாம். ஆனால், இஸ்ரேலிய இராணுவத்தால் தினம் தினம் கசக்கிப்பிழியப்படும் பலஸ்தீனர்களுக்கு அதுவே விடியலை ஏற்படுத்தும் வேதவாக்காக உள்ளது. "ஹமாஸ்'' மீதான இந்த நம்பிக்கை பலஸ்தீனர்களுக்கு இருக்கும்வரை அமெரிக்கவினாலோ அல்லது அதன் செல்லப்பிள்ளையான இஸ்ரேலினாலோ "ஹமாஸ்" இயக்கத்தை எதுவும் செய்து விட முடியாதென்றே தோன்றுகிறது. ✳

# சுகாதாரத் திணைக்கள ஊழியருக்கு!

சுகாதாரத் திணைக்களத்தில் மூன்று வருட சேவையைப் பூர்த்தி செய்து பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஊழியர்கள் பயிலுநர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் என வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள பொதுச் சுற்றறிக்கை தெரிவித்துள்ளது.

மருந்தாளர்கள், மருத்துவ இரசாயன கூட தொழில்நுட்பவியலாளர், பௌதிக சிகிச்சையாளர், எக்ஸ் கதிராளர், தொழில் சிகிச்சையாளர், கண் தொழில்நுட்பவியலாளர், பூச்சியியல் [illegible]ளர், பல் தொழில்நுட்பவிய[illegible] சிகிச்சையாளர், [illegible] சுகாதார [illegible] சுகாதார சேவை[illegible] இரசாயன[illegible] தடிப்புப் பதிவாளர் [illegible] இயக்[illegible] பணிகளுக்கே [illegible] சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

மேற்கூறிய பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிப்போர் ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் மூன்று விஞ்ஞானப் பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் விண்ணப்பிக்கும் பயிற்சி நெறிக்கு குறிப்பிட்ட விஞ்ஞான பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருக்க வேண்டும்.

இப்பயிற்சி நெறியைப் பின்பற்ற விரும்பும் ஊழியர்கள் மேலதிக விவரங்களை யாழ். சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனையில் பார்வையிட்டு விண்ணப்ப படிவங்களை அவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் -

விண்ணப்பம் அனுப்பவேண்டிய இறுதித்திகதி இம்மாத 19 ஆம் திகதி எனவும் -

சம்பந்தப்பட்ட சுகாதார சேவை நிறுவனத் தலைவர்களுக்கு யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனை அறிவித்துள்ளது.(ஒ-51)



மூளைவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான உடுவில் 'ஆர்க்' பயிற்சி நிலையத்தின் புதிய கட்டடத்தை யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார் நாடாவை வெட்டித் திறந்துவைத்த போது எடுக்கப்பட்ட படம். கட்டட வேலைகளைச் செய்துகொடுத்த அகதிகளுக்கான ஐ.நா.தூதரக யாழ்ப்பாண முதன்மை அதிகாரி கே. முராட்டா, அருட்சகோதரி அன்சில்லா ஜேம்ஸ் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். *(படம்: வலிகாமம் தெற்கு செய்தியாளர்)*

# செய்திக் கொத்து

## ஆனைக்கோட்டை பாடசாலைக்கு பரிசு

யாழ்ப்பாணம்,செப்.13

அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இப்போட்டிகள் அண்மையில் கொழும்பில் நடைபெற்றன.

(ஒ-10-100)

## முன்பள்ளிகளுக்கு உபகரணங்கள்

யாழ்ப்பாணம்,செப்.13

வலி. வடக்கு பிரதேச சபையின் கீழ் இயங்கும் 28 முன்பள்ளிகளுக்கு கற்பித்தல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கென ஒருலட்சத்து 35 ஆயிரத்து 800 ரூபா சபையினால் ஒதுக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ஒ-10-150)

## தளபாடங்கள் விநியோகம்

யாழ்ப்பாணம்,செப்.13

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் குடாநாட்டில் புனரமைக்கப்பட்ட பாடசாலைகளுக்குத் தளபாடங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரையில் புனரமைக்கப்பட்டுள்ள 55 பாடசாலைகளில் அநேகமான பாடசாலைகளுக்கு இவை வழங்கப்பட்டுவிட்டதாக நிறுவன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ஒ-10-88)

## நாடகப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,செப்.13

'கியூடெக்' நிறுவனத்தின் அனுசரணையுடன் கரித்தாஸ் மற்றும் 'செடெக்' நிறுவனங்கள் இணைந்து யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் கடந்த சனிக்கிழமை நடத்திய சிறுவர் நாடகப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்டச் சிறுவர்களின் 'அவங்க பேசமாட்டாங்க' என்னும் நாடகம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

இரண்டாம் இடத்தை கொழும்புத்துறைச் சிறுவர்களின் 'என்னைக் கண்டு கொள்ளே' என்னும் நாடகமும் மூன்றாம் இடத்தை இளவாலைச் சிறுவர்களின் 'விடியலை நோக்கி' என்னும் நாடகமும் பெற்றுக்கொண்டன. (ஒ-10-30)

## குருக்களுக்கு கௌரவம்

வலி.தெற்கு,செப்.13

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ சர்வேஸ்வர ஸ்ரீகாந்தக் குருக்களுக்கு, சுழிபுரம் ஐயனார் தேவஸ்தான அறங்காவலர் சபையினர் "கிரியா தத்வ நிதி" என்ற பட்டம் வழங்கி, தங்கப் பதக்கம் அணிவித்து கௌரவித்துள்ளனர்.

சுழிபுரம் ஐயனார் தேவஸ்தானத்தில் இவ்வருடம் நடைபெற்ற அலங்காரத் திருவிழாவினை சிறப்பாகச் செய்து முடித்தமையைப் பாராட்டி ஸ்ரீகாந்தக் குருக்களுக்கு பட்டமும் பதக்கமும் வழங்கப்பட்டன.

மேற்படி தேவஸ்தான அறங்காவலர் சபையின் சார்பாக சீரணி நாகபூஷணி அம்மன் தேவஸ்தான பிரதமகுரு பிரம்மஸ்ரீ பாலசண்முகக் குருக்கள், ஸ்ரீகாந்தக் குருக்களுக்கு பட்டம் வழங்கி தங்கப் பதக்கம் அணிந்து கௌரவித்தார். (ஒ-152)

## அச்சுவேலி திரேசா முதலிடம்

யாழ்ப்பாணம்,செப்.13

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையே அண்மையில் நடைபெற்ற சிறுவர் நாடகப் போட்டியில் அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரி முதலிடத்தைப் பெற்றுள்ளது.

இதன்மூலம் இக்கல்லூரி வலய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது. (ஒ-10-11)

## விளக்குதட்டுப்பட்டு சிறுவன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம்,செப்.13

குப்பிவிளக்குத் தட்டுப்பட்டதால் எரிகாயங்களுக்கு உள்ளான சிறுவன் 7 நாள்களின் பின்னர் உயிரிழந்துள்ளான்.

யாழ். ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையைச் சேர்ந்த நவாஸ் முஸ்தபா நஸ்ரின் (வயது - 9) என்ற சிறுவனே உயிரிழந்தவனாவான். (ஒ-10-4)

# முக்கிய அறிவித்தல்

## சன்மானம் 2 லட்சம்

யாழ்.வீதி, மானிப்பாயிலுள்ள பிறேம் நகைமாடம் கடந்த 16.08.2003 சனிக்கிழமை இரவு கடை பூட்டியிருந்த நேரத்தில் கொள்ளையிடப்பட்டுள்ளது. ஒரு லட்ச ரூபா ரொக்கப் பணமும் 45 லட்ச ரூபாவுக்கு மேல் பெறுமதிவாய்ந்த நகைகளும் களவு போய்விட்டன. இது பற்றிய சரியான தகவல் தருபவர்களுக்கு 2 லட்ச ரூபா சன்மானமாக வழங்கப்படும்.

பிறேம் நகைமாடம்,
யாழ் வீதி, மானிப்பாய்.

இ. பிறேமகுமார்,
சேச்லேன், கூளாவடி,
ஆனைக்கோட்டை.

021 222 3178

செல்போன் நம்பர்: 0777 060327
0777 174895
0777 241485

(22534) (21-12-19)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திரு.கந்தையா கணேசதாஸ்

எமது நிலைய கட்டடத்தை முன்னின்று அமைத்துத் தந்தவரும எமது கிராம மக்களுக்குப் பல்வேறு சேவைகளைப் புரிந்து வருகின்றவருமான கிராம சேவையாளர் திரு.க.கணேசதாஸ் கிராம சேவையாளர் தரம்I இற்கு பதவியுயர்வு பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டுவதோடு, அவரது சேவை இன்னும் தொடரவும் அவர் பல்லாண்டு காலம் வாழவும் வாழ்த்துகின்றோம்.

*அளவெட்டி வடக்கு.* (22535)

ஞான வைரவர்
சனசமூக நிலையம்.

(21-12-19)

## நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரைவுள்ளது)

## பொது முகாமையாளர் பதவி வெற்றிடம் நிரந்தரம்
101/08

மேற்படி பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து (இருபாலாரும்) வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களைச் சுயமாகத் தயாரித்து *தலைவர், நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கம், நெடுந்தீவு* என விலாசமிட்டு கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பப்படல் வேண்டும்.

1. சம்பளம்:
   கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 31/99 இற்கு அங்கீகாரம் கிடைத்தவுடன் புதிய சம்பளத்திட்டம் வழங்கப்படும்.
   5500 - 8200
   130x10 - 140x10
2. தகைமைகள்:
   அ. கூட்டுறவுப் பணியாளர் 7 ஆவது சம்பளத்திட்டத்திலான பதவியின் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 8 ஆவது சம்பளத்திட்டத்தில் மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 6 வருடங்களுக்குக் குறை யாத அனுபவம்.
   அல்லது
   ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான தகைமையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.
   அல்லது
   இ. கூட்டுறவுப் பணியாளர் உயர் தராதரப்பத்திரம்/க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் 3 பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 6 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.
3. வயதெல்லை:- 18-45
4. தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன் அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல், விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.
5. விண்ணப்ப முடிவு திகதி: 2003.09.30

தலைவர்
*நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கம்.*

(C/30143) (25-12-19)

## நிதி ஒதுக்கீடு

தெல்லிப்பழை, செப்.13

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் 2003ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் வலி.வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களினதும் முன்பள்ளிகளினதும் அபிவிருத்திக்காக 8 லட்சத்து 63 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.(ம-150)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியருக்கு!

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் பணியாற்றும் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் அனைவரையும் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு சகல ஆவணங்களுடனும் தென்மராட்சி கல்வி வலயப் பணிமனைக்கு வருகை தருமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராஜா கேட்டுள்ளார்.(ஒ-10)

## வல்வை ஆஸ்பத்திரிக்கு பொருள்கள் அன்பளிப்பு

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலைக்கு வல்வெட்டிததுறையைச் சேர்ந்த பொதுமக்களால் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் வர்த்தகம் புரிந்து வரும் ரி.முரளிதரன் என்பவர் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தொலைகாட்சிப்பெட்டி ஒன்றையும், அதனுடன் இணைந்த உபகரணங்களையும் வழங்கியுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் வசித்து வரும் கிருஷ்ணசாமி அருளானந்தசாமி என்பவர் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்து வகைகளை அன்பளிப்புச் செய்துள்ளார்.

உடுவிலில் வசித்து வரும் தங்கம் பொன்னம்பலம் அவசர நோயாளிகளை இருத்திக்கொண்டு செல்வதற்கான நவீன வசதிகளுடன் கூடிய தள்ளு வண்டி ஒன்றையும் வழங்கியுள்ளார். (ம-173)

## வீதிகள் புனரமைப்பு

தெல்லிப்பழை,செப்.13

உலக உணவுத்திட்டத்தின் கீழ் வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஆறு கிராம வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

பொதுமக்களின் உதவியுடனேயே இந்த வீதிகள் புனரமைக்கப்படும். உதவும் பொதுமக்களுக்கு உலர் உணவுகள் வழங்கப்படும்.

குட்டியபுலம் வீதி, குட்டியபுலம் மகா வித்தியாலய வீதி, அளவெட்டி சாமத்தியங்கூடல் ஒழுங்கை, அளவெட்டி கருவப்புலம் வீதி, அளவெட்டி பந்துப்பனையடி வீதி, கட்டுவன்புலம் வீதி ஆகிய வீதிகளே கிறவல் மண் இடப்பட்டு பொதுமக்களின் உதவியுடன் செப்பனிடப்படவுள்ளன. (ம-150)

## தென்மராட்சி ச.ச.நிலைய பிரதிநிதிகளுக்கு!

கைதடி,செப்.13

தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி மற்றும் செயற்பாடுகள் சம்பந்தமான மிகமுக்கிய கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற இருப்பதாகவும் -

இக்கலந்துரையாடலில் சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரை தவறாது கலந்துகொள்ளுமாறும் - தென்மராட்சிக்கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.கலைவாணன் கேட்டுள்ளார். (ஒ-75)

## சமுர்த்தி அலுவலர்க்கு பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், செப்.13

யாழ்.குடாநாட்டிலுள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்கள், முகாமையாளர்கள் ஆகியோர்களுக்கான பயிற்சி நெறி பிரதேச செயலர் பிரிவு ரீதியாக பலாலிகொடை "சமண" பயிற்சி நிலையத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்று சனிக்கிழமை தொடக்கம் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை கரவெட்டி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த சமுர்த்தி உத்தியோகத்தர்கள், முகாமையாளர்களுக்கு இப்பயிற்சிநெறி இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து இப்பயிற்சி நெறி பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த சமுர்த்தி உத்தியோகத்தர்கள் முகாமையாளர்களுக்கு நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-173)

# 45ஆம் நாள் நினைவஞ்சலி



## சுப்பிரமணியம் சுரஷ்கரன்

மலர்வு 02.02.1980
உதிர்வு 31.07.2003

என்னையும் பிள்ளையையும் ஏங்கித் தவிக்கவிட்டு
மண்தனை நீர் விட்டுச் சென்றது தானேனோ?
அன்னையவள் தேர் பார்த்து அகமகிழ்ந்த நாளன்று
அண்ணனவன் உம்மைப் பிரித்திட்ட தேனோ?
உங்களின் இறுதிக் கடன் கூடச் செய்யவில்லை.
உரிமையுடன் உம்மை அணுகவும் முடியவில்லை!

86, குகன் வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.

உங்களின் நினைவில் வாழும்:
மனைவி: சுமித்திரா. மகள்: சாருண்யா.

(22542) (21-19-12)

# ஈராண்டில் எழும் விம்மல்

மலர்வு 28 - 05 - 1934



உதிர்வு 05 - 09 - 2001

## திருமதி கார்த்திகேசு இரத்தினம்
(முதலாம் வட்டாரம், புங்குடுதீவு)
திதி: 13.09.2003

ஆசைக்கு மூத்த மகளாய், அன்பிற்குச் சகோதரியாய்
பாசம் பரிந்தெடுத்த அன்புத் தாயாய்,
நல்ல மனையாளாய்,
மூன்றெழுத்துத் தெய்வமான முத்தான அம்மாவே!
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஈராண்டு சென்றாலும் எம்துயர் ஆறாது
உங்கள் நினைவு மட்டும் எம்மனதில்
என்றும் நீங்காது நின்று நிலைத்திருக்கும்!

*143, சிவப்பிரகாசம் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (22532) (25-12-19)

தாய், கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## பொன்னம்பலம் சுவாமிநாதர்

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்துவந்தவருமாகிய பொன்னம்பலம் சுவாமிநாதர் (இளைப்பாறிய மாக்கெட் முகாமையாளர்) 09.09.2003இல் இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுவாமிநாதர், செல்லமுத்துப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து, பார்வதிப்பிள்ளையின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான விக்னராசா, மனோன்மணி, கண்மணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற இராஜசோதி, சுவாமிநாதர்(சாமி கனடா) மற்றும் சிவநாதன் (சிவா - கனடா), பரமநாதன் (பரம் - கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் வடிவேலு (திருகோணமலை), சாரதாதேவி (கனடா), சத்தியா (கனடா), திருமகள்(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் விநாயகமூர்த்தி, தபோதினி, கஜதேவி, மணிமாறன், சிவசுந்தர், பாலநாதன், குணேஷ், ஜனேஷ், தருணி, பிரசாந்த், பிரவீன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான இரத்தினம், முருகையா, இராசநாயகம், ஆனந்தநடராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிறிராஜதேவி (U.K.), சிறிராஜஸ்கந்தன்(U.K.), சிறிராஜசுந்தரி(U.K.), கனநாந்தன் (U.K.), சச்சிதானந்தன்(U.K.), நவானந்தன்(U.S.A.)ஆகியோரின் அன்புத் தாய்மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் OGDEN FUNERA HOME இல் நாளை (14.09.2003) ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியிலிருந்து 9 மணிவரை அஞ்சலிக்காகப் பார்வைக்கு வைக்கப்பட்டு, நாளைமறுதினம் (15.09.2003) திங்கட்கிழமை காலை 9இல் இருந்து 11 மணிவரை HIGHLAND MEMMORY GARDENS இல் இறுதிக் கிரியைகள் நடைபெற்றுப் பின்னர் தகனம் செய்யப்படும.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சுன்னாகம்:
021 222 6337
070 212 709

திருகோணமலை:
026 2223460

மகன்மார் - கனடா:
சாமி - 905/8289307
சிவா - 416/4931756
பரம் - 416/5108916

(22540) (25-12-19-21)

## வல்லிபுரம் ஆழ்வாப்பிள்ளை

கோவில்சந்தை, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் ஆள்வாப்பிள்ளை (கடை ஆள்வாப்பிள்ளை) கடந்த புதன்கிழமை (10.09.2003) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருமைநாயகத்தின் அன்புக் கணவரும் சாந்தரூபன் (லண்டன்), சாந்தினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சி.முருகதாஸ் (ஜேர்மனி) சா.சுமதி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் சப்தகி, காயு, தாகினி ஆகியோரின் அன்புத் தாத்தாவும் சி.பத்தினிப்பிள்ளை, சி.பரமேஸ்வரி, காலஞ்சென்ற A.V. கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.09.2003) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வேரோண்டை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோவில் சந்தை,*
*கரவெட்டி.* (22544) (12-19-21)

தகவல்:
பிள்ளைகள்.

# தமிழ்க் குடும்பஸ்தர்கள் இரண்டு பேர் வெலிக்கடை நீதிமன்றால் விடுதலை

கொழும்பு,செப்.13

தமது உடைமைகளில் வெடி பொருள்களை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டின பேரில் கைதுசெய்யப் பட்டுத் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ்க் குடும்பஸ்தர்கள் இருவர் விடு தலை செய்யப்பட்டுள்ளனர்.

அன்ரன் எட்வர்ட் ரொசய்ரோ, தங்க ராஜா சில்வெஸ்ரர் அன்ரனி ஆகிய மட்டக்களப்புவாசிகளுக்கு எதிராக வெலிக்கடை விசேட நீதிமன்றில் விசா ரணை செய்யப்பட்டு வந்த வழக்கில் இவ்விருவரும் விடுதலை செய்யப்பட் டுள்ளனர்.

இவர்களின் உடைமைகளிலிருந்து கைப்பற்றப்பட்டவை என்று தெரி விக்கப்பட்ட சான்றுப் பொருள்களில் சிலவற்றைச் சமர்ப்பிக்க முடியாமல் இருப்பதாகவும் -

பகுப்பாய்வுக்கு அரசாங்க இரசா யன பரிசோதகர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்த சான்றுப் பொருள் களில் சிலவற்றைக் கண்டுபிடிக்கமுடி யாமல் இருப்பதாகவும் -

இக்காரணத்தினால், எதிரிகளுக்கு எதிரான வழக்கைத் தொடர்ந்து நடத்த முடியாத நிலையில் தாம் உள்ளதா கவும் -

அரச சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தார். எனவே, எதிரிகளுக் கெதிரான குற்றச்சாட்டுப் பத்திரத்தை தாம் வாபஸ் பெறுவதற்கு விரும்புவ தாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனையடுத்து, எதிரிகளை விடு தலை செய்ய நீதிபதி உத்தரவிட் டார்.

எதிரி தரப்பில் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா, சட்டத்தரணி ஜெயதேவி இராயப்புவின் அனுசரணையுடன் ஆஜ ராகியிருந்தார்.

சான்றுப் பொருள்கள் சில சமர்ப் பிக்கப்படாத காரணத்தால் இவ்வழக்கு விசாரணை பல தடவைகள் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது என்பது குறிப் பிடத்தக்கது.

2001ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி மட்டக்களப்பில் வைத்து கைதுசெய்யப்பட்ட எதிரிகள் இருவரும் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டு முத லில் தடுப்புக் காவலிலும், தொடர்ந்து நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்க மறியலிலும் வைக்கப்பட்டிருந்தனர்.

(ஐ)

## தபாலகத்துக்கு தொலைபேசி வசதி தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.13

நல்லூர் பொதுச்சந்தைக்கு அருகே இயங்கும் நல்லூர் உப தபாலகத் துக்கு தொலைபேசி இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

நல்லூர் வன்னியசிங்கம் பொதுப் பணிமன்றம் இது தொடர்பாக அஞ் சல் அதிகாரிகளுக்கும், ஸ்ரீலங்கா ரெலி கொம் நிறுவனத்துக்கும் கடிதங் களை அனுப்பியுள்ளது.

நகருக்கு அடுத்தபடியாக பெரும் எண்ணிக்கையான மக்கள் அஞ்சல் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் இந்த உபதபால் நிலையத்துக்கு கால தாமதம் இன்றி தொலைபேசி இணைப்பு வழங்கப்படவேண்டும் என்றும் வன் னியசிங்கம் பொதுப்பணிமன்றம் கேட் டிருக்கிறது.

(ஐ)

## சாயி சேவா நிலையத்தில் நாளை இரத்ததானம்

யாழ்ப்பாணம்,செப்.13

செப்ரெம்பர் 14ஆம் திகதி பக வான் ஸ்ரீ சத்யசாயி பாபாவினால் உலகளாவிய இரத்ததான தினமா கப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதனை ஒட்டி நாளை ஞாயிற்றுக் கிழமை யாழ். பகவான் ஸ்ரீசத்யசாயி சேவா நிலையத்தில் இரத்ததான நிகழ்ச்சி இடம்பெறவுள்ளது.

காலை 9.00மணிமுதல் நண் பகல் வரை யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கியினர் அங்கு வருகை தந்து இரத்தம் சேகரிப்பர்.

சாயி நிலைய தொண்டர்களும், பொதுமக்களும் இரத்ததானம் செய்ய லாம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கி றது.

(ஐ)

## ஆனைப்பந்தி வித்தியாலய பரிசுத்தினம்

யாழ்ப்பாணம்,செப்.13

ஆனைப்பந்தி மெ.மி.வித்தியா லய வருடாந்த பரிசுத்தினமும் 175 ஆவது ஆண்டு நிறைவு மலர் வெளி யீட்டு விழாவும் இன்று சனிக்கிழமை முற்பகல் 9.15 மணிக்கு வித்தியா லய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் எஸ்சோமேஸ் வரபிள்ளை தலைமையில் நடை பெறும் இந்நிகழ்வுகளில் முதன்மை விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார்.

ஆண்டு மலரின் வெளியீட்டுரையை யாழ். மத்திய கல்லூரியின் மூத்த ஆசிரியர் ஞான. திருக்கேதீஸ்வர னும், மதிப்பீட்டுரையை யாழ். பல் கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையா ளர் கலாநிதி கி.விசாகரூபனும் நிகழ்த்துவர்.

(ஒ-5-6)

## அம்பாறை மாவட்ட நிலைமைகள் குறித்து நோர்வே தூதுவர் ஆராய்வு

நோர்வேத் தூதுவர் ஹன்ஸ் பிரட்ரீசர் கடந்த புதனன்று அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்து அந்த மாவட்ட நிலைமைகளைப் பார்வை யிட்டார். அம்பாறை செயலகத்தில் மேலதிக அரச அதிபர் அசங்க அபய வர்த்தன தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலிலும் தூதுவர் கலந்து கொண்டார். அம்பாறை மாவட்டத்தின் நிலைமைகள், அரசியல், சமாதான, பொருளாதார நிலைமைகள் ஆகியன இக்கலந்துரையாடலில் ஆராயப்பட் டன என்று மேலதிக அரச அதிபர் தெரிவித்தார்.

## மக்கள் முகம்



வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் செயலாளராக கடமையாற்றிய செல்லையா குகதாசன் 30.07.2003 இல் இருந்து ஓய்வுபெற்றுள்ளார். இவர் தொடர்ந்து 33 வருடங் கள் உள்ளூராட்சி சேவையில் பல்வேறு மாவட்டங்களில், பல்வேறு பதவிகளில் கடமையாற்றி ஈற்றில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையில் கடந்த 16 வருடங்களாக தொடர்ந்து கடமை புரிந்தார். இவர் விநாயகர் வீதி, நல்லூர் வடக்கை பிறப்பிடமாகவும் செல்லர் வீதி, நல்லூரினை வதிவிடமாகவும் கொண்டவர். இவர் யாழ். செங்குந்தா இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம், செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபை, நல்லூர் வடக்கு சனசமூக நிலையம் ஆகியவற்றின் தலைவராகவும், நல்லூர் வடக்கு சந்திர சேகரப்பிள்ளையார் ஆலய அறங்காவலர் சபையின் பொருளாளராகவும், நல்லூர் பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசத்தின் உப செயலாள ராகவும் கடமைபுரிந்து வருகின்றார். (ஐ)

★ ★ ★ ★



யாழ்ப்பாணம், ஓட்டுமடம் வீதியைச் சேர்ந்த செல்லத் துரை - அரியமலர் தம்பதியரின் புதல்வன் பிரசாத் 'லண்டன் நிதிக்கணக்காளர்' நிறுவனத்தின் நிதிக் கணக்காளர் (FINANCIAL ACCOUNTANT) பரீட்சையில் தேறி பட்டம் பெற்றுள்ளார்.

உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரியான இவர், யாழ். போதனா வைத்தியசாலையின் தற்போதைய சிரேஷ்ட முகாமைத்துவ உதவியா ளரும், யாழ். பரியோவான் கல்லூரி பழைய மாணவருமாவார். (ஐ-15)

★ ★ ★ ★



வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கிளிநொச்சி - வேலணை ஆகிய இடங்களில் நீண்டகாலமாக வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றி வருபவரும் மருத் துவ எழுத்தாளருமாகிய கந்தசாமி ஜெயச்சந்திரமூர்த்தி நீதி அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட் டுள்ளார். மருத்துவப் பட்டதாரியான இவர், வேலணையிலும் கிளிநொச்சியிலும் பல்வேறு சமய, சமூக சேவைகளிலும் ஈடுபட்டு வருகின்றார். இவர், வேலணை ஐக்கிய உதயமலர் சனசமூக நிலையம், வேலணை ஐக்கிய விளையாட்டுக் கழகம் என்பவற்றின் ஸ்தாப கருமாவார்.

★ ★ ★ ★



மட்டுவில் வடக்கைச் சேர்ந்த பி. வேலுப்பிள்ளை யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் அண்மையில் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக சத்தி யப்பிரமாணம் செய்துகொண்டார். ஓய்வுபெற்ற எழுது வினைஞரான இவர், மட்டுவில் வடக்கு சங்கராச்சாரிய சுவாமிகள் ஆச்சிரமம், திருப்புகழ் சுவாமிகள் ஆச்சிரமம் ஆகியவற்றின் தலைவரும், அகில இலங்கை வள்ளுவர் மகா சபையின் உபதலைவரும், மட்டுவில் வடக்கு ஐக்கிய நெசவுத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், மட்டுவில் மத்தி கிராம அபிவிருத்திச் சங்கம், மட்டுவில் வடக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அபிவி ருத்திச் சங்கம் மற்றும் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் ஆகியவற் றின் முன்னாள் தலைவருமாவார். (ஐ-5)

★ ★ ★



சுழிபுரம், பண்ணாகத்தைச் சேர்ந்த ஆயுர்வேத வைத்தி யர் செ.வைத்திலிங்கம் அண்மையில் சமாதான நீதிவானாக நியமனம் பெற்று பதவியேற்றுள்ளார். சிறந்த சமூக சேவை யாளரான இவர், சமய சேவையும் செய்து வருவது குறிப் பிடத்தக்கது.

(ஐ)



பி.பி.ஸி. உலக சேவை நடத்திய, உலகக் கிண்ணக் கிரிக்கெட் பரிசில் போட்டியில் வெற்றியீட்டிய சண்டிலிப்பாய் மாகியப்பிட்டியைச் சேர்ந்த பொன் னம்பலம் ஸ்ரீதரனுக்கு பி.பி.ஸியின் ஆசிய பசுபிக் பிராந்திய பொறுப்பாளர் பரிலாங்றிட்ஜ், பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

அருகில் தமிழோசைப் பொறுப்பாளர் ரீ.மணிவண்ணன், சிங்கள சேவையான சந்தேஷிய பொறுப்பாளர் பிரியத் லியனகே ஆகியோரும் உள்ளனர்.

## காலத்தை வென்ற கல்வியாளன்

பேராசிரியர் முத்துலிங்கத்தை அறியாதவர்களை நம்மிடையே காணல் அரிது. நமது நாட்டில் மட்டு மல்ல, பிறநாடுகளிலும் தனது பெயரை அற்புதமாய் நிலைநாட்டிக் கொண்ட ஓர் அருமனிதர் அவர். கல்வியியல் பற்றி சிந்திக்கின்ற எவரும் பேராசி ரியர் முத்துலிங்கத்தை ஒருபோதும் முற்று முழுதாகத் தவிர்த்துவிட முடி யாது. அந்த அளவுக்கு கல்வித்துறை யிலே தனது வேர்களை ஆழப்பதித்து, கிளைகளை அகல விரித்து நிற்கின்ற ஓர் அற்புத விருட்சமவர்.

1928ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதி சாதாரண குடும்பமொன் றிலே சதாசிவம் - சாரதாம்பாள் தம் பதிகளின் மகனாக முத்துலிங்கம் பிறந்தார். குடும்பத்தின் வறுமை தன் குழந்தையின் கல்வியை ஒருபோதும் பாதித்து விடக்கூடாது என்பதில் இவ ரது அன்னையர் மிகவும் பிடிவாதமா யிருந்தார். அதன் பயனாக வறுமை யின் மத்தியிலும் கல்வி கற்பதற்கான வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. இவர் தனது ஆரம்பக் கல்வியினை தன் சொந்த ஊரான திருநெல்வேலி யிலுள்ள செங்குந்த இந்துக் கல் லூரி மற்றும் சன்மார்க்க வித்தியா சாலை, யாழ். இந்துக் கல்லூரி ஆகியவற்றில் மேற்கொண்டு பேரா தனைப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி தனது பட்டப் படிப்பினை மேற்கொண்டார். தனது பட்டப் படிப் பினை மேற்கொண்ட இவர், ஏறத் தாழ நான்காண்டுகள் யாழ். இந்துக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகப் பணியாற் றினார். பின், இலங்கைப் பல்கலைக் கழகத்தில் கல்வியியல் விரிவுரையா ளராக இணைந்துகொண்டார். பின் அங்கிருந்து லண்டன் பல்கலைக்கழ கம் சென்று விஞ்ஞானத்துறையில் தனது முதுமாணிப் பட்டத்தினைப் பெற்றுக்கொண்டார். அத்தோடு, கல்வி உளவியலில் பல ஆய்வுகளை மேற்



கொண்டு தனது கலாநிதிப் பட்டத் தினையும் லண்டன் பல்கலைக்கழத் திலேயே பெற்றுக்கொண்டார்.

லண்டனிலிருந்து நாடு திரும்பிய இவர், கொழும்புப் பல்கலைக்கழகத் தில் விரிவுரையாளராகவும் கல்வியி யல் துறைத் தலைவராகவும் பணி யாற்றினார்.

பேராசிரியர் முத்துலிங்கம் அவர் கள் கல்வி உலகுக்கு ஆற்றிய பணிகள் அளவிடற்கரியவை. கல்வி யியல் ஓர் அறிமுகம், கல்விப் புள்ளி விபரவியல், கல்வி உளவியல் பாகம் 1, பாகம் 2 போன்ற இவரது நூல் கள் விலைமதிப்பற்ற அரும் பொக்கி ஷங்களாகும். இந்நூல்கள் தமிழில் மாத்திரமன்றி, ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளிலும் வெளியானமை குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும். ஒரு பெரு விருட்சத்தின் நிழலில் வேறெந்த விருட்சமும் தளைக்காது என்பது விதி. ஆனால், பேராசிரியர் முத்துலிங் கம் என்ற பெரு விருட்சத்தின் நிழ லில் பல விருட்சங்கள் முளைத்திருக் கின்றன; தழைத்திருக்கின்றன. ஆம். இன்று பெரும் கல்வி விருட்சங்களாக ஓங்கி நிற்கின்ற பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் சபா ஜெயராசா, பேராசிரியர் க.சின்னத் தம்பி, பேராசிரியர் சந்திரசேகரம், கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை போன்றோர் இவரது மாணாக்கர்கள் என்பது இங்கு குறிப்பிடவேண்டிய ஒரு விடயமாகும்.

முத்துலிங்கம் ஒரு கல்வியியல் பேராசிரியர், கல்வி உளவியலாளர் என்பதற்கப்பால் அவர் ஒரு சிறந்த கர்நாடக இசைக் கலைஞர் என்பது நம்மில் பலருக்குத் தெரியாத ஒரு விடயம். சங்கீதத்தை அவர் முறை யாகக் கற்றுக்கொள்ளவில்லைத்தான். ஆனாலும், தனது சொந்த முயற்சி யால் கேள்வி ஞானத்தால் அவர் கர்நாடக சங்கீதத்தை நிறையவே கற்றிருந்தார். அதன் நுணுக்கங்கள் பற்றி நன்கு அறிந்திருந்தார். 1980 களில் இலங்கை வானொலியின் பகுதிநேர இசைக் கலைஞராகப் பணி யாற்றி வானொலியில் பல இசைக் கச்சேரிகளை நிகழ்த்தினார். அமெ ரிக்காவில் வாழ்ந்த காலத்தில் அங் கும் பல இசை நிகழ்ச்சிகளை நிகழ்த்தி யுள்ளார்.

### நீத்தார் நயப்புரை

24.08.2003 அன்றுதான் சற்றும் எதிர்பாராத அந்தத் துயரச் செய்தி வந்தது. "பேராசிரியர் முத்துலிங்கம் காலமானார்" என்ற அந்தச் செய்தி இடியாய் வந்து தாக்கியபோது எண் ணற்ற இதயங்கள் ஒருகணம் அதிர்ந் தன. ஆம் அந்த அறிவுச்சுடர் தனது எழுபத்தைந்தாவது பிறந்தநாளுக்கு ஒருநாள் முன்னதாகவே அமைதியாய் அணைந்துவிட்டது. அந்த அற்புத மனி தரின் பருவுடல் இன்று இந்தப் பாரி னில் இல்லை. "நம்மவர்; நம் நாட்ட வர்" என்றெல்லாம் கூறி நாம் பெருமை யுற்றுவந்த அந்தப் பேராசான் இன்று நம் மத்தியில் இல்லை. இருந்தா லும், புகழ்பெற்ற கல்வியாளர்கள் வரிசையில் அவரது நாமம் நிச்சயம் என்றும் ஒளிர்ந்துகொண்டிருக்கும்.

**ஆ.ரவீந்திரன்,**
**ஆசிரியர், யா/கனகரத்தினம்**
**ம.ம.வி.**

## ஈழத்துக் கூத்து விழாவின் மூன்றாம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,செப்.13

யாழ். திருமறைக் கலாமன்றம் நடத்தும் ஈழத்துக் கூத்து விழாவின் மூன்றாம் நாள் நிகழ்வின் பகல் நிகழ்வுகள் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். மறைக்கல்வி நடு நிலைய மண்டபத்தில் இடம்பெறு கின்றன.

மங்கள விளக்கை அண்ணாவி யார் அ.பாலதாஸ் ஏற்றிவைப்பார். வர வேற்புரையை செல்வி வைதேகி வைகுந்தநாதன் நிகழ்த்துவார்.

இதனைத் தொடர்ந்து 'யாழ்ப்பா ணப் பிரதேசக் கூத்து மரபுகள்' என் னும் தலைப்பில் யோ.யோண்சன் ராஜ்குமாரும் 'வட்டுக்கோட்டைக் கூத்து மரபு' என்னும் தலைப்பில் பொன்னையா இரவிச்சந்திரனும், 'வடமராட்சிக் கூத்து மரபு ஓர் அறிமுகம்' என்னும் தலைப் பில் பா.இரகுவரனும் கருத்துரைகளை வழங்குவார்கள்.

மதிய இடைவேளையின் பின் ஆரம்பமாகும் நிகழ்வில் 'யாழ்ப்பா ணத் தென்மோடி நாட்டுக் கூத்து மரபு' என்னும் தலைப்பில் எஸ்.அமிர்த நாயகம், யோண்சன் ராஜ்குமார் ஆகி யோரும் 'சித்து நடைக்கூத்து மரபு' என்னும் தலைப்பில் அருந்தவநாதனும் கருத்துரைகளை வழங்குவார்கள்.

இரவு நிகழ்வுகள் மாலை 6.45 மணிக்கு திருமறைக் கலாமன்ற அரங் கில் ஆரம்பமாகும். ஆரம்ப உரையை யாழ். பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனனும், சிறப்புரையை பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் செயலாளர் செல்லையா மெற்றாஸ் மயிலும் நிகழ்த்துவர். இதனைய டுத்து, யாழ். திருமறைக் கலாமன்றம் வழங்கும் 'கம்பன் மகன்' தென்மோடி நாட்டுக்கூத்தும், வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திக் குழுவி னர் வழங்கும் 'கீசகன் வதை' வட மோடி நாட்டுக்கூத்தும் நடைபெறும்.

(ஒ-8)

# சார்க் பிராந்திய சம்மேளனத் தலைவராக மகாசிவம்

சார்க் பிராந்திய ஆசிரிய சங்கங்களின் சம்மேளனத் தலைவராக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் தமகாசிவம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 19 ஆசிரியர் தொழிற்சங்கங்கள் அங்கம் வகிக்கும் மேற்படி சம்மேளனத்தின் மாநாடு அண்மையில் கொழும்பு ஹோட்டல் ரேணுகாவில் நடைபெற்றது. மாநாட்டில் தெரிவான நிருவாகக்குழு மகாசிவத்தை சம்மேளனத் தலைவராகத் தெரிவு செய்துள்ளது.

கடந்த 5 வருடங்களாகத் தலைவராகக் கடமையாற்றிய இந்தியாவைச் சேர்ந்த ராஜேஸ்கன்னா, சர்வதேச கல்வியகத்தின் கொள்கை நடைமுறைகளுக்கு மாறாகச் செயற்பட்டதனால் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். இப்பதவியை இலங்கை வகிப்பது இதுவே முதல் தடவையாகும்.

## நிதி ஒதுக்கீடு

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு ஒரு லட்சம் ரூபா ஒதுக்கியுள்ளார்.

(ஐ-150)

# விளையாட்டுச் செய்திகள்

யாழ்ப்பாணம்,செப்.13

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் "மாவீரர்கள் ஞாபகார்த்தமாக நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு வதிரி பொமர்ஸ விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வாட்டத்தில் கொற்றாத்தை சிவானந்தா வி.கழகமும், இளவாலை சென்.ஹென்றிஸ் வி.கழகமும் மோதும்.

இதற்கு முன்னர் இடம் பெறும் காட்சிப்போட்டியில் வன்னி மாவட்ட தெரிவு அணியும், வடமாராட்சி தெரிவு அணியும் மோதவுள்ளன. (ஒ-5-70)

★ ★ ★

கைதடி வளர்மதி சனசமூக நிலையம் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள பற்றிய விவரம்-

மலை 4.30 மணி-கைதடி குமார நகர் வி.க. "பி" அணி எதிர் கைதடி உதயசூரியன் வி.க."பி"அணி.

கைதடி சரஸ்வதி வி.க."பி" அணி எதிர் கைதடி துர்க்கா வி.க."ஏ" அணி. (ஒ-5-75)

★ ★ ★

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டங்கள் இன்று இரவு 7 மணிக்கு கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெறவுள்ளன.

விளையாட்டுக் கழகத் தலைவர் சி.சாந்தகுமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் வே.க. கணபதிப்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

**செற்அப்**

இரவு 7 மணி - அச்சுவேலி ஸ்ரீ விக்கினேஸ்வரா வி.க. எதிர் ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க.

**ஓவர் கேம்**

இரவு 7.30 மணி-புத்தூர் கலைமதி வி.க. எதிர் வரணி இளைஞர் வி.க. (ஒ-5-110)

★ ★ ★

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி மைதானத்தில் இடம் பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு.

**14 வயதுப் பிரிவு**

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி எதிர் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.

சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம் எதிர் அராலி இந்துக் கல்லூரி.

தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம் எதிர் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி.

சுன்னாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம் எதிர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

**16 வயதுப்பிரிவு**

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம் எதிர் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் எதிர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி.

சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி எதிர் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்.

**18 வயதுப்பிரிவு**

அராலி இந்துக்கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி. (ஒ-5)

★ ★ ★

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியால்ய மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

**14 வயதுப் பிரிவு**

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம் எதிர் கோண்டாவில் இராமகிருஷ்ணன் மகா வித்தியாலயம்.

செங்குந்தா இந்துக் கல்லூரி எதிர் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்.

**16 வயதுப்பிரிவு**

செங்குந்தா இந்துக் கல்லூரி எதிர் கோண்டாவில் இராமகிருஷ்ணன் மகா வித்தியாலயம்.

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம் எதிர் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம். (ஒ-5,86)

## சமய சந்நிதியில்

யாழ்ப்பாணம், செப்.13

யாழ். பிறவுண் வீதி ஸ்ரீபத்திரா காளி அம்மன் ஆலய இரதோற்சவம் இன்று முற்பகல் 11மணிக்கு இடம்பெறவுள்ளது.

காலை 9 மணிக்கு அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து விசேட மண்டப பூசையும் நடைபெற்று முற்பகல் 11மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணிப்பார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை அம்பாளின் கும்பாபிஷேக தின சங்காபிஷேகம் இடம்பெறும்.

(ஒ-10)

★ ★ ★

யாழ். வண்ணை காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாணர் விக்னேஸ்வராப் பிள்ளையார் கோயில் கும்பாபிஷேக தின மணவாளக்கோல விழாவும் சங்காபிஷேகமும் இன்று முற்பகல் 11 மணிக்கு இடம்பெறும்.

(ஒ-10)

★ ★ ★

கோண்டாவில் வடக்கு சாமுண்டா தேவி சமேத ஸ்ரீஞானவைரவப் பெருமான் ஆலயத்தில் நாளைமறுதினம் திங்கட்கிழமை மகாபரணி பூசை இடம்பெறவுள்ளது.

காலை 6.00மணியளவில் விசேட பூசைகள் இடம்பெற்று திருவீதி உலா இடம்பெறும்.

(ஒ-10-49)


## பங்குதாரர் தேவை

போட்டோ அன் வீடியோ மிக்சிங் தொலைக்காட்சி விவரணப் படங்கள் தயாரிப்பில் தன் ஆர்வம் உள்ள இளைஞர் ஒருவரைப் பங்கு தாரராக இணைத்துக்கொள்ள விரும்புகின்றோம்.

இணைய விரும்புபவர் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

க.நடராசா,
18, விபுலானந்தர் வீதி,
புங்கன்குளம், கொழும்புத்துறை.

(22547) (29-11-17-31)



யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)
Jaffna District Private Lorry Owner's Co-Operative Society(Ltd.)

## முக்கிய அறிவித்தல்

எமது சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட பாரவூர்தி உரிமையாளர்கள் அனைவரும் வன்னிப் பகுதியில் இருந்து மணல் ஏற்றுவதற்காக தங்கள் பாரவூர்திகளை இன்றிலிருந்து சங்கத்தில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன். மணல் தேவைப்படும் பொதுமக்கள் எமது சங்கத்துடன் தொடர்புகொண்டு நியாய விலையில் மணலைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதனை அறியத்தருகின்றேன்.

*215,பழைய பூங்காவீதி,*
*யாழ்ப்பாணம்.*

க.சின்னத்தம்பி
கௌரவ செயலாளர்.

தொலைபேசி இலக்கம்-021-222 5628

(22546) (29-11-17-31)



## முயற்சி - திறன் விருத்தி மையம்
## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்

TRRO

### புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பம்

இளைஞர் யுவதிகளின் எதிர்கால வாழ்வை வளம்படுத்தல் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எமது நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்ற பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு புதிதாக மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பயிற்சி நெறி | தகைமைகள் | பயிற்சிக் காலம் |
|---|---|---|
| தமிழ் தட்டச்சு | G.C.E. O/L சித்தியடைந்திருத்தல் தமிழ் - C | 6 - மாதம் |
| ஆங்கிலத் தட்டச்சு | G.C.E. O/L சித்தியடைந்திருத்தல் ஆங்கிலம் - C | 6 - மாதம் |
| உடையமைத்தலும் வர்ணம் தீட்டுதலும் | G.C.E. O/L வரை கற்றிருத்தல் வேண்டும் | 6 - மாதம் |
| வயறிங் றீவைண்டிங் | G.C.E. O/L வரை கற்றிருத்தல் வேண்டும் | 6 - மாதம் |
| தட்டச்சு சுருக்கெழுத்து | G.C.E. O/L சித்தியடைந்திருத்தல் தமிழ் - C | 6 - மாதம் |
| புத்தகம் கட்டுதல் | G.C.E. O/L வரை கற்றிருத்தல் வேண்டும் | 3 - மாதம் |
| T.V., Radio பழுது பார்த்தல் | G.C.E. O/L வரை கற்றிருத்தல் வேண்டும் | 6 - மாதம் |

இப்பயிற்சி நெறிகள் நடைபெறும் இடங்கள் : யாழ்ப்பாணம், இணுவில், சில்லாலை

விண்ணப்ப முடிவு திகதி : 22.09.2003

குறிப்பு : இப்பயிற்சி நெறியை கற்கவிரும்புபவர்கள் சுயமாகத் தயாரித்து விண்ணப்பப் படிவங்களை அனுப்புவதுடன் எதிர்வரும் 22.09.2003 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு தலைமை அலுவலகத்திற்கு சமுகம் தருமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

**விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:**

தலைவர்
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
106, 4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(சி-30141) (31-11-17)



## பெண் வேலையாள் தேவை

Photo Shop and Photo Editing (Printing)இல் அனுபவமுள்ளவர் உடனடியாக தேவை. உரிய ஆவணங்களுடன் 14.09.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கீழக் காணும் முகவரிக்கு நேரில் சமுகம் தரவும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

*Address:*

North Com World
No. 415, Navalar Road, Jaffna.
Office : T.P. No. : 021- 2226092.

(22552) (31-11-17)



## உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



13-09-2003 இன்று பிறந்ததின விழாக்காணும் கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி மாணவியான செல்வி மனோகரன் கோசலை கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சையில் சாதனை படைத்துள்ளார். இவர் கலைப்பிரிவில் மூன்று பாடங்களிலும் அதிவிசேட (3A) சித்தியைப் பெற்றதோடு மாவட்ட மட்டத்தில் 4ஆம் இடத்தையும் அகில இலங்கை ரீதியாக 5ஆம் இடத்தையும் பெற்றுள்ளார். தமிழ்மொழி மூலமான தரப்படுத்தலில் இவர் முதலிடத்தைப் பெற்றுள்ளார். இவர் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் 10Dகளைப் பெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் கல்லூரியின் விவாத அணியின் அங்கத்தவராக இருந்து கடந்த வருடம் நடைபெற்ற அகில இலங்கை தமிழ் மொழித்தினப் போட்டியிலும் முதலிடத்தைப் பெற்றுள்ளார். இவர் யா/சுன்னாலை காசிநாதர் வித்தியாலயம், யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை என்பவற்றின் பழைய மாணவியும் மேல்மாகாண களுத்துறை மாவட்ட ஆசிரிய ஆலோசகர் திரு.மு.மனோகரன் கமலகுமாரி ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியுமாவார். இவரை மேன்மேலும் கல்வியில் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

மனமுடன் வாழ்த்தும்
பாசமுள்ள தம்பிகள்
அருணன் சகோதரர்கள்.

(C/30146) (32-11-17-31)



வடமாகாண மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

COLOMBO INTERNATIONAL BOOK FAIR-2003
at
SIRIMAVO BANDARANAYAKA MEMORIAL EXHIBITION CENTER
BMICH EXHIBITION & CONVENTION CITY
15th-21st September 2003

CO-SPONSOR

## JEYA BOOK CENTRE

*Stall Nos: A01, A02,A03,A04,A05,A06,A07& A08*

NEW ARRIVALS! LATEST EDITIONS!
Awide Range of Books on Display
at Discounted Prices

**Discount upto 25%**

Wholesale: Special Discount
Medical Books

FORUNDER GRADUATES & POSTGRADUATES ENGINEERING, COMPUTER STUDIES, MANAGEMENT, MARKETING, SCIENCE BOOKS, GENERAL BOOKS, INTERNATIONAL SCHOOL TEXT BOOKS, CHILDREN BOOKS, LADY BIRD BOOKS, DICTIONARY, CHILDRENS NOVELS AND MANY MORE.

## JEYA BOOK CENTRE

91-99, UPPER GROUND FLOOR,
PEOPLE'S PARK COMPLEX,
COLOMBO-11.
TELEPHONE :2438227
FAX :2332939
E-MAIL :tjeya@slt.lk

*BRANCH:*
688, GALLE ROAD,
COLOMBO-3
TELEPHONE:2580594
2505638

குறிப்பு: பொது நிறுவனங்கள், பாடசாலைகள், ஸ்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள் தங்களை உறுதிப்படுத்தும் அத்தாட்சிப்படுத்தல் கடிதம் கொண்டுவரின் கடனுக்குக் கொள்வனவு செய்யலாம்.

(சி-30142) (11-17)

## தெல்லிப்பழை கிறாஸ்கோப்பர்ஸ் விளையாட்டுக் கழகம்

தனது நிதி வளர்ச்சிக்காக நடத்தும்

### மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

காலம் : நாளை (14.09.2003) ஞாயிற்றுக்கிழமை
இடம் : கந்தரோடை சவாரித்திடல்.
பிரவேசம் : ரூபா 10/-

தெல்லிப்பழை. - கழகத்தினர்.

(22557) (31-11-14)

## நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம்

### கூறுவிலை கோரல்

கீழ்க்காணும் பொருள்கள் கேள்வி மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன.

1. அசோக் லேலண்ட் படகு எஞ்சின் கியர் பொக்ஸுடன் 90 கோஸ்பவர் RPM - 1500 HD - 90 ஓடக்கூடிய நிலையில்.
2. சக்தி இருசக்கர உழவுயந்திரம் கலப்பையுடன்.
3. பெரிய படகிலிருந்து கழற்றப்பட்ட வங்குகள்.

இவற்றை மேற்படி ப.நோ.கூ.சங்க தலைமைச் செயலகத்தில் பார்வையிடலாம்.

கேள்வி நிறைவு நாள் : 30.09.2003

கேள்வி விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
பொது முகாமையாளர்
நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம், நெடுந்தீவு.

(ச/30144) (25-11-14-31)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது யாழ்.கல்வி நிலைய சிங்கள ஆசிரியரும் சிறந்த சமூக சேவையாளரும் மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கச் செயலாளரும் தன்னலமற்ற சேவையாளருமான ஆசிரியர் திலகம்

### உயர்திரு. சு. லீலாகிருஷ்ணன்

அவர்கள் யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் திரு.பா.சுப்பிரமணியம் அவர்களின் முன்னிலையில் 18-08-2003இல் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்தமையையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியோடு அவரைப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

அவரது சேவை மேலும் தொடரவேண்டுமென்று இறைவனை வேண்டுகிறேன்.

JAFFNA TUITION CENTRE, ARUGALMADAM. - N.T.S. SUBANATHAN DIRECTOR -

(22553)(11-14-31)

## தேவை

புடைவை விற்பனையில் அனுபவமிக்க விற்பனையாளரும் அலுமினியக்கடைக்கு விற்பனையாளரும் தேவை. உடனே நேரில் வரவும்.

மில்லேனியம் பவுன் & பொம்பே பஜார்,
இல.10,11, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(சி-30151) (31-11-17)

## வாழ்த்து

சங்கானை மாவடி இளைஞர்/மகளிர் மன்றங்கள் இணைந்து நடத்தும் 4ஆம் வருட கலை விழாவை வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

'நிறைஞ்சனாஸ்
இரும்பகம்'
பிரதான வீதி, சங்கானை.

(சி-30155) (11-14-31)

## உடன் விற்பனைக்கு

19 கேஜ் தகடுகள் பொருத்தப்பட்ட புதிய சுருக்குக் கதவுகள் உடன் விற்பனைக்கு உண்டு.

16x9 1/2 (இரண்டு கதவுகள்)
8x9 1/2 (ஒரு கதவு)
சதுர அடி 275/=

தொடர்பு: இல.41, நாயன்மார் வீதி, நல்லூர்.
021 222 6826.

(22556)(11-14)

## லக்சுமி சினிமா இணுவில்

சரத்குமார், சிம்ரன், வடிவேலு மற்றும் பலர் நடிப்பில்

**அரசு** (ரீல்ஸ்)

(பு.தே.): 11.00, 3.00, 7.00

(22551)

## நாகம்ஸ் சுன்னாகம்

அருண்பாண்டியன், ஹரிஸ்ராகவேந்திரா, ராதிகாசவுத்திரி நடிக்க

**விகடன்** (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.தே.)

(C/29968)

## ராஜா யாழ்ப்பாணம்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

**நாளை** (தமிழ்)

காட்சி நேரம்:10.30, 2.30, 6.30, 9.30 (பு.தே.)

15.09 முதல் **அன்பு**

(C/29961)

## நிறைஞ்சனாஸ்

M.G.R., ஜெயலலிதா நடிக்க

**ராமன் தேடிய சீதை**

காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பு.தே.)

வெள்ளி, சனி, ஞாயிறு

**WISH MASTER** (ஆங்கிலப் படம்) இரவு 9.45 (பு.தே.)

(C/29960)


## SHARP

be sharp

உங்களது பழைய கறுப்பு/வெள்ளை [Black & White] அல்லது கலர் தொலைக்காட்சியை எங்களிடம் தந்து புத்தம் புதிய ஷார்ப் [SHARP] தொலைக்காட்சி ஒன்றை இன்றே எங்களிடம் பெற்றுக்கொள்ளுங்கள்.

ரூபா. **10,000/=** வரைக்கும் **விஷேட கழிவுடன்**

அதி உன்னத யப்பானிய தொழிநுட்பத்துடன் கூடிய ஷார்ப் (SHARP) தொலைக்காட்சியை 5 வருட உத்தரவாதத்தில் இன்றே வாங்குங்கள்.

இது ஓர் அரிய சந்தர்ப்பம்! நழுவ விட்டு விடாதீர்கள்!!

கடைசி கையிருப்பு உள்ளவரை மட்டுமே.

விவரங்களுக்கு
முகாமையாளர் :

### பிறவுண் அன்ட் கம்பனி

பிறவுண்ஸ் காட்சியறை:
இல. 89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 021-222 5150,
0777-110791

(C/30140)(12-15)


## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 13 - 02 - 1972

விண்ணில் 12 - 09 - 1995

விசேட வேவு புலிவீரன்

### கப்டன் கிருஸ்ணா [கோபால்]

(மாணிக்கம் சிவகிருஷ்ணன்)

திதி 13.09.2003

பாசமலர் ஒன்று மண்ணில் சாய்ந்தது.
பாசம் நிறைந்தோர் கதறி அழுதனர்
தேசமெங்கும் செந்நிலமானது
கருணை சொரியும் கதைகள் பேசினாய்
அண்ணன் அணியில் அரும்பங்கு ஆற்றினாய்
வீரத்தோடு நின்று சீர் ஐந்து வருடம் களம் பல கண்டாய்
மண்ணையே காதலித்த நீ அதற்காய்
மண்ணிலே விதையானாய்......
உயிர் விடுத்தனை உள்ளம் மறக்குமா?

ஆவரங்கால் கிழக்கு, புத்தூர். என்றும் நினைவில் குடும்பத்தினர்.

(22555)(32-11-14-31)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மண்ணில் விதையாக 01 - 07 - 1965

விண்ணில் சிதையாக 01 - 08 - 2003

திதி:13.09.2003 திருதியை

### திருமதி ஜெயராணி வரதராஜா (காங்கேசன்துறை)

(ஆசிரியர், யா/கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயம்)

அன்பின் சிகரம் ஜெயாவே -
வாண்மைத் தொழிலாம் ஆசிரியத்துவத்தை
வையத்தில் செய்து நீயும்
வாழ்ந்து வரும் வேளையிலே
வண்டமிழ் வதுவை விழாவின்
மூன்றாண்டு பூர்த்தியினை
கொண்டாடும் வேளையிலே
ஆத்மசாந்திப் பிரார்த்தனை
ஆற்றவைத்தானோ காலனவன்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்றைய தினம் 13.09.2003 சனிக்கிழமை எமதில்லத்தில் நடைபெறவுள்ளதால் அதில் கலந்துகொண்டு தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தூர்க்காமில் அருகில்,
பொன்னாலை வீதி,
மானிப்பாய்.

கணவர், தாய், மாமி, சகோதரர்கள், மைத்துனர்கள்.

(22561) (32-11-14-31)

## மரண அறிவித்தல்கள்

### சிவசுப்பிரமணியம் புவராஜா (புவா/ராஜ்)

(கோக்குவில் இந்துக்கல்லூரி 2000 (A/L) - வர்த்தகப்பிரிவு)

கலாசாலை வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் புவராஜா 11.09.2003 வியாழக்கிழமை கொழும்பில் அகாலமரணமானார்.

அன்னார் சிவசுப்பிரமணியம் (பண்டிதர்) - பரமேஸ்வரி (ஈஸ்வரி) தம்பதிகளின் அன்பு மகனும் பவானி (கனடா), பாமினி (கனடா) ஆகியோரின் அன்புத் தம்பியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4ஆவது ஒழுங்கை,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

தகவல் :
சிவசுப்பிரமணியம்
(தந்தை)

(22538) (31-11-14)

### சிவகுரு தங்கம்மா (சின்னம்மா)

காரைநகர் நடுத்தெருவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு தங்கம்மா நேற்று (12.09.2003) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுருவின் அன்பு மனைவியும் பொன்னம்பலம் தருமலிங்கத்தின் (மலாயன் பென்ஷனியர்) சகோதரியும் காலஞ்சென்றவர்களான பூபாலபிள்ளை, காசிப்பிள்ளை பரிமளம், செல்லமுத்து, நேசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.09.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

நடுத்தெரு,
காரைநகர்.

தகவல் :
பொ.தருமலிங்கம்
(சகோதரன் - மலாயன் பென்ஷனியர்)

(சி-30154) (31-11-17)

### சுப்பையா சபாரெத்தினம்

(ஓய்வுபெற்ற இறைவரித்திணைக்கள உத்தியோகஸ்தர், முன்னாள் உரிமையாளர் - வசந்தா மோட்டோர்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)

நுணாவிலைப் பிறப்பிடமாகவும் ஊரெழு மேற்கை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது லண்டனில் வாழ்ந்து வந்தவருமான சுப்பையா சபாரெத்தினம் அமெரிக்காவில் உள்ள மருத்துவமனையில் நேற்று (12.09.2003) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

தகனக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மிஷன் பாடசாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல் :
சு.தம்பித்துரை
(சகோதரன் - நொதேர்ன் மோட்டோர் வேக்ஸ் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.)

(22558) (31-11-17)

## திருமலை பாதுகாப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிக் பிராந்திய இராணுவக்குழு தயாரித்த திருகோணமலை நிலைவரம் குறித்த 'பெக்காம்' (Pacom) அறிக்கையையும் அரசு மறைத்துவிட்டது.

அரசுதான் அந்த இராணுவக் குழுவை அழைத்து திருகோணமலை குறித்து அறிக்கை ஒன்றைத் தயாரித்துத் தரும்படி கோரியது.

திருகோணமலைத் துறைமுகத்தைச் சுற்றி புலிகள் வியூகம் வகுத்துள்ளனர். புலிகளின் தற்கொலைப் படையினரும், கடற்படையினரும் தாக்குதல் நடத்தத் தயாராக உள்ளனர். திருகோணமலை படையினருக்கான விநியோகம் துண்டிக்கப்பட்டால் கடற்படையினரின் பலம் பூஜ்ஜமாகிவிடும் எனவே, இவற்றைக் கருத்திற்கொண்டு திருகோணமலையின் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று 'பெக்காம்' அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

மேலும், இராணுவத் தளபதி லயனல் பலகல்ல திருகோணமலை நிலைவரம் குறித்து பாதுகாப்பு அமைச்சுக்கு ஒரு வாரத்திற்கு முன்பு ஓர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு முன்னர் புலிகளின் ஐந்து முகாம்கள் அவசரத் தேவைக்கு அமைக்கப்பட்டு, பின் அகற்றப்படும் முகாம்களாக இருந்தன. ஆனால், இன்று அவை புலிகளின் பலம்மிக்க நிரந்தர முகாம்களாகிவிட்டன என்று இராணுவத் தளபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இராணுவத் தளபதியின் அறிக்கையின்படி, புலிகளால் மொத்தம் 22 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன எனத் தெரியவருகிறது.

இவற்றுக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய பாதுகாப்பு அமைச்சர், ஊடகங்கள் முன்வராமல் இருக்கின்றார். அவரே பாதுகாப்புத் தொடர்பான விடயங்களுக்கு விளக்கமளிக்கவேண்டும்.

- இவ்வாறு அமுனுகம கூறினார்.

**NEW SCIENCE COLLEGE**
மன்னாதிட்டி யாழ்நகர்
**A/L DAY**
Logic -S.R.J.சுதன்
திங்.,புத.,வெள்ளி-(10.a.m)
(22495) (29-11-14-17)

## அகாஷி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அழைக்கப்பட்டுள்ளனர்.

முற்பகல் 11.30 மணிக்கு அம்பாறை மாவட்ட தமிழர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு தலைமையிலான தமிழ்ப்பிரதிநிதிகளுடன் கல்முனை-கிறிஸ்ரா இல்லத்தில் அகாஷி சந்திப்பொன்றை நடத்துவார்.

நண்பகல் 12 மணிக்கு அம்பாறைக்கு விஜயம் செய்யும் அகாஷி, அமைச்சர் தயாரத்ன தலைமையிலான சிங்கள சமூகப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவார். பிற்பகல் 3 மணிக்கு அம்பாறை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிபபுக் குழுவினரை அவர் சந்திப்பார்.

## உறுதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கூடிய விரைவில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதற்கான சூழ்நிலை உருவாகி வருகின்றது எனவும், இவ்விடயத்தில் ஏற்படும் பிரச்சினைகளையும், சவால்களையும் சமாதானப் பேச்சின்போது சமரசமாகத் தீர்த்துக் கொள்ளமுடியும். அதற்கான பரிகாரமும் உண்டு எனவும் அகாஷி குறிப்பிட்டார். உங்களுடைய அழைப்பை ஏற்க மறுத்த புலிகளை மீண்டும் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடவைக்கமுடியும் என்ற நம்பிக்கை உங்களுக்கு உண்டா? புலிகள் பேச்சுக்கு மீண்டும வருவார்களா? என நிருபர்கள் கேள்வி எழுப்பினர். நிச்சயமாக அந்த நம்பிக்கை எனக் குண்டு.

உங்கள் மனதில் எது முக்கியம் என்று நினைக்கின்றீர்களோ அதே எண்ணம் என் மனதிலும் உண்டு என சுருக்கமாகப் பதில் அளித்தார் யசூஷி அகாஷி.

கிளிநொச்சிக்குச் சென்று புலிகளின தலைவர்களுடன் அபிவிருத்தி தொடர்பான முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடவிருப்பதாகவும் அகாஷி தெரிவித்தார.

கூட்டத்தின் இறுதியில் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:-

அடுத்த ஆலோசனைக் கூட்டம் 2004 ஆம் ஆண்டு நடுப்பகுதி இலங்கையிலே நடைபெறும். இன்று நடைபெற்ற தொடர் கூட்டத்தின் மறு அமர்வு இவ்வருட இறுதியில் நடைபெறும் அவசியம ஏற்படும பட்சத்தில் தூதுவர்கள் மட்டத்திலான கூட்டங்கள் இடைநடுவில் நடத்தப்படும்.

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிபரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்தப் படகோட்டிகள் மீது மேல நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பாக ஆராயப்பட்டு வருகிறது.

இந்தப் படகோட்டிகள் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராக தமிழகத்தில இருந்து சட்டத்தரணிகள் வரமுடியாத நிலை காணப்படுவதால், சட்ட உதவிச் சங்கம் மூலம் சட்டத்தரணி ஒருவரை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## பிணை மனு நிராகரிப்பு!

யாழ். கோயில் வீதியில் - செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அலுவலகத்துக்கு சமீபமாக உள்ள வீடுகளின கண்ணாடிகளை உடைத்து அட்டகாசம் புரிந்த சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஒன்பது நபர்களின் பிணைமனு யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜாவால் நிராகரிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 9 பேரையும் பிணையில் விடுமாறு கோரி நேற்று மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரணை செய்த நீதிவான், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனையவர்கள் தொடர்பான விவரங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும் பட்சத்தில், இவர் களைப் பிணையில் விடுவது குறித்து முடிவு செய்யலாம் எனத் தெரிவித்தார.

## போராளிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தழுவிக்கொண்டனர்.

இவர்களின் நினைவாக நேற்று நடைபெற்ற நிகழ்வு நினைவைபெட்டி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளும் இடம்பெற்றுள்ளன. (ஐ-ரி)

## கிழக்கின் பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாநாட்டிலேயே இந்த விரைத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விசேட அதிரடிப் படையின் ஒரு பிரிவாக 'பரா' பிரிவு அமைக்கப்படவிருக்கின்றது. இந்தப் பிரிவை அமைப்பதன்மூலம் அதிரடிப்படையை பலப்படுத்தமுடியும்.

பரந்த கிழக்குப்பிரதேசத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் விசேட அதிரடிப்படைக்கு 'பரா' பிரிவு ஒன்று அவசியம் தேவையாகவுள்ளது.

இந்தப் பிரிவை அமைக்க உதவிகளை வழங்க இத்தாலிய அரசு முன்வந்துள்ளது. அந்த உதவியுடன் விரைவில் இப்பிரிவு அமைக்கப்படும்.

யுத்தத்திலும் பாதுகாப்பு வியூகத்திலும் மாற்றங்களைச் செய்வதற்கான வேளைவந்துள்ளது. எங்கள் படைக்கு ஒழுக்கம் முக்கியமானது. ஒழுக்கமில்லாமல் எந்த அமைப்பும் தனது பெயரைத் தக்கவைக்கமுடியாது. புதிய பாதுகாப்புத் தேவைகளுக்காக அதிரடிப்படையை பலப்படுத்த வேண்டியுள்ளது - என்றார் அவர். (ஐ-3)


**இயந்திர இயக்குநர்கள்/ பயிலுநர்கள் தேவை**

'உதயன்' அச்சு இயந்திரப் பகுதியில் (OFF SET) கடமை புரிவதற்கு இயந்திர இயக்குநர்கள், பயிலுநர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். அனுபவம் உள்ளவர்களும், தொழில்பழக ஆர்வம் உள்ளவர்களும் உடனடியாக இணைத்துக்கொள்ளப்படுவர்.

சுய விவரங்கள் மற்றும் ஆவணங்களுடன் இன்று (13.09.2003) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் பிற்பகல் 3.00 மணிக்கும் இடையில் நேரில் வருகை தரவும்.

'உதயன் மனித வள சேவை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C-30156) (32-11-14-17)



**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்**

**வருடாந்தப் பொதுக்கூட்ட அறிவித்தல்**

எமது சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 21.09.2003 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.30 மணிக்கு - கல்லூரி ஞானவைரவர் ஆலயத்தில் இடம்பெறும் விசேட பூசையைத் தொடர்ந்து - கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்ச்சி நிரல்

1. இறைவணக்கம்
2. மௌனாஞ்சலி
3. சென்றகூட்ட அறிக்கை வாசித்தல்
4. செயலாளர் ஆண்டறிக்கை
5. பொருளாளர் கணக்கறிக்கை
6. தலைவர் உரை
7. புதிய உத்தியோகத்தர்கள் தெரிவு
8. அதிபர் உரை
9. பிரவிடயங்கள்
10. கல்லூரிக் கீதம்
11. நிறைவு

எமது சங்க யாப்புக்கு அமைய சங்க அங்கத்தவர்களும் அழைக்கப்பட்ட வெளியூர், வெளிநாட்டு பழைய மாணவர் சங்கங்களின் பிரதிநிதிகளும் மட்டும் கூட்டத்தில் கலந்துகொள்ளமுடியும்.

எமது சங்க யாப்பின் 3 ஆம் பிரிவின்படி சாதாரண அல்லது ஆயுள் உறுப்புரிமைக்கு உரிய முறைப்படி விண்ணப்பித்து அந்த விண்ணப்பம் ஆட்சிக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டாலேயே ஒருவர் உறுப்புரிமை பெறமுடியும் என்பதையும், அவ்வாறு ஆட்சிக்குழு அங்கீகரித்த திகதியிலிருந்து ஆறுமாதகாலத்தின் பின்னரே அவர் சங்கக் கூட்டங்களில் வாக்களிக்க உரிமையுண்டு என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

அங்கத்தவர்களுக்கு கூட்ட அறிவித்தல் அவர்களால் தரப்பட்ட விலாசத்திற்கு சாதாரண தபாலில் அனுப்பப்பட்டுள்ளது. 17.09.2003ஆம் திகதிக்கு முன்னர் அறிவித்தல் கிடைக்காத அங்கத்தவர்கள் அடுத்த மூன்று தினங்களும் மாலை 5மணிமுதல் 7 மணிவரை கல்லூரியில் உள்ள பழைய மாணவர் சங்க அலுவலக அறையில் சங்க நிர்வாகிகளைச் சந்தித்து அவற்றின் பிரதியைப் பெற்றுக்கொள்ளவும்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
பழைய மாணவர் சங்கம்.
ந.வித்தியாதரன்
(செயலாளர்).
10.09.2003.



**CHEMISTRY**
DIAS B.Sc. (Hons)
★ அலகு ரீதியான முழுமையான மீட்டல் வினாவிடை
74, Palaly Rd. Thirunelvely.
104/4, Cross Rd. Athiyady.
(22054) (29-11-17-14)



**K.T.C**
புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில்.
**Spoken English with GRAMMAR**
By: Y.JENTHAN
ஆரம்பம்:- 13.09.2003
சனிக்கிழமை.
நேரம்:- பிற்பகல் - 3.00.
(C-30139) (32-11-14-17)


**31ஆம் நாள் நினைவஞ்சலி**

தோற்றம்
1988 - 12 - 14



மறைவு
2003 - 08 - 14

**அமரர் சற்குணராஜா கமலதீபன்**

பள்ளி செல்லும் வயதில் தாய்தனை காலன் கவர
பாரினில் உன் சகோதரிகள் தலை நிமிர
தளராது கல்வி கற்று பார்த்தது போதுமென்றோ
தனித்து விட்டுச் சென்றாய்?
பரமனை வேண்டுகிறோம் உங்கள் ஆத்மசாந்திக்காய்!

தகவல்:-
சி.கனகரட்ணம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
மாமாமார், பெரியம்மாமார்,
அத்தைமார், பெரியப்பாமார்,
சகோதரர்மார், சித்தப்பாமார்,
மச்சான்மார், மச்சாள்மார், பேர்த்திமார்.

(22562) (32-11-14-17)

**மரண அறிவித்தல்**

**சிவசுப்பிரமணியம் புவராஜ் (ராஜ்)**

திருநெல்வேலி, கலாசாலை வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பு, கொட்டாஞ்சேனை சண் ஓடியோ, வீடியோ ஸ்தாபனத்தின் காசாளராகப் பணிபுரிந்தவருமான சிவசுப்பிரமணியம் புவராஜ் (ராஜ்) அவர்கள் 11.09.2003 அன்று கொழும்பில் அகால மரணமானார்.

அன்னார் சிவசுப்பிரமணியம் - பரமேஸ்வரியின் அன்பு மகனும் பவானி (கனடா), பாமினி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் லோகநாதன் (கனடா), சிவானந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கௌதம் (கனடா), சௌமிகா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டு அவரது பிறப்பிடமான யாழ்ப்பாணம், திருநெல்வேலி கலாசாலை வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சண் ஓடியோ,
வீடியோ ஸ்பொட்.
கொட்டாஞ்சேனை,
கொழும்பு.
(சி-30157) (11-14-17)

**விண்ணுலகில் ஆண்டுகள் மூன்று**

மூத்த வர்த்தகர்
**நாகசுந்தரம் ஏகாம்பரம்**
(நல்லூர் மார்க்கெட்)



அல்லும் பகலும் அயராது உழைத்து
எங்கள் நல்வாழ்வுக்கு
அடிப்படையாகினீர்கள்......
இன்றைக்கும் என்றைக்கும்
உங்கள் நினைவு
நிலைத்திடும் எங்கள் உயிரில்!

82, செல்லர் வீதி,
நல்லூர்.
தகவல்:
குடும்பத்தினர்.
எமக்காக
01.03.1943
தெய்வத்துள்
18.08.2000





புதிய பிரிவுகள் ஆரம்பம் : 13.09.2003
எதிர் காலம் பற்றிய கவலையா ? உங்கள் கவலையை விட்டுத்தள்ளுங்கள். ஆம் சர்வதேச அங்கீகாரம் பெற்றதும் யாழ் மாவட்டத்தில் கணனித்துறையில் பல்லாயிரம் மாணவர்களை உருவாக்கியதுமான எமது கணனி நிறுவனத்தில் இணைந்து கொள்ளுங்கள்

Diplomas
Dip. in Business Applications (MS Office)
Ms Word, Ms Excel, Ms Access, Ms Power Point, Internet & E. mail
Dip. in Desktop Publishing (அச்சுத்துறையில் வேலை வாய்ப்பு பெற்றிட)
Ms Word, Page Maker, Corel DRAW, Photo Shop
Dip. in Digital Science (Information Technology)
Ms Excel, Ms Access, Visual Basic, C++, Pascal, Internet & E. mail

Certificates
MS Word
MS Excel
MS Access
Visual Basic
Page Maker

**IBMS**
Institute of Business Management Studies
Head Office : 701, K.K.S. Road, Jaffna.
Branches : Nelliyady, Chavakachcheri.
TP: 021-222-3165




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.09.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

### ஜெய்ப்பூர் நிறுவனத்தின்

# செயற்கைக்கால் உற்பத்தி ஒக்ரோபர் முதல் சுண்டிக்குளியில்

யாழ். சுண்டிக்குளியில் புனரமைக்கப்பட்ட புதிய கட்டடத்தில் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் உற்பத்தி நிறுவனம் அடுத்த மாதம் முதல் வாரத்தில் மீண்டும் தனது பணிகளை ஆரம்பிக்கவுள்ளது.

இக்கட்டடத்தை ஜெய்ப்பூர் நிறுவனம் சொந்தமாகக் கொள்வனவு செய்து தனது தொழிற்பாட்டை ஆரம்பிக்கவுள்ளது. 1987ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம் 2000 ஆம் ஆண்டுவரை இப்பகுதியில் இயங்கிவந்தது.

2000 ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வை அடுத்து தற்போது இணுவிலில் இத்தொழிற்சாலை தற்காலிகமாக இயங்கிவருகிறது. இந்நிறுவனம் ஒக்ரோபர் மாதம்முதல் சொந்த இடத்தில் இயங்கவுள்ளதாக அதன் இயக்குநர் தெரிவித்தார்.

தற்போது இணுவில் அலுவலகத்தில் இருந்து தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் சுண்டிக்குளிக்கு மாற்றப்பட்டு வருவதால் அடுத்த இரு வாரங்களுக்கு இணுவில் அலுவலகம் மூடப்பட்டிருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

16 ஆண்டுகளுக்கு மேலாக ஊனமுற்றோருக்கு செயற்கைக் கால், முச்சக்கரவண்டிகள் மற்றும் இதர உதவிகள் என இந்நிறுவனம் சேவையாற்றிவருகிறது. (ஒ-30)

## பாடசாலை சென்ற சிறுவனுக்கு பாம்புக்கடி

தென்மராட்சி,செப்.13

பாலர் பாடசாலைக்குச் சென்ற சிறுவன் பாம்பினால் கடியுண்ட சம்பவம் கடந்த பத்தாம் திகதி பளை சோரன்பற்றில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த குகேந்திரன் சறோசன் (வயது 5) என்னும் சிறுவனே பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார். (ஒ-117)

## சமுர்த்தி வங்கி கட்டடத்துக்கு அடிக்கல் நடும் விழா

ஊர்காவற்றுறை பிரதேச சமுர்த்தி வங்கி கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9.00மணிக்கு நடைபெற உள்ளது. ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைப்பார்.

இந்த சமுர்த்தி வங்கிச் கட்டடம் ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு முன்பாக அமைக்கப்படவுள்ளது. (ஒ-73)

# தீவகப் படகுச் சேவைக்கு புதிய நேர அட்டவணை

ஊர்காவற்றுறை, அனலைதீவு, எழுவை தீவு ஆகியவற்றிக்கிடையிலான படகுச் சேவைகள் ஒழுங்கமைக்கப்பட்டு புதிய நேர அட்டவணை ஒன்று ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாகச் சீரற்றிருந்த படகுச் சேவைகளை ஒழுங்கமைக்கும் பொருட்டு ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் உதவி அரச அதிபர் தலைமையில் படகு உரிமையாளர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலையடுத்து புதிய நேர ஒழுங்குகள் அறிவிக்கப்பட்டன.

இதன் பிரகாரம் அனலைதீவில் இருந்து காலை 7.30 மணிக்கு புறப்படும் படகு எழுவைதீவு ஊடாக ஊர்காற்றுறையை வந்தடையும் இப்படகு பின்னர் ஊர்காவற்றுறையில் இருந்து காலை 9.30 மணிக்கு புறப்பட்டு எழுவைதீவு, அனலைதீவு ஊடாக நயினாதீவைச் சென்றடையும். அங்கிருந்து பிற்பகல் 1.30 மணிக்கு புறப்பட்டு அனலைதீவு, எழுவைதீவு ஊடாக பி.ப. 4 மணிக்கு ஊர்காவற்றுறையை வந்தடையும்.

மேலும் அனலைதீவில் இருந்து காலை 8.30 மணிக்கும், 9.30 மணிக்கும் புறப்படும் படகுகள் நேராக ஊர்காவற்றுறையை வந்தடையும். இவ்வேளையில் எழுவைதீவில் இருந்தும் காலை 9.30 மணிககு ஒரு படகு புறப்பட்டு நேராக ஊர்காவற்றுறை வந்தடையும்.

பின்னர் பிற்பகல் 1.45 மணிக்கு ஊர்காவற்றுறையில் இருந்து நேராக அனலைதீவிற்கும் எழுவைதீவுக்கும் தனித்தனியாக இரு படகுகள் புறப்பட்டுச் செல்லும். இதனையடுத்து ஊர்காவற்றுறையில் இருந்து பிற்பகல் 2.30 மணிக்கு புறப்படும் படகு எழுவைதீவு ஊடாக அனலைதீவு சென்றடையும். பின்னர் பிற்பகல் 4.30 மணியளவில் ஊர்காவற்றுறையில் இருந்து அனலைதீவு, எழுவைதீவு நோக்கி இரு படகுகள் தனித்தனியே புறப்பட்டுச் செல்லும். (ஒ-16)

### காரைநகர், வலந்தலையில்

# பாடசாலை அருகே உள்ள காணியில் மிதிவெடி அபாயம்!

காரைநகர், செப்.13

காரைநகர் வலந்தலைப் பகுதியில் பாடசாலை ஒன்றின் அருகே உள்ள வளவில் கடந்த செவ்வாய்க்கிழமை மிதிவெடி ஒன்று வெடித்துள்ளது.

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள இந்த வளவில் உழவு இயந்திரம் மூலம் மண் கொட்டியபோதே இச்சம்பவம் இடம்பெற்றது. எனினும் இச்சம்பவத்தில் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இந்தப் பகுதியில் பெருமளவு மிதிவெடிகள் இருப்பது உறுதி செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் உரிய அமைப்புகளிடமும் பல தடவைகள் முறையிடப்பட்டதாகவும் -

ஆயினும், இப்பகுதியில் மிதிவெடிகளை அகற்ற எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்றும் -

பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலைக்கு அருகில் சன நடமாட்டம் உள்ள இப்பகுதியில் கடந்த மாதம் கடற்படையினரால் இரு மிதிவெடிகள் மீட்கப்பட்டன. அண்மையில் இருமாடுகள் மிதிவெடிகளில் சிக்கி கால்களை இழந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ-73)

# கொழும்புத்துறை கிழக்கில் மீளக்குடியமர அனுமதி

கொழும்புத்துறை கிழக்கு, வசந்தபுரம் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை அப்பகுதியில் மீளக்குடியமர படையினர் அனுமதி அளித்துள்ளனர்.

1995ஆம்ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வின்போது வெளியேறிய இப்பகுதி மக்கள் 8ஆண்டுகளின் பின்னர் தற்போது மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இக்குடியிருப்புக்குச் செல்லும் பிரதான பாதையான மணிப்புரி வீதி போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டு பிறிதொரு சிறிய பாதையூடாகவே மக்களை சென்றுவர படைத்தரப்பு அனுமதித்துள்ளது.

மீளக்குடியமர்வதற்காக இப்பகுதியில் மக்கள் தமது காணிகளை சுத்தம் செய்து வருகின்றனர்.

இதேவேளை, இப்பகுதியில் பல இடங்களிலும் வெடிக்காத வெடிபொருள்கள் புதையுண்டும் கைவிடப்பட்ட நிலையிலும் காணப்படுவதாக கூறப்படுகிறது.

இக்கிராமத்தில் உள்ள கண்ணிவெடிகள் மற்றும் வெடிப்பொருள்களை அகற்றி தங்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-30

# ஓடும் பஸ்ஸில் காதலிக்கு தாலி கட்டிய தமிழக வாலிபர்

முதுகுளத்தூர்,செப்.13

தமிழகத்தின் மதுரை நகர் அருகே உள்ள முதுகுளத்தூரில் ஓடும் பஸ்ஸில் திருமணம் செய்துகொண்டார் இளைஞர் அனல் அண்ணாத்துரை (வயது 28).

ராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் கந்தசாமிபுரத்தைச் சேர்ந்த கன்னையா என்பவரது மூத்த மகன் அனல் அண்ணாத்துரை.

மூக்குத் துவாரம் வழியாகக் கயிற்றை நுழைத்து, வாய் வழியாக வெளியே இழுத்து தண்ணீர் நிரம்பி உள்ள வாளியை கட்டித் தூக்குதல், மின் வயரை இதேபோன்று இழுத்து வண்ண மின் குமிழ்களை எரியச் செய்தல் உள்ளிட்ட பல வித்தைகளை அனல் அண்ணாத்துரை செய்துள்ளார்.

இவர் வெள்ளம்பல் முனியாண்டி என்பவரின் மகள் காளியம்மாளை கடந்த ஓராண்டாகக் காதலித்து வந்தாராம். இருவரும் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தனர்.

இத்திருமணத்திற்கு இவரது வீட்டாரும் சம்மதிக்கவில்லையாம்.

எனவே, காதலர்கள் இருவரும் முதுகுளத்தூர் பொலீஸ் நிலையத்தில் தஞ்சம் புகுந்தனர். இருவரது பெற்றோர்களை பொலீஸார் அழைத்துப் பேசினர். எனினும், அவர்களது பெற்றோர்கள் இத்திருமணத்துக்குச் சம்மதிக்கவில்லை. ஆனால், திருமணம் செய்துகொள்வதில் காதலர்கள் உறுதியாக இருந்தனர். இவர்கள் 21 வயதைக் கடந்தவர்கள் என்பதால் திருமணத்திற்கு பொலீஸார் அனுமதித்தனர்.

இதையடுத்து அனல் அண்ணாத்துரை தனது காதலி காளியம்மாளை அரசு பஸ்ஸில் உடனடியாகப் பரமக்குடிக்கு அழைத்துச்சென்றார்.

திருமணம் தடைப்பட்டுவிடுமோ என்ற தவிப்பில் இருந்த அனல் அண்ணாத்துரை, திடீர்முடிவு எடுத்து ஓடும் பஸ்ஸிலேயே காதலிக்குத் தாலிகட்டித் திருமணம் செய்துகொண்டார்.

ஓடும் பஸ்ஸில் இத்திடீர் திருமணக் காட்சியைக் கண்ட பயணிகள் அதிர்ச்சியும், வியப்பும் அடைந்தனர்.



தமிழகத்திலிருந்து வெளியாகும் தினமலர் நாளிதழின் நேற்றைய பதிப்பில் வெளியான கேலிச்சித்திரம் இது. தாயகம் விட்டுச் சென்றோருக்கு இது சமர்ப்பணம்.

# பன்னிரண்டு வயதில் டாக்டர்!

ரோக்கியோ,செப்.13

பன்னிரெண்டு வயதில் டாக்டர் பட்டம் பெற்று உலகிலேயே வயது குறைந்த டாக்டர் என்ற பெருமையை அமெரிக்காவைச் சேர்ந்த சிறுவன் தனதாக்கியுள்ளான்.

ஷோயானோ என்ற இந்தச் சிறுவனின் தந்தை ஜப்பானையும் தாயார் கொரியாவையும் சேர்ந்தவர்கள். ஆயினும், இவர்கள் அனைவரும் அமெரிக்காவில் வசித்து வருகின்றனர்.

அங்கு இந்தச் சிறுவன் மருத்துவக் கல்வியை முடித்துள்ளான். தற்போது இவன் சிக்காக்கோ பல்கலைக் கழகத்தில் பட்ட மேற்படிப்பு படித்து வருகிறான். அத்துடன் அங்கு பயிற்சி மருத்துவராகவும் இவன் கடமை ஆற்றுகிறான்.

எனினும் இவனுக்கு 17வயது முடியும்வரை நோயாளிகளுக்கு அறுவைச்சிகிச்சை செய்ய அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதனால், இவன் தற்போது இறந்தவர்களின் சடலங்களில் அறுவைச் சிகிச்சை செய்து பயிற்சிபெற்று வருகின்றான்.

ஏழைகளுக்கு உதவவேண்டும் என்பதே தனது கொள்கை எனத் தெரிவிக்கும் இவன் தனது 17ஆவது வயது எப்போது பூர்த்தியாகும் என்று ஆவலாக உள்ளான்.

# பச்சை நிற எலிகளை உருவாக்கி இந்திய விஞ்ஞானிகள் சாதனை

பெங்களூர்,செப்.13

இந்தியாவின் கர்நாடக மாநிலம் பெங்களூரிலுள்ள இந்திய அறிவியல் கழகத்தில் இந்தியாவிலேயே முதன்முறையாக பச்சை நிற எலிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

பச்சை நிறம் கொண்ட முதல் எலி இந்த ஆண்டு தொடக்கத்தில் உருவாக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து பல்வேறு எலிகள் உருவாக்கப்பட்டன.

இது குறித்து இந்திய அறிவியல் கழகத்தின் மரபியல் விஞ்ஞானி பி.பி.சேஷகிரி கூறியதாவது:

ஜெல்லி மீன்களில் காணப்படும் பச்சை 'புளோராசெண்ட்' புரோட்டினைக் கொண்டு பச்சை எலி உருவாக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் கலமாற்று ஆராய்ச்சிகளுக்கு இது முன்னோடியாக இருக்கும்.

இந்த முறையில் உருவாக்கப்பட்ட பச்சைநிற எலிகளின் உள்ளுறுப்புக்களை நாம் வெளிப்புறத்திலிருந்தே காணமுடியும் - இவ்வாறு அவர் கூறினார்.



ஈஸ்ட் கோஸ்ட் தீவில் உள்ள ஆமைகள் சரணாலயத்தில் இரு தலைகளுடன் கூடிய பச்சைநிற ஆமையைப் படத்தில் காணலாம். முட்டையிலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை இது வெளியே வந்தது.

## அக்கரைச் சீமையிலே...

# தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் 'மூலிகை டீசலை' கண்டுபிடித்தது

ஜாட்ரோ.'.பா என்ற விதையைப் பயன்படுத்தி மூலிகை டீசலை உருவாக்கியிருக்கிறது தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்.

ஜாட்ரோ.'.பா என்ற தாவரத்தின் வேர்ப் பகுதியில் உள்ள விதைகளை எடுத்து அதிலிருந்த பிழிந்து எடுக்கப்படும் சாற்றுடன் மெதனோல் என்ற இரசாயனக் கலவையை கலந்து இரண்டு மணிநேரம் தொடர்ந்து கலக்கியபின் வடித்தெடுக்கப்படும் திரவம் டீசலைப்போலவே மிகச் சிறந்த வாகன எரிபொருளாகிறது.

இந்தப் புதிய எரிபொருளை 'மூலிகை டீசல்' என்று கூறும் பல்கலைக்கழகத்தினர், இதன் உற்பத்திச் செலவு லீற்றருக்கு 16 ரூபா என்றும் தாங்கள் வடிவமைத்துள்ள உபகரணத்தில மூலம் நாளொன்றுக்கு 250 லீற்றர்வரை தயாரிக்கமுடியும் என்றும் கூறியுள்ளனர்.

இந்த டீசல் உற்பத்தியின்போது கிடைக்கும் கழிவுப்பொருளான பிண்ணாக்கு மிகச் சிறந்த உரம் என்றும் அவர்கள் கூறுகின்றனர். ஆரம்பகாலத்தில் அமெரிக்காவில் விளைந்த ஜாட்ரோ.'.பா தாவரத்தை போர்த்துக்கேயர்கள் உலகின் பல்வேறு நாடுகளுக்கும் கொண்டு சென்றுள்ளனர்.

மலைப் பிரதேசங்களில் மிகவும் குறைந்த மழைவீழ்ச்சி உள்ள வறண்ட இடங்களில் இந்தத் தாவரம் அதிகமாக வளரக்கூடியது. இதனை முறையாகப் பயிர்செய்தால் ஐம்பது ஆண்டுகளுக்கு தொடர்ந்து விளைச்சலை பெறமுடியுமாம்.

## புனர்வாழ்வுத் திட்ட நடவடிக்கைகளில்

# அரசின் முரண்பட்ட நிலைப்பாடுகளினால் மக்கள் அபாயத்துக்கு உள்ளாகின்றனர்

## செயல்திறன் அரங்க இயக்க இயக்குநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.13

அரசின் முரண்பட்ட தன்மையுடைய புனர்வாழ்வுத் திட்ட நிலைப்பாடுகள், மீளக்குடியமரும் பொதுமக்களை அபாயத்துக்கு உள்ளாக்குகின்றன.

- இவ்வாறு தெரிவித்தார், செயல்திறன் அரங்க இயக்கத்தின் இயக்குநர் தே.தேவானந்த். கடந்த புதன் கிழமை காலை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இப்படித் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனச் செயற்பாடுகளில் வன்செயல்களில் இருந்து மக்களைப் பாதுகாப்பதும் ஒன்றாகும். இதற்கான விழிப்புணர்வை அரங்கச் செயற்பாடுகள் ஊடாகப் பொதுமக்களுக்கு வழங்குவது செயல்திறன் அரங்க இயக்கத்தின் நோக்கமாகும். இதன் அடிப்படையில் 'யுனிசெவ்' மற்றும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து அரங்கக் களப் பயிற்சிகள், நாடக ஆற்றுகைகள், அரங்க ஊர்வலங்கள் போன்ற செயற்பாடுகளை எமது அமைப்பு மேற்கொண்டுவருகிறது.

சிறுவர்களுக்கும் மற்றும் ஏது செய்வோம் எனத் தயங்கிக் காத்துக் கிடக்கும் மக்களுக்கும் இந்த ஆற்றுகைகளை வழங்குவதன் மூலம் தன்னெழுச்சியான, மனித ஆற்றல்களை விருத்திசெய்யவேண்டிய வளங்களை சகல மட்டங்களிலும் பயன்படுத்தி பங்கேற்பு ஆட்சிப் பொறிமுறை கொண்ட சிறந்ததோர் அரங்கப் பண்பாட்டைக் கட்டி எழுப்ப நாம் முயற்சிக்கின்றோம்.

யாழ்மாவட்டத்திலே வெடிபொருள் பிரதேசமாக காணப்பட்டுள்ள சகல பகுதிகளிலும் எமது அமைப்பு பணியாற்றுகின்றது.

வடமராட்சியில் கடலோரப் பகுதிகளான செம்பியன்பற்று, மணற்காடு, நாகர்கோயில், குடத்தனை, வரணி, பருத்தித்துறை போன்ற பகுதிகளிலும் -

தென்மராட்சியில் நாவற்குழி, சரசாலை, மட்டுவில், நுணாவில், கச்சாய், கல்வயல், அல்லாரை கெற்பெலி, கனகம்புளியடி போன்ற பகுதிகளிலும் -

யாழ்ப்பாணத்தில் கரையோரப் பகுதிகளான குருநகர், பாஷையூர், நாவாந்துறை, கொழும்புத்துறை, அரியாலை போன்ற பகுதிகளிலும் -

வலிகாமம் வடக்குப் பகுதிகளான தெல்லிப்பழை, இளவாலை, அளவெட்டி, சுன்னாகம், மல்லாகம், சண்டிலிப்பாய், சில்லாலை, மாதகல் போன்ற பிரதேசங்களிலும் -

மற்றும் தீவுப் பகுதியில் காரைநகரிலும் 'வரும் இடர் காண்' என்ற கல்விச் செயற்பாட்டை எமது அமைப்பு நடைமுறைப்படுத்தி வருகிறது.

- அபாயப் பகுதிகளில் இயங்கும் பாடசாலைச் சிறுவர்கள் மத்தியிலும் கிராம மக்கள் மத்தியிலும் எமது அமைப்பினர், நாடக ஆற்றுகைகளை வழங்கும் பாணி வித்தியாசமானது.

பாடசாலைகளில் மேடையேற்றப்பட்டு வருகின்ற நாடகங்களான 'நெஞ்சுறுத்தும் கானல்' ஆற்றுகையை 144 பாடசாலைகளைச் சேர்ந்த 73 ஆயிரத்து 780 ஆசிரியர், மாணவர்களும் -

'இடர் கெடுக' ஆற்றுகையை 70 பாடசாலைகளைச் சேர்ந்த 11 ஆயிரத்து 974 ஆசிரியர்கள், மாணவர்களும் பார்வையிட்டுப் பயனடைந்துள்ளனர்.

கிராமங்களில் நடைபெற்ற ஆற்றுகைகளான 'முடக்கம்' நாடகத்தை 29 கிராமங்களைச் சேர்ந்த 9ஆயிரத்து 321 பேரும் -

'அடிசுடும் அனல்வெளி' நாடகத்தை 17 கிராமங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 333 பேரும் பார்த்துப் பயனடைந்துள்ளனர். இவை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுக்கொண்டிருக்கும் செயல்திட்டங்களாகும்.

போரால ஏற்பட்ட சிறுவர்களுக்கான பாதிப்புகள் மிகவும் பாரதூரமானவை.

வெடிபொருள்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களில் பெரும்பாலானவர்கள் பாடசாலைகளில் இருந்து இடைவிலகியவர்களாகவே உள்ளனர் என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் ஆதரவு பூர்த்தி செய்யப்படவில்லை என்பது வேதனைக்குரியது. சிறுவர் உரிமைகள் தொடர்பாக ஆர்வம் காட்டுகின்ற அமைப்புகள் அவர்களை பெரியளவில் கண்டுகொள்வதாகத் தெரியவில்லை.

அனர்த்தங்கள் நிகழும்போது மட்டும் வெள்ளை வாகனங்களில் கொடியுடன் வந்து விசாரித்து விட்டுப் போவதும் -

பின்னர் அச்சிறுவர்கள் தொடர்பில் புனர்வாழ்வு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படுவதில்லை என்பதும் - வழக்கமாகி வருகிறது.

வெடிபொருள்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், ஒதுங்கி வாழ்பவர்களாக, கல்வியிலிருந்து விலகுபவர்களாக, வன்முறைக்குணம் உள்ளவர்களாக, ஆதரவற்று அலைந்து திரிபவர்களாக, சிறிய தொகை சம்பளத்துக்கு வேலை செய்பவர்களாக உருவாகி வருவதும் எமது செயற்பாடுகள் மூலம் அவதானிக்கப்பட்டுள்ளது.

அவர்களின் பெற்றோர் மனவிரக்தி அடைந்து அசாதாரண முடிவுகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டுள்ளன.



மிதிவெடி விழிப்புணர்வு தொடர்பான ஆற்றுகை ஒன்று பாடசாலையில் நிகழ்த்தப்பட்ட சமயம் அதில் இடம்பெற்ற காட்சி.

மிதிவெடியால் பாதிக்கப்பட்டவர்கள், வாழ்வியல் தேவைக்காக கூலிக்கு மிதிவெடி அகற்றச் செல்லும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன.

படையினர் குடியிருந்த வீடுகளில் மீளக்குடியமரும் மக்கள் தாங்களே சில வேளைகளில் மிதிவெடியகற்றும் பணியில் ஈடுபடுகின்றனர். இந்த அபாயகரமான பணியில் ஈடுபடுவோர், மீட்கப்படும் வெடிபொருள்களை போத்தல்களில் போட்டு வேறு இடங்களில் புதைத்துவிடுவது மேலும் அபாயத்தை ஏற்படுத்தி விடுகிறது.

ஏராளமான கால்நடைகள் மிதிவெடிகளால் கால்களை இழந்துள்ளன.

மிதிவெடி அபாயச் சூழலில் பாடசாலைகளுக்கும் குடிசைகளுக்கும் சென்றுவர ஒற்றையடிப் பாதையே காணப்படுகிறது.

இதுபோன்ற நிலைமைகளில் இருந்து பொதுமக்களைப் பாதுகாக்க விழிப்புணர்வுச் செயற்பாடுகளை நாம் மேற்கொண்டுள்ளோம். எவ்வாறாயினும், விழிப்புணர்வு நடைபெறுகின்றபோதே மீளக்கட்டியெழுப்பும் பணிகளும் முன்னெடுக்கப்படவேண்டும். வெறுமனே விழிப்புணர்வுச் செயற்பாடு மட்டும் மக்களைப் பாதுகாக்காது.

தொழிலாளி ஒருவனை விறகு வெட்ட மிதிவெடிப் பிரதேசத்துக்குள் போகாதே என்று சொல்லும்போது அவனது உழைப்பிற்கான வழிகளை காட்டவேண்டியவர்களாகவும் நாம் இருக்கின்றோம். அவனது தேவை பெரிது; அதனை ஈடுகட்டக் கூடியதான புனர்வாழ்வுச் செயற்றிட்டத்தை வடிவமைத்தல் வேண்டும்.

சொந்த இடங்களில் மீளக்குடியமரும் மக்களுக்கே நஷ்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்படுமென அரசு நிபந்தனை விதிக்கின்றது. ஆனால், உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் மக்களின் மீளக் குடியமர்வு தடுக்கப்பட்டுள்ளது.

மீளக்குடியமர்வுக் கொடுப்பனவைப் பெறுவதற்காக சொந்த இடங்களில் குடியேற முற்படும் மக்கள், மிதிவெடி அபாயப் பகுதிகளைப் பொருட்படுத்தாது குடியேறியுள்ளனர். மக்கள் மீளக் குடியேறும் பகுதிகளில் மிதிவெடி அகற்றும் நடவடிக்கை விரைவானதாக இல்லை. அவை விரைவுபடுத்தப்படவேண்டும்.

இதுபோன்ற அரசின் முரண்பட்ட தன்மை கொண்ட புனர்வாழ்வு நடவடிக்கைகளே மக்களை ஆபத்துக்குள் தள்ளிவிடுகின்றன.

- இப்படி தே.தேவானந்த் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் மிதிவெடி விழிப்புணர்வு தொடர்பாக செயற்றிறன் அரங்க இயக்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளின் படக்காட்சிகளும், புறஜெக்டர் மூலமான விளக்கங்களும் வழங்கப்பட்டன.

செயற்றிறன் அரங்க இயக்க உறுப்பினர்கள் கு.லக்ஸ்மன், எம்.பிரதீபன் மற்றும் எஸ்.சுபாங்கி ஆகியோரும் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

(ம-9-6)



யாழ்ப்பாணக் கல்லூரித் தமிழ் மன்றம் நடத்திய பாரதி விழா யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். பேராயர் வண. கலாநிதி சு.ஜெபநேசன், கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் சி.மௌனகுரு ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதையும், பட்டப் படிப்புகள் பிரிவு இயக்குநர் ஏ.குமாரவேல், பேராயர் சு.ஜெபநேசன், பேராசிரியர் சி. மௌனகுரு, கழக்குப் பல்கலைக்கழக மொழியியற்றுறை பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு, தமிழ் மன்றத் தலைவர் க. சுகாஸ் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும், படங்களில் காணலாம். *(படங்கள் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

## அரச மருத்துவமனைகளில்

# சத்திர சிகிச்சை வழங்குவதில் நெருக்கடி ஏற்படும் அபாயம்!

## 30 நிபுணர்கள் ஓய்வுபெறுவதால்

கொழும்பு,செப்.13

நாட்டின் அரச வைத்தியசாலைகளில் பணியாற்றி வருகின்ற சத்திர சிகிச்சை நிபுணர்களில் 30 பேர் ஓய்வுபெறவுள்ளதால் சத்திர சிகிச்சை வழங்குவதில் பெரும் நெருக்கடி ஏற்படவுள்ளது என்று சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

60 வயது பூர்த்தியடைந்த அரச உத்தியோகத்தர்களின் சேவைக் காலத்தை மேலும் நீடிப்பதற்குரிய அனுமதியைப் பொது நிர்வாக அமைச்சு வழங்கியுள்ளது. ஆயினும் 60 வயது பூர்த்தியான 12 சத்திர சிகிச்சை நிபுணர்களுக்குச் சேவை நீடிப்பு வழங்க அரச சேவைகளுக்கான ஆணைக்குழு அனுமதி மறுத்துள்ளது.

இந்த 12பேரின் சேவைக் காலம் கடந்த ஜூன் மாத இறுதியுடன் முடிவடைந்துள்ளது. அத்துடன், வேறு 18 சத்திர சிகிச்சை நிபுணர்களின் சேவைக் காலம் இவ்வருட இறுதியுடன் முடிவடையவுள்ளது.

தற்பொழுது நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகளில் சத்திர சிகிச்சைக்கான மருத்துவ நிபுணர்களுக்கு சுமார் 200 வெற்றிடங்கள் நிலவும்போது இந்த 30 சத்திர சிகிச்சை நிபுணர்களின் ஓய்வு பெரும் பாதிபபை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது.

இதேவேளை -

வைத்தியர்கள் மற்றும் தாதியர்களுக்குச் சேவை நீடிப்பு வழங்குமாறு மேற்படி ஆணைக்குழு வுக்கு சுகாதார அமைச்சினால் விடுக்கப்பட்ட கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஒ-10)

## சைக்கிளில் வந்த நபருக்கு இருட்டடி

சைக்கிளில் வந்த நபர் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டு காயமடைந்த சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு மிருசுவிலில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த இராசையா விநாயகமூர்த்தி (வயது 45) என்பவர் தலையில் காயமடைந்தார். அவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஒ-117)

## மிதி பலகை பயணம் ஏற்படுத்திய விபத்து

மினிவானின் மிதிபலகையில் தொங்கியபடி பயணம் செய்த இருவர் வளைவொன்றில் வாகனம் திரும்பியபோது தவறிவீழ்ந்து காயமடைந்த சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 7.15 மணிக்கு நாவற்குழியில் இடம்பெற்றது.

இதில் காயமடைந்த நாவற்குழியைச் சேர்ந்த க.இராஜசேகர் (வயது 26) ஜுனஸ்ரின் லக்ஸன் (வயது 16) ஆகிய இருவரும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். (ஒ-117)

# 'நோராட்' அமைப்பின் பணிப்பாளர் அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம்,செப்.13

யாழ். குடாநாட்டில் புனர்வாழ்வுத் திட்டங்களை மேற்கொண்டு வரும் 'நோராட்' அமைப்பின் பணிப்பாளர் ஸ்ரொகே ஸ்ராங் அடுத்த வார இறுதியில் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

'நோராட்' நிறுவனம் இங்கு செயற்படுத்தி வரும் நீர் முகாமைத்துவ திட்டம் மற்றும் சூழல் பாதுகாப்புத் திட்டம் ஆகியன தொடர்பாக ஆராய்வதற்காகவே அதன் பணிப்பாளர் யாழ்ப்பாணம் வருகின்றார்.

எதிர்வரும் 20ஆம் திகதி யாழ்ப்பாணம் வரும் அவர் அன்று காலை 9.30 மணிக்கு யாழ். செயலகத்தில் அரச அதிபரைச் சந்தித்துப் பேசுவார். குடாநாட்டின் நன்னீர் பாதுகாப்பு மற்றும் சூழல் முகாமைத்துவம் தொடர்பாக இந்தக் கலந்துரையாடலில் முக்கியமாக ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

3ஆம் குறுக்குத் தெருவில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட 'நோராட்'டின் நீர் முகாமைத்துவ திட்ட அலுவலகத்துக்கும் அவர் விஜயம் செய்வார்.

அன்றைய தினமே தனது குடாநாட்டு விஜயத்தை முடித்துக்கொண்டு அவர் கிளிநொச்சிக்குச் செல்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-5-12)

## ஆசிரியை மற்றும் மகள் சடலங்களாக மீட்பு!

அநுராதபுரம் மூன்றாம் யுனிற் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து பாடசாலை ஆசிரியை ஒருவரும் அவரது வளர்ப்பு மகளும் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

கணவனால் கைவிடப்பட்ட தயானி வீரசிங்க (வயது 49) என்ற ஆசிரியையும் அவரது வளர்ப்பு மகளுமே சடலமாக மீட்கப்பட்டவர்களாவர்.

இவர்கள் இருவர் மட்டும் வீட்டில் வசித்து வந்ததாகவும் -

இவர்கள் சித்திரவதை செய்யப்பட்ட பின்னர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்றும் - பொலீஸார் கூறினர்.

இந்த ஆசிரியையும் வளர்ப்பு மகளும் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டிருக்கலாம் என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர். (ஒ-10)

# கிராமப்புற வீதி அபிவிருத்திக்கு என தொகுதிக்கு 20 லட்சம் ரூபா ஒதுக்கீடு

## வடக்கு - கிழக்கில் விவசாய பாதைகள் நிறுவ அரசு நடவடிக்கை

கிராமப்புற வீதிகளின் அபிவிருத்திக்காக அரசாங்கம் 'சமாதானத்தில் உங்கள் பங்கை எடுத்துக்கொள்ளுங்கள்' என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக துரித திட்டமொன்றை கடந்த மாத இறுதியில் அறிவித்துள்ளது. இரு பகுதிகளில் அமையும் இத்திட்டத்தில் கிராமப்புற வீதிகளின் அபிவிருத்தித் திட்டம் மற்றும் பிரபல்யமான வீதி வாரத்திட்டத்தின் விஸ்தரிப்பு ஆகியவை அடங்கும்.

கிராமப்புற வீதிகள் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் 20 லட்சம் ரூபா வீதம் திறைசேரியினால் ஒதுக்கப்படும். சமாதானத்தின் பயன் என அழைக்கப்படும் பெறுபேறுகளில் இருந்து இந்தத் திட்டத்துக்கான நிதியுதவி பெறப்படும்.

இதற்கு மேலதிகமாக தற்போதைய பல திட்டங்கள் துரிதப்படுத்தப்படும்.

மேற்கு ஊவா, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில 1,500 கிலோமீற்றர் வீதிகளை அபிவிருத்தி செய்யும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்டம்.

மத்திய மற்றும் சப்ரகமுக மாகாணங்களில் 600 கிலோமீற்றர் வீதிகளை அபிவிருத்தி செய்யும் சர்வதேச கூட்டுறவுக்கான ஜப்பான் வங்கியின் திட்டம்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 500 கிலோமீற்றர் கிராமப்புற விவசாயப் பாதைகளை அபிவிருத்தி செய்யும் உலக வங்கியின் திட்டம் ஆகிய திட்டங்கள் இதில் அடங்கும்.

அரசாங்கத்தின் மேற்படி திட்டத்தைச் சமர்ப்பித்த பின் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இதுபற்றிக் கூறியதாவது:-

உதவி வழங்கும் சமூகத்தின் உதவியுடன் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளுடன் புதிய கிராமப்புற வீதிகள் திட்டமும் அடங்கும்.

வெளி இடங்களில் விவசாயிகள் வேகமாக சந்தைகளுக்குச் செல்லவும் கிராமங்களுக்கு இடையில் சிறநத வகையில் தொடர்புகளை மேற்கொள்ளவும், பாடசாலைகள் மற்றும் நகரங்களுக்கு இலகுவாகச் செல்லவும் சிறந்த பாதைகள் வழிவகுக்கும். இந்தத் துரித திட்டத்துக்கு எம்மை இட்டுச்செல்ல அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்தத்தின் நன்மைகளே வழிவகுத்துள்ளன.

- இவ்வாறு அவர் கூறினார்.

### வீதி வாரத் திட்டம்

இந்நிலையில், முன்னைய அரசாங்கத்தினால் கைவிடப்பட்ட ஜனரஞ்சகமான வீதி வாரத்திட்டம் மீண்டும இவ்வருடம் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 32 திட்டங்கள் இவ்வருடம் வெற்றிகரமாக இதுவரை நடத்தப்பட்டன. இவ்வருடம் இதுபோன்ற மேலும் 30 திட்டங்களை சுமார் 5 கோடி ரூபா செலவில் முடிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதேச சபைகளில் பாதைகள் மற்றும் சிறிய வீதிகளுமே புனரமைப்பதற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இவை ஒன்று முதல் 5 கிலோமீற்றர் தூரத்தை கொண்டவையாகும் 7 முதல் 10 நாள்கள் கொண்ட திட்டத்தின் கீழ் 30 முதல் 35 கிலோமீற்றர் வரையிலான வீதிகள் இவ்வாறான திட்டத்தின்கீழ் திருத்தப்பட்டுள்ளன.

மேலதிக வேலைகளை வழங்குவதுடன் இத்திட்டம் தூரப்பகுதி வெளியிடங்களில் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதோடு, கிராமங்களுக்கு இடையிலான பயணங்களை மேலும் இலகுவாக்குகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வாரமும் குறிப்பிட்ட அளவு கிராமங்கள் நன்மை பெறுகின்றன.

இத்திட்டத்துக்கான மதிப்புக் கூடியுள்ளதையடுத்து இதனை அடுத்த இரு வருடங்களுக்கு எவ்வாறு விஸ்தரிப்பது என்பதை அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. இத்திட்டம் மேலும் பல வீதி அபிவிருத்தித் திட்டங்களைப் போன்று குறைந்த செலவில் மக்களுக்கு நிறையப் பயனைத் தருகிறது. ஒருசில சந்தர்ப்பங்களில் ஒரு கோடி ரூபா பெறுமதியான வேலைக்கு நேரடிச் செலவாக 10 லட்சம் ரூபா மட்டுமே செலவாகியிருப்பதைக் குறிப்பிடலாம்.

கிராமப்புறங்களுக்கு நிவாரணங்களை வழங்கும் வழிவகைகளை அரசாங்கம் தேடிவரும் நிலையில், மேலதிக அபிவிருத்தி மற்றும் மக்களின் மேம்பாடு, சிறந்த பாதைகளுடனான உட்கட்டமைப்பு மற்றும் நகரங்களுக்கும் வெளி இடங்களுக்குமான வேகமான தொலைத்தொடர்புகள் மூலம் கிடைக்கும் என்பதை அரசாங்கம் அறிந்தே உள்ளது.

இந்தக் காரணத்தினால் கடந்த பல வருடங்களாகக் கவனத்தில் இருந்த மூன்று திட்டங்களை அரசாங்கம் துரிதப்படுத்தும் கடப்பாட்டைக் கொண்டுள்ளது.

கொழும்பு - மாத்தறை நெடுஞ்சாலை,

கொழும்பு - கண்டி நெடுஞ்சாலை,

கொழும்பு - கட்டுநாயக்கா அதிவேக நெடுஞ்சாலை

- இவையே இந்த மூன்று திட்டங்களுமாகும்.

கொழும்பு - மாத்தறை நெடுஞ்சாலை நிர்மாணப் பணிகள் இறுதியாக 2003 மார்ச்சில் ஆரம்பமாகின. அதன் முதல் கட்டம் 2006 இல் முடிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதன் இறுதிக்கட்டம் 2008 இல் முடிவடையும். அது 122 கிலோமீற்றர் தூரத்தைக் கொண்டிருப்பதுடன் நிர்மாணப் பணிகளில் ஆயிரக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும்.

இந்த நெடுஞ்சாலையுடன் கூடிய ஏனைய அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் மேலும் ஆயிரக்கணக்கான வேலை வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படுவதுடன் கொழும்புக்கும் மாத்தறைக்கும் இடையிலான தூரத்தை 90 நிமிடங்களில் கடக்கக் கூடியதாகவிருக்கும்.

கொழும்பு - கண்டி நெடுஞ்சாலைத் திட்டம் ஆரம்பக் கட்டங்களிலேயே இன்னும் உள்ளது. இறுதியில் கொழும்பில் இருந்து கண்டிக்குச் செல்லும் தூரத்தை ஒரு மணி நேரத்தில் கடக்கக் கூடியதாகக் குறைந்துவிடும்.

கொழும்பில் இருந்து கட்டுநாயக்கா செல்லும் அதிவேக நெடுஞ்சாலை 25 கிலோமீற்றர் தூரத்தைக் கொண்டதாக அமையும். இதற்கான புதிய முதலீட்டாளர்கள் தீர்மானிக்கப்பட்டவுடன் மூன்று வருடங்களில் இதன் நிர்மாணப்பணிகள் முடிந்துவிடும்.

இந்த மூன்று திட்டங்களும் நீண்டகாலமாக அரசாங்கத்தின் கரிசனையில் இருந்ததாக, அமைச்சரவைப பேச்சாளர் பேராசிரியர் பீரிஸ் குறிப்பிட்டார். இந்தத் திட்டங்கள் செயற்படுத்தப்படுவதைக் காண்பதற்கு அரசாங்கம் திடமாகவுள்ளது. இந்த வீதித் திட்டங்கள் வேலை வாய்ப்புக்கள், வர்த்தகம், சிறந்த வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை வெளி இடங்களில் உள்ள மக்களுக்கு வழங்கும்.

சிறந்த பாதைகள் இன்றி விவசாயிகளும், மீனவர்களும் தமது பொருள்களைச் சந்தைக்குக்கொண்டு வருவதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

சிறந்த தொலைத்தொடர்பு வசதிகள் இல்லாதிருந்தால், வர்த்தகர்கள் நகரங்களைவிட்டு கிராமப்புறங்களுக்குச் செல்ல விரும்பமாட்டார்கள். நாட்டு மக்கள் விரைவாகவும் பாதுகாப்பாகவும் நாடு அடங்கலும் பயணஞ்செய்ய முடிந்தாலன்றி முழு நாட்டையும் அபிவிருத்தி செய்யும் எமது திறன் குறைந்துவிடும்.

எமது மக்களை நவீன வீதிகள் கட்டமைப்பின் வழியாக மேலும் நெருங்கிவரச் செய்தல் சமாதானப் பயனின் முக்கியமானதொரு பகுதியாகும்.

- இவ்வாறு அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

### *கிராமங்களுக்கு மின்சாரம்*

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தற்போது இடம்பெறும் யுத்தநிறுத்தம் கிராமப்புற மக்களுக்கு எதிர்பாராத ஒரு நன்மையை ஏற்படுத்தியிருப்பதைக் காணமுடிகிறது. குறிப்பாக அவர்களது கிராமங்களுக்கு முதல் முறையாக மின்சாரம் கிடைத்துள்ளது.

தற்போது இலங்கையில் 63 சதவீத வீடுகளுக்கு மின்சாரம் கிடைத்துள்ளது. அதில் பெரும் பகுதி நகரங்கள் மற்றும் பாரிய நகர்ப்பகுதிகள் ஆகும். ஏனையோர் மண்ணெண்ணெய் விளக்குகளைப் பயன்படுத்தவேண்டும். அல்லது இருளிலேயே இருக்கவேண்டும்.

எனினும், இவை அனைத்தையும் மாற்றுவதற்கு உத்தேசித்திருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. கிராமப்புறஙகளுக்கான மின்விநியோகம் துரிதப்படுத்தப்படுவதுடன் 16 லட்சத்து 25 ஆயிரம் பேருக்கு மேல் அடுத்த இரண்டு வருடங்களில் மின்சாரத்தைப் பெறமுடியும். (இது 72 சதவீதம் வரையிலான அதிகரிப்பாகும்)

சுவீடன், சீனா மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் நிதி உதவியுடன் கூடிய மூன்று திட்டங்கள் மாகாணங்களின் பெரும் பகுதிகளையும் கிராமங்களின் மையப் பகுதிகளின் நீண்டதூரம் உள்ளேயும் மின்சாரம் கிடைக்க வழிசெய்கிறது.

மேற்படி மூன்று திட்டங்களின் அளவு அரசாங்கம் சில பிரச்சினைகளை எதிர்கொள்ளும் நிலையைத் தோற்றுவித்துள்ளது. முக்கிய பிரச்சினை இந்தத் திட்டங்களுக்கு தேவைப்படும் கொங்ரீட் தூண்களின் எணிக்கை ஆகும்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்டத்துக்கு மாத்திரம் 2 லட்சம் தூண்கள் தேவைப்படுகின்றன.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கருஜயசூரிய குறிப்பிடும் வகையில்,

"தேவையான தூண்கள் மற்றும் உபகரணங்களை விநியோகிப்பது மிகவும் சோதனை மிகுந்ததாகும்.

கொங்ரீட் தூண்களை எவ்வாறு விநியோகிப்பது என்பதை இலங்கை மின்சார சபை கண்டறிவதுடன் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குத் தேவையான தூண்கள் கிடைப்பதை உறுதிசெய்யவும் வேண்டும்.

அத்துடன், எமது இலக்கை எட்டும் வகையில் உதவக்கூடிய உள்ளூர் ஒப்பந்தகாரர்களை மற்றும் கிராம மக்களைத் தேடிவருகிறோம். தூண்கள் நடுவது போன்ற சிறிய ஒப்பந்தங்களை சிறிய குழுவினருக்கும் மற்றும் சிறு ஒப்பந்தகாரர்களுக்கும் வழங்கலாம். இதன்மூலம் வேலையற்ற உள்ளூர் கிராம வாசிகள் வருமானத்தைப் பெறவும் முடியும்.

சிறிய தொழிலதிபர்கள் வெளி இடங்களில் தமது வியாபாரத்தை மேற்கொள்ள இந்த மின்சாரத்திட்டம் இலகுவாக இருக்கும்.

நிரந்தர சமாதானத்துக்காக நாம் செயற்பட்டு வரும் நிலையில், அது போன்ற வாய்ப்புக்களை வடக்கு - கிழக்கில் உள்ள எமது மக்களுக்கு வழங்க முடியும் என்று நம்புகிறோம் எனவும் அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார். *(நன்றி: சுடர்ஒளி)*

---

## சர்வதேச மட்டத்திலான பேச்சு மேசைகளில்

# சிங்கக்கொடிக்கு சமமாக வைக்கப்பட்ட புலிக்கொடியை ஏற்ற இப்போது தடையா?

## வேடிக்கை என்கிறார் வலிகாமம் கோட்ட பொறுப்பாளர்

யாழ்ப்பாணம்,செப்.13

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்று முடிந்த ஆறுசுற்றுச் சமாதானப் பேச்சுகளின் போதும் சரி, முன்னர் இடம்பெற்ற சர்வதேச மட்டத்திலான பேச்சுகளின்போதும் சரி சிங்கக் கொடிக்குச் சமமாகப் புலிகொடியும் பேச்சு மேசையில் வைக்கப்பட்டிருந்தது. அத்தகைய புலிக்கொடியை நிகழ்வுகளில் ஏற்ற முட்டுக்கட்டை போடுவது வேடிக்கையாக உள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் வலிகாமம் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.வே.தமிழ்மறவன்.

சண்டிலிப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் சங்கமம் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் தேசிய எழுச்சிப் பேரவையின் உப செயலாளர் க.சிவராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொறுப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தச் சமாதான காலத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் புலிக்கொடி ஏற்றப்படுவதை மட்டும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தடைசெய்ய முனைந்து நிற்பது ஒரு வேடிக்கையான விடயமாக உள்ளது.

காலத்தின் தேவையைக் கருத்திற்கொண்டு - சமாதானத்தை வலியுறுத்தி - தேசிய எழுச்சிப் பேரவை வடக்கு - கிழக்கில் உருவாக்கப்பட்டுள்ளது. வன்னியில் இந்த அமைப்பு போர் எழுச்சிப் பேரவை என்ற பெயரில் உருவாக்கப்பட்டுப் பல சாதனைகளைப் புரிந்துள்ளது.

வன்னியின் மீது எதிரி போர் தொடுத்து எம்மை அழிக்கக் கங்கணம் கட்டிநின்ற நேரத்தில், எதிரியைப் புறம்தள்ளி வெற்றி வாகை சூட போர் எழுச்சிப் பேரவை தன்னாலான முழுப் பங்களிப்பையும் வழங்கியிருந்தது. இதுவே இன்று தேசிய எழுச்சிப் பேரவையை இங்கு அமைப்பதற்குக் காரணமாக இருந்தது.

போர் எழுச்சிப் பேரவை வெற்றி பெற்றது போன்று தேசிய எழுச்சிப் பேரவையும் வெற்றி பெறவேண்டும். விடுதலைப் புலிகளாகிய நாம் உங்களிடம் வாக்குக் கேட்கவும் மாட்டோம். அரசியல்வாதிகளைப் போன்று அதைத் தருவோம் இதைத் தருவோம் என்று கூறவும் மாட்டோம்.

நாம் உயிரை அர்ப்பணித்துப் போராட இந்த விடுதலைப் போராட்டத்தில் இணைந்துள்ளோம். நாட்டின் விடுதலைக்காக, இந்த மக்களுக்காக எமது உயிர்களை விலையாகக் கொடுத்து இப்போராட்டத்தில் நிற்கின்றோம்.

எமது விடுதலை இந்தத் தலைவன் காலத்தில் எமக்கு நிச்சயமாகக் கிடைக்கும். இன்றும்கூட நாம் ஒரு திருப்பு முனையிலேயே நிற்கின்றோம். எம்மைச் சிங்களத் தலைமை ஏமாற்ற நினைக்குமாக இருந்தால் அதற்கு எந்தவடிவத்தில் பதில்கொடுக்க வேண்டுமோ அந்த வடிவத்தில் பதில் கொடுக்கவும் நாம் பின்நிற்கப் போவதில்லை. இதனை சிங்களத் தலைமைகளும் நன்கு புரிந்துவைத்துள்ளார்கள்.

ஒப்பந்தக் கனவில் வாழ்வதிலும் பார்க்க இடைசிய நனவில் வாழ்வதே சிறந்ததாகும். ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட இயல்பு வாழ்க்கையைக் கூட வழங்கமுடியாத, ஏற்படுத்த முடியாத அரசாங்கம் எமது நியாயமான உரிமைகளைத்தர முன்வருமா என்பதையிட்டு மக்கள்தான் சிந்திக்கவேண்டும்.

இன்று சிறிய சிறிய பிரச்சினைகளை எல்லாம் பூதாகாரமாக்கி எம்மைச் சண்டைக்கு இழுக்க வேண்டும் என்பதில் இராணுவமும் ஆயுதக் குழுக்களும் தம்மாலான பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றன. இதேபோன்று போரை எம்மைக் கொண்டு ஆரம்பிக்கவேண்டும் என்பதிலும் கூடிய அக்கறை காட்டுகின்றன.

இன்றைய சமாதானச்சூழல் எம் மீது அனுதாபப்பட்டு கொண்டுவரப்படவில்லை. இனியும் தமிழ் மக்களுடன் சண்டைசெய்து வெற்றி கொள்ள முடியாது என்ற நிலையிலேயே சமாதான ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கை மூலம் இலங்கை இராணுவம் சுமார் ஒன்றரை வருடங்கள் கைப்பற்றிய இடங்களை மூன்று நாள்களில் நாம் கைப்பற்றியதுடன் மேலும் ஆனையிறவு போன்ற முகாம்களையும்கூட கைப்பற்றி எதிரியை வெற்றி கொண்டுள்ளோம்.

இன்று ஏற்பட்டுள்ள இந்த அமைதியை எவ்வாறு ஸ்ரீலங்கா இராணுவம் போரியலுக்கான ஏற்பாடுகளை செய்வதற்குப் பயன்படுத்துகின்றது என்பது எமக்கு நன்கு தெரியும்.

இடைக்கால நிர்வாக சபையை எமக்குத் தருவார்களா? தரமாட்டார்களா? என்பதைப் பற்றி நீங்கள் பத்திரிகைகள் மூலம் நன்குணர்ந்து இருப்பீர்கள். விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் இன்று பல நாட்டு அரசியல் நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்று இடைக்கால நிர்வாக வரைபை உருவாக்கியுள்ளார்கள். தலைவரின் பார்வையைத் தொடர்ந்து அது அரசிடம் கையளிக்கப்படவுள்ளது.

நாம் அடிக்கடி எமது போராட்ட வடிவங்களை மாற்றியுள்ளோம். அநத வகையில் ஆயுதம் ஏந்திய திலீபன் அஹிம்சை வழியில் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராக உண்ணாவிரதம் இருந்து வீரமரணம் அடைந்ததையும் கருத்திற்கொள்ள வேண்டும்.

எமது மக்கள் ஒப்பந்த ரீதியாக ஏமாற்றப்படுவார்களாக இருந்தால் மீண்டும் ஒரு புதிய அத்தியாயம் திறக்கப்படும். இதில் நாம் அனைவரும் அணிதிரண்டு பெரும் போர்க்களமாக மாறவேண்டும். அதில் நீங்கள் அனைவரும் இணைந்து பங்காற்றவேண்டும் - என்றார் தமிழ்மறவன். (ஒ-10-86)

---

# சுகாதார சேவைகளை மேம்படுத்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிப்பு

## யாழ். அரச அதிபர் நடவடிக்கை

யாழ். மாவட்டத்தில் சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்கான செயற்பாட்டுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படவுள்ளது.

சுத்தமான குடிதண்ணீர் விநியோகம், கழிவுநீர் வாய்க்கால்கள் சுத்திகரிப்பு, குப்பைகூளங்கள் மற்றும் மனிதக் கழிவுகள் அகற்றுதல் ஆகிய சேவைகளே மேம்படுத்தப்படவுள்ளன.

இந்த நடவடிக்கையை மேற்கொள்ளத் தேவைப்படும் விவரங்களைத் திரட்டி எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்பு தனக்கு அனுப்பிவைக்குமாறு உள்ளூராட்சி சபைகளுக்கு யாழ். மாவட்ட அரச அதிபரினால் கடிதமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகள் தத்தமது பிரிவில் உள்ள தனியார் வீடுகளில் உள்ள மலசல கூடங்களின் எண்ணிக்கை, கழிவு நீர் வாய்க்கால்களின் விவரங்கள், வீதிகள் மற்றும் பொது இடங்களில் உள்ள கழிவுகளை அகற்றுவதில் ஏற்படும் சிக்கல்கள், குடிதண்ணீர் விநியோகம் தொடர்பான விவரங்கள் போன்றவற்றை அனுப்பிவைக்குமாறே அரச அதிபரால் கேட்கப்பட்டுள்ளன. (ஒ-10-16)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கொங்கிறீற் கற்கள், மணல், சல்லி விற்பனைக்குண்டு. தொடர்பு:- இ.சேகர், 162, அரசடி வீதி (டயானா கொமினிகேசன் முன்பாக), நல்லூர். T.P.3146, 0712 347473. (22146)

இதுவரை பாவிக்கப்படாத புத்தம் புதிய "SONY" VIDEO CD, MP3, Audio CD, 4700W P.M. P.O 215W+ 215W Extra Box விற்பனைக்குண்டு. தொடர்பு: S.அமலன், 23, கோவில் ஒழுங்கை, நாவாந்துறை, யாழ். T.P. 222 5985, 222 3688. (22510)

நாய், கோழி வளர்க்கக்கூடிய நல்ல நிலையிலுள்ள கூடு விற்பனைக்குண்டு. தொடர்பு: S. அமலன், 18/2, கோவில ஒழுங்கை, நாவாந்துறை, யாழ். T.P. 222 3688, 5985. (22511)

## பூங்கன்று விற்பனை

குறோட்டன், பாம், முசந்தாஸ் (சிவப்பு, வெள்ளை, பிங்), ஐந்தூரியம், எவக்கிறீன், மஞ்சள் கொடிப்பூ, அரக்கேரியா, ஈரப்பலா, ரோசா ஆகிய கன்றுகள் விற்பனைக்குண்டு. 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம் (I.C.R.C.இற்கு அண்மையில்) T.P. 6563. (22530)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

சுத்தமான Doberman Pincher, Great Dane நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (22528)

## வீடு விற்பனைக்கு

அளவெட்டி, கூட்டுறவாளர் வீதியில கும்பிளாவளை பிள்ளையார் கோயில் வீதிக்கு முன்பாக உள்ள வீடு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஓவசியர் தர்மலிங்கம் 021-222 5025, 0777-721610 சனி, ஞாயிறு மட்டும் தொடர்புகொள்ளவும். (22539)

## தவறிவிட்டது

தங்கோடை, காரைநகரைச் சேர்ந்த சிவதர்ஷினி நடராஜா என்பவரது தே.அ.அ.(இல.808074109V) யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள இலங்கை வங்கியில் தவறிவிட்டது. மாறியெடுத்தவர்களோ or கண்டெடுத்தவர்களோ இல. 826/11, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (22506)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima, Broiler மற்றும் இறைச்சிக கோழிகள் உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (22223)

இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு: ரவி (சாவகச்சேரி தபால் அலுவலகம் அருகில்), 24மணி நேரமும் பெற்றுக்கொள்ளலாம். (C-30137)

புறொயிலர் 1Kg 160/=. சுத்தம் செய்யப்பட்டது 1Kg 240/= மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 1)மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். 2) பொன்னாலை வீதி, விதானை வளவு, மானிப்பாய். (22437)

## புறொயிலர் விற்பனைக்கு

தரமான புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தஞ்செய்து வேண்டிய அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (22533)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima, Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக்குஞ்சுகள், Tetra Brown சேவற்குஞ்சுகள் 15.09.2003 பிற்பகல் விநியோகிக்கப்படும். முற்கூட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (22529)

## நிலைய பொருத்தம்

வீட்டில் பிரச்சினை, தொழில் முன்னேற்றம் இன்மை, குழந்தை பாக்கியம இன்மை இவைகள் நிலையபொருத்தம் இன்மையால் ஏற்படக்கூடியவை. நிவர்த்திசெய்துகொள்ள உடன் நாடவும். V.N.G.யோகராஜ், மனைப் பொருத்தம் சாத்திரியார்(மதுரை),44/1, யாழ்.வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். T.P. 077 6082534. (C-30086)

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தில் பிறந்தவரும் கனடாவில் பிரஜாவுரிமையுடன் தொழில் புரிபவருமான 33 வயதுடைய சகோதரனுக்கு அவரது அண்ணன் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த, நல்லொழுக்கமுள்ள மணப்பெண்ணை எதிர்பார்க்கின்றார். தொடர்பு: J.B. பிள்ளை C/oபாக்கியநாதன், கிறீன்பார்க்.152/2, கோயில் வீதி (I.C.R.C இற்கு எதிராக), யாழ்ப்பாணம். T.P.:222-6563.(22421)

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச சேர்ந்த, 1965இல் பிறந்த, செவ்வாய்த தோஷமற்ற, 23 கிரகபாவமுடைய அரசாங்க வங்கியில் பகுதித் தலைவராகக் கடமைபுரியும் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை.தொடர்பு-விள.இல. 2031, மே/பா உதயன். (22424)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, அரசாங்க எழுது விளைஞராகக் கடமையாற்றும், 30 வயதுடைய, செவ்வாய்க்குற்றமற்ற, 28 கிரகபாவமுள்ள மணமகனுக்கும் 32 வயதுடைய, செவ்வாய்க்குற்றமற்ற, 6 கிரகபாவமுடைய பயிற்றப்பட்ட ஆசிரியருக்கும் மணமகள் தேவை. தொடர்பு:- விள. இல.2032, மே/பா உதயன். (22425)

யாழ். இந்து கௌரவ குடும்பத்து, PHI புலமைப்பரிசிலில் ஆறு மாத பயிற்சிக்கு London செல்லவுள்ள மணமகனுக்கு 23 வயதுக்குட்பட்ட, அழகான மணப்பெண் தேவை. தொழிலுள்ளவருக்கு முன்னுரிமையுண்டு. தொடர்பு: விள.இல. 2022, C/oஉதயன்.(22251)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, செவ்வாய்க் குற்றமில்லாத, 27 வயது, அரசவங்கி உத்தியோகத்தருக்கு பொருத்தமான மணப்பெணதேவை. சதயம் 3ஆம் பாதம், கிரகபாவம் ஒன்றே முக்கால். ஜாதகம் மற்றும் முழு விவரங்களுடன் தொடர்புகொள்ளவும் வி.இல. 2035, மே/பா உதயன், யாழ்.(22541)

1958இல் பிறந்த வெளிநாட்டு பிரஜையான மணமகனுக்கு விஸ்வகுல மணமகள் தேவை. மணமகளின் வயது 30-35 வரை இருக்கலாம். தொடர்பு: நா.சண்முகராசா, 132, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (22518)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1969இல் பிறந்த, செவ்வாய்க குற்றமுள்ள, கிரகபாவம் 41உடைய B.com. ஆசிரியைக்கு தகுந்த மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஜாதகக்குறிப்பு, குடும்ப விவரத்துடன் தொடர்பு: விள.இல. 2030, மே/பா உதயன். (22423)

# பாலங்களைத் திருத்தக் கோரிக்கை

வலி.வடக்கு,செப்.13

வல்லை மற்றும் தொண்டமனாறு பாலங்கள் சேதமடைந்து காணப்படுகின்றமையினால் வடமராட்சி மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

போர்நிறுத்தம் செய்யப்பட்டு சுமார் ஒன்றரை வருடங்கள் கழிந்த போதிலும் இப்பாலங்கள் இரண்டையும் திருத்துவதற்கு எந்தவகையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இப்பாலங்களைத் திருத்த ஆவன செய்ய வேண்டும் எனக்கோரி வடமராட்சி தமிழர் விடுதலைக் கூட்டணி அமைப்பாளர் ச.அரவிந்தன் அரசிற்கு மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

பாதுகாப்பு பெருந்தெருக்கள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் திலக் மாரப்பனவிற்கும் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவிற்கும் இம்மகஜர்கள் அனுப்பப்பட்டுள்ளன. (ஒ-86)


## தேவை

M.S.Office படிப்பிக்கக் கூடிய ஆள்கள் தேவை. ஆவணங்களுடன் உடன் நேரில் வரவும்.

தொடர்பு:

SKY Computer Systems.

இல. 109, கண்டி வீதி,

கண்டுக்குளி (கச்சேரிக்கு அருகில்)

யாழ்ப்பாணம்.

(நேர்முகம் நடக்கும் நேரம் காலை 9.00 மணியில் இருந்து மாலை மணி வரை, திங்கள் வார நாள்களிலும் நடைபெறும்.)

## வீடு வாடகைக்கு

யாழ். Temple Roadஇல் அமைதியான சூழலில் சகல வசதிகளுடன் அமைந்த வீடு காரியாலயப் பாவிப்பிற்கு அல்லது வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- லோசன் இன்

175, முதலாம் குறுக்குத் தெரு,

யாழ்ப்பாணம்.

(22485) (21-12-15)

## வேலையாள்கள் தேவை

எமது நிறுவனத்தில் விற்பனையாளராகக் கடமையாற்ற 25 வயதுக்கு குறைவானவர்கள் (ஆண்கள்) தேவை நேரில் வரவும்.

கபிலா காலணியகம்,

இல.4, கஸ்தூரியார் வீதி,

(22526) யாழ்ப்பாணம். (25)

## துர்க்கா திருமண சேவை

1961 ஆம் ஆண்டு Communication Engineer ஆக London இல் தொழில் செய்யும் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை. புகைப்படத்தோடு உடன்தொடர்பு கொள்ளவும்.

துர்க்கா திருமண சேவை,

(சந்தியா பந்தல் சேவை)

இல.191/1, ஓட்டுமடம் வீதி,

சிவலிங்கப்புளியடி,

(22525) யாழ்ப்பாணம்.


# ஊர்காவற்றுறை அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

ஊர்காவற்றுறை,செப்.13

ஊர்காவற்றுறை பிரதேச செயலா பிரிவுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து 21 லட்சத்து 83 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியின் மூலம் நகர அபிவிருத்தி, வீதிகள் மற்றும் சனசமூக நிலையங்கள் புனரமைப்பு, கல்வி, கலாசாரம், சமூகசேவை ஆகியவற்றுடன் தொடர்புடைய வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஒ-10-16)

# நலன்புரி நிலையங்களின் செய்தியாளர் சந்திப்பு

வலி.வடக்கு, செப்.13

வலி.வடக்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம் நாளை பிற்பகல் 2.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றை நடத்தவுள்ளது.

இடம்பெயர்ந்தோர் முகாம்களைச சேர்ந்த தலைவர்கள், செயலாளர்கள இதில் கலந்துகொண்டு அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் மேற கொண்டு வரும் செயற்பாடுகள் மற்றும் குறைகள் சம்பந்தமாக விளக்கவுள்ளனர்.

இந்நிகழ்விற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-86)


# அவுஸ்திரேலியா

அரசின், அங்கீகாரம் பெற்ற

தகவல் தொழினுட்ப டிப்ளோமா

(TAFE)

இப்பொழுது

இலங்கையில்

HOLMESGLEN

INSTITUTE OF TAFE

CRICOS Provider Code: 00012G

ஒரு சில ரூபாய்களில் டிப்ளோமாப் பட்டத்தைப் பெறுவதற்கு ஏன் மில்லியன் கணக்கில் செலவழிக்கின்றீர்கள்.

**பாடநெறியின் முக்கிய அம்சங்கள்**

- போதனைக் காலம் 1 1/2 வருடங்கள் (3 செமஸ்டர்கள், ஒவ்வொன்றும் ஆறு மாத காலம்)
- 15 விரிவுரையை அவுஸ்திரேலிய விரிவுரையாளர்கள் வழங்குவார்கள்
- ஆரம்ப தகைமைகள் G.C.E. சாதாரண தரம் அல்லது உயர்தரம்

வசதிகள்: இன்ரநெட் தொடர்புகள், நூலக வசதிகளுடன் சகல வசதிகளும் கொண்ட கணனிக்கூடம்.

TAFE டிப்ளோமா பட்டம் பெற்றவர்கள் அனேகர் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகங்களில் கலைமானி பட்டப் படிப்பைத் தொடர நேரடியாக இணைந்து கொள்ளலாம். அத்துடன் ஒன்றரை வருட காலத்திற்கு கடன் வசதிகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

வகுப்புகள் ஆரம்பமாகும் தினம்: 02 ஒக்டோபர் 2003

மேலதிக விபரங்களுக்கு:

பட்டப்பின் படிப்பு கல்விப் பிரிவு:

IDM

The Nation's I.CT Academy

IDM Computer Studies (Pvt) Ltd.

490, டுப்ளிகேஷன் வீதி, கொழும்பு 03, தொ.பே: 2554993-4

பெக்ஸ்: 2554995 ஈ-மெயில்: pgd@idm.lk